திருமகள் நிலையம்

ஞானபீடம்



நா. காமராசன்

"ஞான பீடம்"

கவிஞர் நா. காமராசன்

திருமகள் நிலையம்
55. வெங்கட் நாராயணா ரோடு
தி.நகர், சென்னை-600017.

முதற்பதிப்பு செப்டம்பர்—1986

விலை : 11-00

அச்சிட்டோர் :
ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்
12, கஜபதி தெரு, சென்னை-5.

பீடம்

இனிய நண்பர்களே!

நான் 'கல்கி' இதழில் எழுதிய கட்டுரைகளும், 'சாவி' யில் வந்த எனது நெடுங்கதையும், சென்னை வானொலியில் ஒலிபரப்பான இரண்டு கவிதை நாடகங்களும் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

எனது கலையுலக ஆசான் அமைச்சர் ஆர். எம். வீ. அவர்களின் முன்னுரை நூலை அழகுபடுத்துகிறது.

திருமகள் நிலையத்தார் நூலைச் சிறப்பாக வெளியிட்டுள்ளனர்.

இருபத்தைந்து புத்தகங்களைத் தாண்டி—இப்போது இரண்டு படைப்புகள் வெளிவருகின்றன.

இடையில் மூன்றாண்டுக்காலம் நான் முற்றாகவே எழுத்துத் துறையை விட்டு ஒதுங்கியிருந்தேன்.

தமிழகத்தின் தலை சிறந்த மேடைப் பாடகர் பாவலர் வரதராஜனின் நினைவு நாளை—இளையராஜா சகோதரர்கள் நடத்தியபோது நான் அந்த விழாவில் பேசினேன். அந்தப் பேச்சுதான் மறுபடியும் எனக்குப் புது வாழ்வு தந்தது. விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் அண்ணன் ராசாராம் அவர்கள்—முழுக்க முழுக்க எழுத்துத் துறையில் ஈடுபடுமாறு என்னை வற்புறுத்தினார். இன்னிசைச் சக்கரவர்த்தி இளையராஜா அவர்கள்—முதுகில் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தி—குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகத் திரைப்படப் பாடல்களை நிறைய எழுதுங்கள் என்று அறிவுரை கூறி ஆதரித்தார்.

காவல்துறை ஐ. ஜி. ஸ்ரீபால் அவர்கள் "தடைகள் யாருக்கும் வரும். தடைகளை உடைத்தெறிபவனே

தலைவனாக முடியும்'' என்று கூறி என்னை வேகமாகச் செயல்படவைத்தார். இவர்களுக்கெல்லாம் எனது நன்றி.

மங்கலம் மிகுந்த தமிழ்ப் பண்புகளின் பெட்டகமாகத் திகழும் எனது அண்ணியர்கள்—ஜீவா இளையராஜா, சகுந்தலா மெய்யப்பன் இருவரும் எனது உடன் பிறந்த சகோதரிகளைப் போல எங்கள் குடும்பத்தினரை நேசித்து எனது துன்ப நாட்களில் அன்பு மழை பொழிந்தனர். அவர்களுக்கும்—சோதனைக் காலத்தில் குடும்ப நிர்வாகத் திறமையால் என்னைக் காப்பாற்றிய எனது மனைவிக்கும் வார்த்தைகளால் நன்றி சொல்ல முடியாது.

மாணவப் பருவத்திலிருந்து 20 ஆண்டுகள் அரசியலில் உழன்ற எனக்கு—இந்தப் புத்தகம் உருவாகும் நேரத்தில் அரசியல் அங்கீகாரம் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களை வணங்கு கிறேன்.

எனது எழுத்துப் பணி தொடரும். இனி வரும் நாட்களிலும் தமிழுக்கு மகத்தான அலங்காரங்களைச் செய்வேன். அன்புக்கு நன்றி.

அன்புள்ள

நா. காமராசன்

8—8—86

இராம வீரப்பன் தலைமைச் செயலகம்
செய்தி அறநிலையத் துறை சென்னை-600 009
அமைச்சர்

அணிந்துரை

கவிஞர் நா. காமராசன் "கறுப்பு மலர்கள்" என்ற புதுக்கவிதைக் காவியம் படைத்ததின் மூலம் தமிழ் மக்களின் பாராட்டினைப் பெற்றவர். இவருடைய 'கறுப்பு மலர்கள்' வெளிவந்த பிறகுதான் தமிழ்க் கவிதை உலகில் ஒரு புதிய நடையே ஏற்பட்டது. 'புதுக்கவிதையின் ஆசான்' என்று இவரைப் பலர் பாராட்டினாலும், இவர் இன்னும் மரபுக் கவிதையின் மாணவனாகவே இருக்கிறார். திருவள்ளுவரையும், சங்கப் புலவர்களையும், இளங்கோவையும், கம்பனையும் வணங்குகிறார். திரைப்படக் கவிஞராகவும் அறிமுகப் படுத்தப்பட்டு, இன்று புகழேணியில் ஏறி நிற்பவர். தமிழக அரசு ஆண்டுதோறும் சிறந்த கவிஞர்களுக்கு வழங்கி வரும் 'பாவேந்தர் விருதினையும்' பெற்றவர். இவருடைய புகழுக்குப் புகழ்சேர்க்க மற்றுமொரு சிறந்த இலக்கியப் படைப்பாக மலர்ந்து இருப்பதே இந்த "ஞானபீடம்" எனும் நூலாகும்.

இரு சிறந்த கவிதை நாடகங்கள், கவிதையைப்போல் கருத்தாழம் கொண்ட பதினாறு சிறுசிறு உரைநடைப் பகுதிகள்—இவற்றின் தொகுப்பாக வெளிவந்திருக்கும் இந்த "ஞானபிடம்" மக்களின் இதய பீடங்களை வெற்றி கொள்ளும் விதத்தில் படைக்கப்பட்டிருக்கின்றது.

"கேட்டனவெல்லாம் கொடுக்கவல்லது கற்பக விருட்சம்; ஆனால் அந்தக் கற்பக விருட்சம் கவிதையைப் படைக்கவும், கொடுக்கவும் வல்லது அன்று. ஆகவே கற்பக விருட்சத்தை விட, கவிதையைப் படைக்கவல்ல கவிஞனே சிறந்தவன்" என்ற கவிஞர் காமராசனின் கருத்து கற்பனையானாலும் அற்புதமான கருத்து.

"நான் ஏன் எழுதுகிறேன்" என்பதை விளக்கவரும் கவிஞர், கவிதைச் சுவைமிக்க நடையில் கவிஞர்களின் ஏற்றத்தைப் படம் பிடிக்கிறார். கவிஞர்கள் உலகத்தின்

கடந்த கால அனுபவங்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்பு கிறவர்கள்; அவர்கள் மென்மையானவர்கள். மனப்பூர்வ மான மன இரக்கம் உடையவர்கள்; தமது இளம் வெப்பத் தால் சமூக முயற்சிகளின் கருவையெல்லாம் சூடேற்றும் சூரியனும் அவர்களேதான் என்று கவிஞர்களுக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிக்கின்ற கவிஞர் காமராசன், அத்தகைய கவிஞர்களை அன்போடு அணைத்துக் கொண்டு, அவர்களில் ஆசை அபிலாஷைகளை வெளி யிடவே, தாமும் தம்முடைய எழுத்துப் பணியைத் தொடர்ந்து கொண்டிருப்பதாகக் கூறுவது, அவருடைய வித்தியாசமான உள்ளத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது.

தம் கவிதை உள்ளத்தால் பெரும் பேரரசர்களை – சக்கர வர்த்திகளை நாடு வெறிபிடித்த கயவர்கள் என்று கவிஞர் காமராசன் சாடுவது உணர்ச்சி மிக்க ஒரு பகுதி, போரை வெறுத்துச் சமாதானத்தைப் பாராட்டும் அவரே "ஒரு போர் வாள் உறங்குகின்றது" என்ற தலைப்பிட்டு, இலங்கைத் தமிழர் கண்ணீரைத் துடைக்கக் கனவைக் கொட்டுவது, அர்த்தமுள்ள ஆவேசத்தின் மறு பகுதி. தம் கண்ணீரைக் கொண்டே இலங்கைத் தமிழரின் துன்பத்தைத் தீட்டியிருக்கும் கவிஞர் காமராசன், இலங்கைத் தமிழர் களுக்குத் தூக்கமற்ற நெடிய இரவுகளைக் காணிக்கை யாக்கி இருப்பதை இந்நூலில் காணுகின்றோம். விடியாத இரவாக—முடியாத துயராகத் தொடர்ந்து கொண்டிருக்கும் நம் இலங்கைத் தமிழர்களின் இன்னல், ஒரு நல்ல முடிவினை—விடிவினைக் காணப்போகும் நேரம் இனியும் தூரத்தில் இல்லை என்பதைத்தான், இந்நூலில் வரும் உரைநடைப் பகுதிகள் பல நமக்குக் காட்டுகின்றன.

இந்நூலில் கவிஞர் படைத்துள்ள இரு கவிதை நாடகங் களில் "ஒரு கிராமத் தேவதையின் வெளிநடப்பு" என்ற நாடகம் ஒரு காதல் காவியமாக மலர்ந்துள்ளது. அந்தக் காதல் காவியம் நடைபெறும் கிராமத்தின் அழகைக் கவிஞர் ஓவியமாகத் தீட்டிக் காட்டுகிறார். நிழல் வீடு போல்

தென்னந்தோப்பு—நுரை சதங்கைக் கட்டி ஆடிக் கொண்டே ஓடும் அழகிய நதிப்பெண்—துறவிகள் குடும்பம் நடத்துவது போல் மழையில் விளைச்சல் காட்டும் செம்மண் நிலம்—இங்கே வீசும் காற்று மந்திரம் சொல்லும் இதயம்—இங்கே குடியிருந்தால், சொர்க்கம் அங்கே குடியிருக்கும்—என்றெல்லாம் கவிஞர் காட்டும் காவியக் கிராமத்தின் அழகைக் காண நமக்கு கவிஞனின் கற்பனைக் கண்கள் வேண்டும். மிராசுதாரின் அந்தஸ்து வெறியால், காதலனை அடையமுடியாமல் தன்னைக் கயிற்றில் சுருக்கிட்டுக் கொண்டு, ஜானகி என்ற கிராமத் தேவதை வெளிநடப்பு செய்திருப்பதை விவரிக்கும் அந்தக் குறுங்காவியம்— பெருங்காவியமாகக் கவிஞரால் விரிவு படுத்தப்பட வேண்டும் என்ற என் விருப்பமே, நூலைப் படிக்கப் போகும் எண்ணற்ற வாசகர்களின் விருப்பமாகவும் இருக்கும் என்பது என் நம்பிக்கை.

இந்நூலின் இறுதிப்பகுதியாகத் திகழ்வது ''தேவலோகத்தில் ஒரு தமிழ்க்குயில்''. அந்தக் கற்பனைச் சிறப்பு மிகுந்த கவிதை நாடகத்தின் நாயகன் மகாகவி பாரதி. கவிஞன், இருந்தாலும் மக்களுக்காகப் பாடுவான், அவன் இறந்தாலும் மக்களுக்காகவே பாடுவான். அப்படியிருக்க அமரகவி பாரதியார் மட்டும் தேவலோகத்தில் எப்படி ஓய்ந்திருப்பார்? அவர் பாரத நாட்டு மக்களின் நன்மைக் காகப் பாரதத்தாயை, கண்ணனை, தமிழன்னையை, பாஞ்சாலியை, கடவுளைச் சந்தித்து உரையாடுவதாக கவிஞர் காமராசன் கற்பனைச் சிறகடித்துப் பறக்க, நமக்கு நல்லதொரு கவிதை நாடகம் கிடைக்கிறது. அதிலேதான் நம் கவிஞரின் சிந்தனைத் திறமெல்லாம் விரிகின்றது, ஒளிவீசிச் சிறக்கின்றது. கவியரசர் கண்ணதாசனுக்குப் பிறகு கவிதை—உரைநடை இரண்டிலும் வெற்றி பெற்ற கவிஞர்களில் இவர் முதலிடத்தில் இருக்கிறார். ''ஞான பீடம்'' என்கிற இந்த உரைநடைத் தொகுப்பு ஆழமான சிந்தனைகளை உள்ளடக்கியது.

மா, பலா, வாழையெனும் முக்கனிகளையும் உண்டு சுவைத்ததைப் போன்ற உள்ள நிறைவினை, மூன்று பகுதி களாக விளங்கும் இந்த "ஞானபீடத்தை" படிப்பவரும் பெறுவார்கள் என்பது உறுதி. கவிஞர் காமராசன் இந்த ஞானபீடத்தைப் படைத்ததோடு நின்றுவிடமாட்டார். இந்திய நாட்டின் பெருமைமிக்க ஞானபீடப் பரிசைப் பெறும் விதத்திலும் அவருடைய கவிதைப்பணி—இலக்கியப் பணி தொடர வேண்டும். உலகத்தின் சிகரத்தை அவர் புகழ் தொட வேண்டும் என்ற என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து அவரை என் நெஞ்சார வாழ்த்துகிறேன்.

அன்புள்ள

இராம. வீரப்பன்

சென்னை
18—3—86

"ஞான பீடம்"

---

1. அந்த சூரிய வெளிச்சத்தைக் காதலிக்கிறேன்!

இந்த தேசத்தின் தெருக்களில் வீசும் காற்று நான் அறிந்த விதத்தில் வீசுகிறது. இங்கு பாயும் ஒளிப்பின்னல்கள் எனக்குப் பழக்கமானவை. இதயம் மலர்வது மலைப்பகுதியோ—வயலும், புல்வெளியும் சேர்ந்த சிறிய பாதையோ— எதுவானாலும் இது என் நாடு. மலையின் இசையை அறிந்தவன்—அதன் எதிரொலிக்குச் செவிசாய்ப்பவன்—(கிராமபுறத்தின் இனிமையை உணர்ந்தவன் தனக்குச் சொந்தமாக ஓரடி மண் கூட இல்லா நிலையிலும் தாய் நாட்டை நேசிக்கிறான்.)

காலத்துக்கு ஒவ்வாத-உயிரோட்டத்திற்கு உண்மையாயிராத பல சிற்பக் கட்டடக் கலைச் சீரழிவுகள் இந்நாட்டில் உள்ளன. சோலைகளிலும், பொது இடங்களிலும் சிலை உருவங்கள் நமக்கு பயமூட்டுகின்றன. பலவீனங்களின் எல்லைக் கோடுகளையும் தாண்டி—இதன் புகழிடத்தில் இதயப் பிரவேசம் நடக்கிறது.

இங்கே எத்தனையோ காட்சிகள் இருந்தாலும்—புகைப் படக்காரர்களின் கண்களுக்குத் தப்பிய ஒரு குக்கிராமத்து

மூலையில், நிழல்படர்ந்த தோப்பில் ஒரு 'சிறிய இந்தியாவின்' தோற்றம். அதுதான் இந்த மண்ணின் ஆத்மா.

மத்திய இந்தியாவோ—வட இந்தியாவோ அங்கு இதயத் துடிப்பை ஆட்சி மொழியாக்கி விட்டால் ஒரு தேசம் உருவாகிறது.

மரங்களைத் தொட்டுப் பார்க்கிறேன். கடற்காற்றின் வாசனையில் கனவு காண்கிறேன். வீட்டு உச்சிகள் மீது விழும் சூரிய—வெளிச்சத்தைக் காதலிக்கிறேன். ஏனென்றால் இது என் தேசம். இங்கே—பல்வேறு முரண்பாடுகளுக்கு மேலாக அசைக்க—முடியாமல் உறுதியாகக் கொடியில்லாமல், கொட்டு முரசு இல்லாமல்—உணர்ச்சி வெறிக்கு அப்பால்—வாளின் துணையில்லாமல் நிலைத்து நிற்பது—எங்கள் தந்தையர் நாட்டிடம் நாங்கள் கொண்டுள்ள ஆழமான அமைதியான அன்பு.

2. அன்னியர்கள்

மக்களின் பாமரத் தன்மைக்குத் தீனி போடுவதன் மூலம்—தங்களுக்கு ஒரு தனித்தன்மையை வளர்த்துக் கொண்டு அதன் மூலம் சில சலுகைகளையும் பெற நினைக்கும் கலைஞர்களும் உண்டு. எந்த இடத்திலும் அவர்களுக்குத் தனி இடவசதி தேவைப்படுகிறது. இலக்கியத்திற்குள் இலக்கியம்—தேசியத்திற்குள் தேசியம் அவர்களுக்காக உருவாகிறது.

மக்களோடு பழகாமல் ஒதுங்கி இருப்பதோடு—அவர்களைக் கண்டாலே வெறுப்பு. அவர்களிடத்தில் ஓர் ஏளனப் போக்கு—இதனால் வளரும்—தற்பெருமை இவற்றின் சின்னமாக அவர்கள் மலர்கிறார்கள். தங்களது—தற்பெருமையைக் கூட "கவர்ச்சி மிகுந்த கர்வம்" என அழைத்து சுயமோகத்திற்கு மனசிலே சிம்மாசனம் போடுகிறார்கள்.

கலைஞனின் தனித்தன்மை என்பது, பொது மக்களின் சராசரித் தன்மை சூடிக் கொள்ளும் சமுதாய மலராக அவர்களோடு ஒத்துப் போக வேண்டும். தன்னைப்பற்றி மட்டும் அக்கறைப் படுவதே தனித்தன்மை என்று ஆகிவிடக் கூடாது. கற்பனை உலகத்தில் வாழ்கிற அவர்கள் ஒரு தவறான கணிப்பை உருவாக்கி—விடுகிறார்கள். கலைஞன் வாழ்வதாகவும்—பொது மக்கள் வாழ்வதாகக் கற்பனை—செய்து கொள்வதாகவும் நிஜத்திற்கு—மூடு திரை போடுகிறார்கள்.

உலகத்தை இகழ்ந்து குறுகிய— மனப்பான்மையோடு பிறரோடு ஒட்டாமல் வாழ்ந்து அந்நியர்கள் ஆகின்றனர்.

பொது மக்களோடு கலக்கும் போது தமது திறமைகள் கரைந்து போய் விடுவதாகக் கூட அவர்கள் சொப்பனா வஸ்தைப் படுகிறார்கள்.

அந்தக் கற்பனை உலகவாதிகள் ஒற்றுமை உள்ளம் இல்லாத பிரிவினை வாதிகள். இத்தகைய பிரிவினைக்—குழுக்கள் எப்போதும் மனித இயல்பின் எல்லைக் கோடுகளைத் தாண்டிய-நெறி பிழன்ற அழுகிப்போன இலக்கியங்களையே படைத்துள்ளன.

வெட்கத் திரையை வி க்கி—இலக்கிய உலகில் அற்பச் செயல்களைத் திறந்த சந்தைப் பொருளாக்கியதும் அவர்களே. இலக்கியத்தின் மூலம் ஆபாசத்தைத் தேட மக்களுக்குக் கற்றுத் தந்ததும் அவர்களே!

3. மனப்புயல்

நாகரீகமற்ற வாழ்க்கை—முறையைக் கொண்டிருந்த சமுதாய அமைப்பில், வெற்றியால் அடக்கி ஆள்வோரை மக்கள் புகழ்ந்தனர். இரக்கம், நீதி, இனிமை போன்ற எல்லாப் பண்புகளை விடவும் வீரம் மேலானதாகக் கருதப் பட்டது வீரனின் தனிப்பட்ட குணநலன்கள் கூட—நிராகரிக்கப்பட்டு உலகத்தை—அழிக்கும் குரூர உணர்ச்சி களைக் கிளரிவிடும் வெறும் வீரமே ஆராதிக்கப்பட்டது.

பிறருடைய துன்பத்திலும், அழிவிலும் ஒருவனின் பேராண்மை வளருமெனக் கருதப்பட்டது. புகழ் அடை பவன் மக்களை மகிழ்ச்சி யற்றவர்களாக மாற்ற வேண்டு மென விதி வகுக்கப்பட்டது.

சர்வாதிகாரம் கொடிகட்டிப் பறந்த கால கட்டத்தில்—நாடு பிடித்த மன்னர்கள்—புதிய நாடுகளின் வருகையால் தாய் நாட்டில் வளத்தைப் டங்கிடவேண்டிய சோதனையை ஏற்ருர்கள்.

அவர்கள் வென்ற பல நாடுகளை அவர்கள் அறிய மாட் டார்கள். அங்கே சென்று வந்த தளபதிகளை மட்டுமே அவர்கள் பார்த்திருந்தனர்.

வெளியுலக ஆரவாரங்களின் மூலம் பெறப்பட்ட வெற்றியைக் கூடக் கற்பனை உலகில் மட்டுமே சந்தித்த—கனவுலக சஞ்சாரிகள் அவர்கள். (தாம் வென்ற நாடு களின் பெயர்களைக் கூட நினைவில் வைத்துக் கொள்ள முடியாதவர்களே சக்ரவர்த்திகள் ஆயினர். ஆக பெரும் புகழ் வெறி அவர்களைச் சிறிய மனிதர்கள் ஆக்கியது.)

வென்ற நாடுகளின் வளங்களை எல்லாம் அவர்கள் அழித்தார்கள்—இது உலகத்தின் புனிதத்தை யெல்லாம்—காலடியில் போட்டு மிதிக்கும் செயல் அல்லவா? இவனை விடவும் வலிமை பெற்றவன் ஒருநாளில் இவனை – வெற்றி கொள்ளக் கூடும்.

(போர்வெறியும்—ஆதிக்க உணர்வும் சரித்திர வீதியில் அமைதியற்ற மனப்புயலையே உருவாக்கியுள்ளன. முதலில் பெரு வெற்றி பெறும் ஆதிக்கம் இறுதி வெற்றியைச் சமாதானத்திடம் ஒப்படைத்துவிட்டு உறங்கப் போய் விடுகிறது.)

4. அவர்கள்!

உணர்ச்சி இல்லாதவர்களாகவும் உண்மையான நட்பிற்கு அருகதை யற்றவர்களாகவும் அதிகாரத்தில் இருப்பவர்கள் மாறி விடக் கூடாது. ஏனெனில் முற்றாகவே அவர்கள் குண முரண்பாடுகளால் வார்க்கப் பட்டவர்கள். இளம் நாட்களில் அவர்களுக்குக் கல்வி மறுக்கப் படலாம். குழந்தைப் பருவம் தொட்டே அவர்கள் முகஸ்துதியால் சின்னா பின்னப் படுத்தப் படுகிறார்கள். எதிலும் வரம்புகளுக்கு வெளியே வளர்கிறார்கள்.

மக்களில் ஒருவருடைய உதவி மற்றொருவருக்குத் தேவை என்பதையும், போராடும் நிமிஷங்களில் தனிமைப் படுத்தப் படுவதே ஒரு தோல்வி என்பதையும்—அவர்கள் கடைசிக் காலத்தில்—தங்கள் அஸ்தமன வேளையில் தான் உணர்கிறார்கள்.

அவர்கள் விமர்சனங்களின் சுயதரிசனம் காணும் வேளைகளைத்— தவிர்ப்பதால் நண்பர்கள் கூட—அவர்களுக்கு அந்நியமாகிறார்கள்.

சுய மோகம் சுய விமரிசனத்திற்குத் தடைக் கல்லாக மாறுகிறது. கருத்த முகத்திரைகளும், இருள் வழிகளும் கோட்டை கட்டுகின்றன. அவர்களைப் பற்றிய வெளியுலக விளம்பரங்கள் சாத்தானை தேவனாக்கிய கதையே.

ஆட்சி பீடமேறிய ஒவ்வொரு தலைவனின் வரலாற்றை எழுத ஆதாரங்களைச் சேகரிக்கும் போதும்—ஒரு படைப்பாளி மகாபீட்டரின் வரலாற்றை—எழுதப்போன டால்ஸ்

டாயின் அனுபவத்தையே பெறுகிறான். காளிதாசன் பாடிய தைப் போல் நிலவின் களங்கம் அதனுடைய அழகை மறைப்பதில்லை. அதைப் போல அவர்களது பலவீனங்கள் வெற்றிகளை வழிமறிப்பதில்லை.

(பதவிக்குப் போகிறவர்கள் முள் கிரீடம் சுமப்பதாக யார் சொன்னது? அவர்கள் நமக்கு முள் கிரீடம் சூட்டி விட்டு (எல்லோரும் இந்நாட்டு மன்னர்:) ரோஜாப் படுக்கையில் உறங்கப் போய் விடுகிறார்கள்).

5. காலக் கிழவனும்-
குழந்தைகளும்

இரவு—இருண்ட இரவு. மலைகளுக்கு நடுவில் ஒரு தொட்டிலைக் கண்டேன். அதனுள்ளே உயிரோட்டமுள்ள மனிதகுலம் கிடந்தது. மலைகளில் ஒன்றில் காலக் கிழவன் அமர்ந்து—தொட்டிலை ஆட்டிக்கொண்டிருந்தான். அந்தக் குழந்தைகள் தூங்கட்டும் என்று ஒரு பாசுரம் பாடிக் கொண்டிருந்தான். வான முகட்டில் ஒரு நட்சத்திரம்—ஒளிவீசத் தொடங்கியது. அவன் மேலேறி அதை அணைத்து விட்டான். மினு மினுக்கும் அழகான ஒளிக்கதிர்கள் குழந்தைகளின் கண்களில் பட்டுவிடக் கூடாதென அவன் நினைத்தான். அவன் எல்லா நட்சத்திரங்களையும்—அணைத்து விட்டான். எங்கும் ஒரேஇருள். புதை குழியில் இருப்பதைப் போன்ற அமைதி நிலவுகிறது.

மிகத் தொலைவிலிருந்து மேகங்கள் வந்தன, ரோஜா வண்ணமுடைய கனவுகளைச் சுமந்து கொண்டு. சுதந்திரத்தையும் அனைத்துலக நேசத்தையும் போற்றும் பாடல்களை மேகங்கள் இசைத்தன. குழந்தைகள் பாடல்களைக் கேட்டபடி—அசைந்து கொடுத்துப் புன்முறுவல்—பூத்தன. பாடல்கள் மிக இனிமையாக ஒலிக்கத் தொடங்கின. குழந்தைகள் விழித்துக் கொண்டு ரோஜா வண்ணமுடைய கனவுகளை நோக்கித் தம் கைகளை நீட்டின. காலக் கிழவனுக்குக் கோபம் வந்து விட்டது. குழந்தைகளைத் தொட்டிலில் போட்டுக் கட்டினான். சில பழைய மனிதர்களை அழைத்தான். அவர்கள் நீண்ட கருத்த

உடைகளை அணிந்து முகங்கள் இருண்டு—தோற்றம் காட்டினார்கள். மேகங்களைத் துரத்தி விட்டு—அவர்கள் குழந்தைகளைத் தூங்க வைத்தார்கள்.

கண்களை இறுக மூடிக்கொண்டு குழந்தைகள் தூங்கின. அந்த மேகங்களைக் கனவுகளில் தரிசனம் செய்தன. இதைஅறியாமல் காலக் கிழவன்—தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தான்.

6. அந்தப் புள்ளிகளை அழித்து விடாதீர்கள்!

ஆத்மாவின் மூலத்திலிருந்து வரும் இதமான வெப்பத்தை உணர்ந்து சில நேரங்களில் நீங்கள் வியப் படையக்கூடும். ஒரு நோக்கம் உருவானால் அதுவே—துணிச்சலுக்கான நியாயமும் சமாதானமும் ஆகிவிடுகிறது. ஏற்றுக் கொள்வதையும் மறுப்பதையும் கூட உணர்ச்சி வசப்படாமல் நிறைவேற்ற முடியும். ஒவ்வொரு சமயம் மூட நம்பிக்கைகளின் மூடுபனியில்—போர்த்தப்பட்ட இதயத் தீவில் உலகின் கதிரவனையே இழந்து விடுகிறீர்கள். இன்பங்கள் முழுவதும் நொறுங்கி—விலகி ஓடி அலைந்து நிலையான—தன்மையற்றுப் புள்ளிகளாய்ச் சிதறுகின்றன.

எந்தக் கருத்தையும் குழப்பத்தோடு ஏற்கும்போது—இயற்கை கூட உங்களருகே வெறும் சவமாய்க் கிடக்கிறது. உருவமற்ற முடிவற்ற காலவெளியின் கொடுமையான இரும்பு முகமூடியைப் பிரபஞ்சம் அணிந்து கொள்கிறது. நெருக்கடி நிலையில் தத்துவ வாதிகள் கூட அடித்தளத்தையும், சாக்கடைகளையும் தோண்டும் தினக் கூலிகளாக மாறிவிடு கின்றனர். முரண்பாடுகள் இல்லாமல் அழிவற்ற அமைதியைத் தேடி வாழவேண்டும்.

'நான்' என்னும் ஆணவத்தின் ஒளி வீசும் பனித் துளியை—இந்த வாழ்க்கை மலரின் ஒரு சின்ன இதழ் மீது வீசி சூரிய வெளிச்சத்தில் கரையச் செய்யும் நிர்ப்பந்தம் அனுபவத்தால் ஏற்பட்டு விடுகிறது. உறக்கம் கனவுகள் மீதும் இருள் படர்த்தும் வேளையில் மறுபடியும் விழிப்பு வருகிறது.

சில நேரங்களில் நினைவுகள் மின்மினிப் பூச்சிகளைப் போல் விளையாடுகின்றன. பறந்து பறந்து காற்றில்—ஊஞ்சலாடும் இந்தப் புள்ளிகளை அழித்து விடாதீர்கள். வானத்தின் கண்ணாடியாக வாழ்க்கை என்னும் ஆறு, பாதாளக் குழிகளில் சிக்கிக் கொள்ளாமல் தப்பி ஓடும். உச்சிக்கு நம்மை அழைத்துச் செல்லும் கனவுகளை இழந்து விட்டால்—அந்த இடத்தை வேறென்ன நிறைவு செய்ய முடியும்?

7. ஒரு போர்வாள் உறங்குகிறது

சமாதானத்திற்கின நமது ஏக்கங்கள் மறைந்து விட்டன. வாழ்வா? சாவா? என்பதை நிர்ணயம் செய்யப் போகிற யுத்த காண்டத்தில் நம் சகோதரர்கள்—நிராயுத பாணிகளாக நின்று கொண்டிருக்கிருர்கள்.

நான் சித்தப் பிரமை கொண்டவனின் நிலையில் இருக் கிறேன். அந்தப் பத்திரிகைத் தாள்களைச் சுற்றி வந்த கதிர்கள் என் மூளையில் பாய்ந்துவிட்டன. நீரூற்றுக்களைக் கூட இந்த வெப்பத்தாக்கு பாதித்து விடும்.

(ஒரு கரத்தில் "தம்மபதத்தையும் மறுகையில் துப்பாக்கி யையும் ஏந்திக் கொண்டு அவர்கள் நமது தோழர்களை வேட்டையாடினார்கள். மனிதர்களின் உடல் மூட்டுக்கள் கழற்றப் பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு ஒரு இனப்படு கொலை நடந்தது. வயல் வெளிகளில் இளம் காற்றில் பயிர்கள் அசைந்தாடும்போது அவற்றோடு ரத்தக்கறை படிந்த தியாகப் போர் வீரர்களின் தலைகளும் அசைந்தாடு வதைப் போல மர்மமாகப் புலப்படும்.)

வானம்பாடிகள் கூட வஞ்சினம் தீர்க்கும் வெறியோடு நீள் அதிர் குரலில் பாடும்.

(இலங்கையைப் பற்றிய சோக மயமான நினைவுகளுக்கு எனது தூக்க மற்ற நெடிய இரவுகளை நான் காணிக்கை ஆக்கிக் கொண்டிருக்கிறேன்.

18

இப்படிச் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை.

இந்தியாவில் தமிழர்கள் மட்டும் தான் இரண்டாந்தர குடிமக்களாக மதிக்கப்படுகிறார்கள். எதைச் சொன்னால் என்ன? (இந்தியாவின் போர் வாள் இன்னும் சமாதான உறைக்குள்ளேயே உறங்கிக் கொண்டிருக்கிறது.

உறங்கட்டும்... ஆனால் ஒரு எச்சரிக்கை—இந்தியாவின் உறக்கம் தொடர்ந்தால் தமிழர்கள் விழித்தெழுவார்கள்!)

8. நாடக ராஜாக்கள்!

பொய் முகம் சுமந்த ஒரு—சமூகத்தின் எல்லாத் தரப்பினரும் மனச்சாட்சியின் சுயபலமும், தொலை நோக்கப் பார்வையும் நொறுங்கிச் சிதறும் அழிவுப் பதையில் நடைபோடும் காலம் இது. காமமும், கொலை வெறியும் இலக்கிய உருவம் காட்ட...நமது இதிகாசங்களில் மட்டும் மிகப் பெரிய புனித வார்த்தைகளைப் பழைய நாணயங்களைச் சேகரிப்போரைப் போலச் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிறோம்.

நம்பிக்கையின் வளமான—செல்வத்தை அளிக்கும் உணர்ச்சி செறிந்த ஓரிரு நிமிடங்களைக் கூட நாம் வாழ்வில் சந்திக்க நேரிடுவதில்லை. இங்கு அனைத்தும் அமைதியாக இருக்கிறது. உண்மையில் நன்மை எது என்பதையும் அவர்களின் உரிமைகளையும் மக்களுக்கு யார்தான் உணர்த்துவது? அரசியல் அறிவுக்குறைவும். அப்பாவித் தனத்தின்—அதிகரிப்பும் நிரந்தரத் தன்மை பெற்றுவிட்டன.

ஆனால் சிந்தனையில் கனிந்துள்ள சித்தாந்தம் ஆதி சரித்திரத்தின் போர்க்குணமும் உயிர்ச் சேதமும் இல்லாமல் செயல் வடிவம் பெறும் நாள் தன் வரவு கூறும் போக்கு—தெரிகிறது.

பொது மக்களிடையே பொங்கி எழும் ஆர்வப் பெருக்கு வெறும் தேசீயத் திருவிழாக்களைக் கொண்டாடுவதோடு இனி அடங்கிவிடாது.

ஒரு புரட்சியின் முடிவில் எதிர்ப்புரட்சி தோன்றுவதை விட புதிய அமைப்புக்களின் செயல்பாடு தொடர்வதே சமூக

விஞ்ஞானத்தின் பரிசோதனைச் சாலை—முடிவாத வேதனைகளைத் தாங்கிக் கொண்டு போராடிய நமது முன்னோர்கள் நமக்காகப் பலவற்றை இழந்தார்கள். நாம் அவர்கள் உருவாக்கிய பொற்காலத்தையே இழந்து-விட்டோம். ஆனால் இனி வரும் இளைய தலைமுறை நாடக ராஜாக்களை—அனுமதிக்காது. அது நடைபாதை—வாசிகளுக்குக் கிரீடம் சூட்டும்.

9. போராட்டம்...?

இயற்கை—பிறர் வழிகாட்ட வேண்டிய நிலையிலிருந்து மனிதனை விடுவித்து நீண்ட நெடுங்காலம் ஆகிவிட்டது. பிறர் வயப்படுதல் சோம்பலின்-காரணமாகவே உருவாக்கம் பெறுகிறது. மனம் பருவ முதிர்ச்சியை எய்தாததும்—காரணமாக அமைகிறது.

நமது சுகாதாரத்தை ஒரு மருத்துவரும் எனது அறிவை ஒரு புத்தகமும்—எனது நன்மை, தீமைகளை மதங்களும் முற்றாகவே நிர்ணயம் செய்கிறபோது—நாம் வாழ்கிறோம் என்று சொல்வதே பொய்யாகும்.

சிலர் தகுதிகளை சுயபலமாக வளர்த்துக் கொள்வதில்—பல கட்டங்களில் தோல்வி நேரக்கூடுமென்ற அச்சம்—இதற்காகப் பிறர் துணை நாட வைக்கிறது. ஒரு சிலர் தாம் பெற்ற தகுதி-தொடக்க நிலை வளர்ச்சியிலுள்ள பலரையும்-அடிமையாக்குவதன் மூலமே பரிபூரணத் தன்மை பெறுவதாகக் கருதுகின்றனர். இந்த எதிரெதிர் மன உலகங்களால் இயற்கையாகவே—சமூக ஓட்டத்தில் ஆண்டானும், அடிமைகளும் உருவாகிவிடுகின்றனர்.

பிறர் வயப்பட்டு வாழ்பவன்—தன்னை முழுமையாக வளர்த்துக் கொண்ட பிறகு கூட—அந்த வளையத்திற்குள்ளேயே அடங்கி விடுகிறான். காலம் முழுவதும் அதை விட்டு வெளியேறும் முயற்சியில்—அவனால் வெற்றி பெற முடிவதில்லை. குறுகிய பள்ளத்தைக் கூட தயக்கத்தின் காரணமாக அவனால் தாண்ட முடிவதில்லை.

ஆனால் சுதந்திரமான சிந்தனைகளாலேயே மனித குலத்தை வாழ வைக்க முடியும். மாபெரும் மக்கள் தொகுதிக்கு வழிகாட்டிகளாக இருப்போரில் பலர் சுய—சிந்தனையின் மூலம் வெற்றி பெற்றவர்களே. அடக்கு முறையைக் கூட ஒரு திடீர்—புரட்சியின் மூலம் வீழ்த்தி விடலாம். ஆனால் அறியாமையை எதிர்த்து பல வடிவப் போராட்டங்கள் காலங்கள் தோறும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. ஒரு முடிவுதான் இல்லை.

10. மரங்கள்

அவர்களுடைய முறையீடுகளை என் காதுகள் கேட்க விரும்பவில்லை. மீண்டும் நான் நிலமெங்கும் நிறைந்திருந்த மரங்களை நோக்கித் திரும்பிக் கொண்டேன். மரங்கள் ஒன்றையொன்று தள்ளி மோதிக் கொண்டு நகர்ந்தபடி இருந்தன. அவைகளின் அடியில் மனிதர்கள் குறைப் பிறவிகளாய்த் தோற்றம் காட்டினார்கள். ஒருவன் கையை இழந்தான்—இன்னொருவன் காலை இழந்தான்—மூன்றாமவன் தலையை இழந்தான். இந்த சேதாரங்களின் நிகழ்வு நிமிடத்தில் எல்லா மரங்களும் சேர்ந்து ஒரே மரமாக மாறி விட்டன. அதனுடைய உச்சியில் ஆணவம் அமர்ந்திருந்தது. அதன் கிளைகள் உலகம் முழுவதும் பரவிக் கவிந்திருந்தன.

வடக்கிலிருந்து வரும் வாடைக் காற்று கிளைகளினூடே வீசியது. மரம்—எல்லா சுமைகளும் காற்றில் பூமியின்மேல் சரிய—ஒற்றைத் தனிமையில் பளிங்கு போல் நின்றது.

காற்றின் இரைச்சலும், மரத்தின் தன்னழிவும் என்னைப் பாதித்தன. சிதறிக் கிடந்த சில புத்தகங்களே என்முன்—இருந்தன. கசிந்த கண்களோடு அவைகளை எடுத்துக் கொண்டு—நான் செல்லவேண்டிய வழியைக் காட்டுமாறு காலதேவனைப் பிரார்த்தித்தேன்.

காட்டை விட்டு விலகித் தப்பித்துக் கொண்டேன். நடந்து கொண்டே இருந்தேன். சமவெளிக்குக் கால்களால் ஆயிரம் முத்தங்கள் கொடுத்தேன். இரவு நேரத்தில் மரப்

பொந்துகளில் உறங்கினேன். பழக் கொட்டைகளை உணவாக்கிக் கொண்டேன். வயல்வெளிகளில்—கடுங் குளிரில் கதிர்களைக் கசக்கித் தானியங்களை எடுத்து—உண்டேன்.

வைகறைப் பொழுதில் பாதி எரிந்த நகரத்துக் கதவுகள்—விழுந்திருக்கக் கண்டேன். வீடுகளின் அருகே-பாதி உயரம் வரை குப்பைகள் கொட்டப்பட்டிருந்தன.

உயிருள்ள எதையும் நான் அங்கே காணவில்லை. தெருக்களில் மனிதப் பிணங்கள் சிதறிக் கிடந்தன. எதிரே ஒரு காவல் வீரன் வந்தான். அவன் என்னை பிடித்துக் கொண்டான். அவனுடைய தோழர்கள் வந்தனர். அவர்கள் என்னை முட்டாள் என்று கருதினார்கள். அவர்களை நான் சந்தித்திருக்கா விட்டால்—அவர்கள் என்னை முட்டாளாகக் கருதியது—சரியாகவே இருந்திருக்கும்.

11. ஊமைக்கனவுகள்...

(தேவைகளை நிறைவேற்ற ஒரு தொடர் போராட்டம் உருவாகி விட்டால் மனிதன் அலுத்துப் போகிறான். புற உலகம் அவனது நேரத்தைப் பறித்துக்கொண்டால் கற்பனை உணர்ச்சியோடு புதிய படைப்புகளை உருவாக்கத் தேவையான மன உலகப் போராட்டத்தை அவனால் நினைத்துப் பார்க்க முடியாமல் போய் விடுகிறது. அதற்குரிய வல்லமையை வறுமை அவனிடமிருந்து பறித்துக் கொள்கிறது. அடுத்த வேளைச் சாப்பாட்டைப் பற்றிய எச்சரிக்கை ஜீவனுள்ள மனமோகனக் கனவுகளை அப்புறப்படுத்தி விடுகிறது.)

கடுமையாகப் போராடுவதன் மூலமே தன் தேவைகளைப் பெறுவதில் வெற்றி பெறுகிற மனிதன்-அந்த நீண்ட போராட்டத்திற்குப் பிறகு—ஓய்வையே நாடுகிறான். மனத்தின் சிருஷ்டி வேலைகள் வெறும் ஊமைக் கனவுகள் ஆகி விடுகின்றன.

சூழ்நிலை—அவனது சுயசிந்தனைகள் மலர்வதற்கு அனுமதிக்காத போது அவன் மனமொம்பி—தனக்காகச் சிந்திக்கும் பொறுப்பை அடுத்தவர்களிடம் ஒப்படைத்து விடுகிருன் அல்லது வக்கரித்துப் போன பிறருடைய சிந்தனைகளின் இரண்டாந்தர, மூன்றாந்தர ரசிகனுகி விடுகிருன்.

(கருத்துக்களை அலசி ஆராய்வதைக் கூடக் கசப்பான பொறுப்பென்று விலக்கி விட்டு-கண்களை மூடிக் கொண்டு-வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்வை ஆளும்

சிந்தனைகளைத் தேர்ந்தெடுக்கிறான்.) இதற்கு மேம்பட்ட-தாகங்கள் நெஞ்சில் பரவும் போது—முன்னோர்கள் அளித்துள்ள சூத்திரங்களில்—விடுதலை வேட்கையையும், விழிப்புணர்ச்சியையும் நிறைவு செய்யத் தொன்று—தொட்டு—வழி வழியாக அவர்கள் அளித்துள்ள தாரக மந்திரங்களில் உறுதியான நட்பிக்கை கொண்டு, அவற்றை ஊன்றுகோளாகப் பற்றிக் கொள்ள ஆவேசத்துடன் துடிக்கிறான்.

(ஆகவே அறிவுத் தெளிவும், மனப்பக்குவமும் சமுதாய ஓட்டத்தோடு இணைவதற்கு...வறுமையை முதலில் ஒழிக்க வேண்டும். எந்தத் தத்துவமும் இதைச் செய்த பிறகே பேசப்பட வேண்டும்.

12. ஞானபீடம்

சமுதாய வாழ்க்கை என்பது மனிதனால் கண்டுபிடிக்கப் பட்டதல்ல; மாறாக—அது அவனுடைய இயல்பான, உள்ளார்ந்த தேவையின் நேரடியான விளைவாகும். மனிதர்கள் எங்கெங்கு—எந்தெந்தக் காலம் வரை இருக்கிறார்களோ அங்கெல்லாம் சமுதாயம் என்பது—இருக்கவே செய்யும். (சமுதாயத்தொடர்பில்லா தனிமை மரணத்திற்குச் சமமாகும்.)

மனிதனின் இயற்கை நிலையே சமுதாய வாழ்க்கைதான். தற்காப்பு உணர்வோடு இணைந்திருக்கும் சமுதாய உணர்வுதான் இயற்கையின் மிகச் சக்தி வாய்ந்த உணர்வாகும். நமது ஒழுங்கு முறைகளுக்கேற்ப—அந்த இயற்கையினிடமிருந்து பெறப்படும் தனி மனிதர்களின் சீரமைப்பான சமுதாயம் ஓர் இயற்கை விளைவே ஆகும்.

தனி வளர்ச்சி, இலட்சிய வேட்கை இரண்டிற்கும் சமுதாயம் ஆதாரமாகிறது. எந்த இலட்சியத்தை அடைவதற்குரிய வழிமுறையும் அதனால் உருவாக்கப்படுகிறது. இந்த உருவாக்கம், தன்னுணர்வு,—சுயநிர்ணயம் ஆகியவற்றின் உச்சத்தைத் தொடுகிறது. உண்மையைத் தேடும் உழைப்பும் சுதந்திரமும் கைகோத்து நடைபோடுகின்றன.

தன்னுணர்வு உள்ளவன் என்ற நிலையில் தனது வாழ்வையும், செயல்பாடுகளையும், பிறர் நினைவில் நிறுத்த முடியும். எண்ணமும், செயலும் பயனுள்ள விளைவுகளைத்

தருமாறு செய்ய முடியும். வெளிப் பொருள்களின் மீது தனது ஆளுமையைப் பதித்து—தனது நோக்கங்களுக்கு ஏற்ப அவைகளைச் சீரமைத்துக் கொள்ள முடியும். சமுதாய அமைப்பால்—தனி மனிதன் தனது எல்லைக் கோடுகளைத் தாண்டி வந்து சிறப்படைகிறான்.

அந்தச் சிறப்பு, பிறர் மனத்திலும்—வருங்காலத் தலைமுறையின் மீதும் பதிவு செய்யப்படுகிறது. பிறர் மீது அவனுடைய சிந்தனைகள் பாதிப்பு ஏற்படுத்துவதால்—அவை சகாப்தத்தின் சொத்தாக மாறி விடுகின்றன.

சிதைந்த — கோணல் மாணலான முதிர்ச்சியற்ற கருத்துக்களைச் சமுதாய ஓட்டம் பக்குவப்படுத்தி தலைமுறை தலைமுறையாகத் தொடரும் ஒரு பிரும்மாண்டமான ‘ஞானபீடத்தை’ உருவாக்குகிறது.

☆

13. சுவையல்ல... சுமை!

சரித்திரச் சக்கரத்தை நல்வழியில் செலுத்துபவர்களே தலைவர்கள். அந்தச் சக்கரத்தில் கரும்பைப் பிழிபவர்களுக்கு அது ஒரு சுவையாகி விடுகிறது. அதே சக்கரத்தில் எண்ணெய் வித்துக்களைப் பிழிந்தால் அது ஒரு சுமையாகி விடுகிறது. சுவையைப் பெறுவதை விட சுமையை ஏற்பதே தலைவனின் கடமை.

(வாழ்வின் தொண்டு அரசியல். அது வாழ்க்கைத் தொழிலாகவும் பல நேரங்களில் மாறி விடுகிறது. அரசியல்வாதிக்கு அதிகாரம் கிடைக்கிறது. அதை அவன் சமுதாயத்தோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்; தனது குடும்பத்தோடு பங்கு போட்டுக் கொள்ளக் கூடாது. அரசியலில் பரபரப்பு வந்தால் அது அதிகாரத்திற்கு வழி வகுக்கிறது; அமைதி வந்தால் அதுவே சேவைக்கு உதவி செய்கிறது.)

ஆனால்—மக்களின் அன்பை வைத்துப் பதவிக்கு வரும் அரசியல்வாதி—அங்கே வந்தவுடன் தனது அதிகாரத்தின் சக்தியை மட்டுமே உணர்கிறான்.

(கோளாறுகளைத் திருத்தத் தேவையான அழுத்தம் மிகுந்த அமைதியே—அரசியல்வாதியின் ஆபரணம். ஆர்வக் கோளாறுகளை உருவாக்கும் பரபரப்பு அவனுக்கு விலங்காகி விடும். ஆபரணத்தை அவன் சமுதாயத்திற்குப் பூட்டினால் அது சரித்திரம். சமுதாயம் அவனுக்கு விலங்கு பூட்டினால் அது சாபக் கேடு. அவன் முள் கிரீடம் சூடிக் கொண்டால் சமூகம் ரோஜாப் பாதையில் நடக்கும். அவன் மலர்க்கிரீடம் சூடிக் கொண்டால் பொது மக்களுக்கு மிஞ்சுவது முள் பாதை மட்டுமே.)

(அரசியல் ஈடுபாடு பொழுது போக்காக இல்லாமல்— அது ஒரு மெய்யான மனிதப் பண்பாக வளர்க்கப் பட வேண்டும்.) ஒளிமயமான பொறுப்புணர்ச்சியை விட்டு விலகும் போது பகட்டாக மினுமினுக்கும்-போலித்தோற்றங் களின் கவர்ச்சி வெற்றி பெற்று விடுகிறது.

சமூக அமைப்பில் ஏற்பட்ட தவறுகளை எதிர்த்துப் பற்ற வைக்கப்பட்ட கண்டனக் கனல் அணையாமல் பார்த்துக் கொள்வதே அரசியல்வாதியின் கடமை. ஆனால் சமுதாயம் அவன் மீது—கண்டனக் கனல் வீசக் கூடிய நிலைமை அவனுக்கு ஏற்பட்டு விடுகிறது. சமுதாயக் கனலின் சுமை எப்போதும் அவன்—இதயத்தில் இருக்க வேண்டும். தனது கனவின் சுவையை அங்கே அவன் வளர்த்து விடக் கூடாது.

14. நிறம் மாறும் ஓவியங்கள்!

தெய்வீக உணர்ச்சியோடும் பரிவோடும் எதிர்கொள்ளப் பட்ட—சொற்களின் போதை நிறைந்த இன்பசித்திரங்கள், மங்கிப் போகும் இலக்கிய வீழ்ச்சி மிகப் பெரிய எழுத்தாளர் களின் வாழ்விலே கூடச் சம்பவித்து விடுகிறது. வாழ்க்கை ஆபத்துக்கள் நிறைந்தது என்பதை அறிந்திருந்தும் கூட—அதனால் சோர்வடைந்து விடுவதனாலேயே அது நேர் கிறது. வார்த்தைகளின் ஒழுங்கும் கட்டுக் கோப்பும் கசந்த மனோ பாவத்தால சிதிலமாக-அகநிலையை உணர்த்தும் புலனறிவுக் கூர்மை தேய்ந்து போய் விடுகிறது.

ஆழ்ந்த சிந்தனையிலிருந்து எழுந்த படைப்பாற்றலின் சின்னங்களும், வடுக்களும் அகத்தின் அந்தரங்கத்திலிருந்து உதிர்ந்து விடுகின்றன.

படைப்பாளியே ஒரு வாசகனாகி அவனது படைப்புக் களைத் தேடும் போது-அவையெல்லாம் அவனுக்கு அறிமுக மாகாத புதுச் சாயம் கொள்கின்றன. ஒரு—தூரிகை—எழுதி முடித்த பிறகு நிறம் மாறும் ஓவியங்களைப் பார்ப்பதைப் போன்ற அதிர்ச்சி ஏற்படுகிறது.

பொருளையெல்லாம் ஊடுருவி—அதைக் கரைத்து ஒரே சமயத்தில்—கனவுகளையும், உண்மைகளையும் உருவாக்கி அழிவற்ற அமர சக்திகளை ஒன்றோடொன்று கலந்து விளையாடச் செய்த கைகள் முடங்கிப் போய்விடுகின்றன. முன் நாட்களில் திட்டமிடப்பட்ட இலக்கிய இலட்சியங்களை நண்பர்கள் நினைவூட்டும் போது—அவர்களது ஞாபக சக்தியே பெரிதாகத் தெரிகிறது. ஆனால் அந்த இலட்சி யங்கள் ஒவ்வொன்றும்...அவனது ரத்தத்தில் ஒரு துளியைக்

குடித்து வீங்கி—அமைதியும், மகிழ்வும்—நிரம்பிய ஒரு காலத்தில் சுடர் வீசிய கதிரவனின் ஒளி—இப்போது மங்கலாகி—விட்டபின்—இருளடைந்த சுவரின் மேல் சோர்வுற்ற ஒரு கொசு நடனமாடுவது போல—அவன் முன் தெரிகின்றான்.

திரைக்கு அப்பாலிருந்து—தென்றலென வீசி அவனை ஈர்த்து, ஆட்கொண்ட ஒரு முடிவற்ற அந்தரங்க விவேகத்தின் சித்திர எழுத்துக்கள் மறையத் தொடங்குகின்றன.

அவனது இலக்கியப் பிரவேசம் ஆரம்பமாகும் போது—தனிமையும், சமூக உறவும் அவனுக்கு ஒன்றாகவே இருக்கின்றன. கனவு போன்ற தேவலோக உணர்வுகளும், புலன் உணர்வுகளும் சமமாகவே நிகழ்கின்றன. எதிலும்—மையத்தில் அவனே—இருக்கிறான். இந்த நிலை மாறி அவனிடம் நிரந்தரமாகக் குடிகொண்டு விட்ட எல்லையற்ற சோர்வும், தளர்ச்சியும் படிந்த நிலைக்கேற்ப மாறி வாழ்வும் அவனுக்குச் சோர்வூட்டுகிறது. தாகத்தால் துடிக்கும் அவனுடைய—உதடுகளை விட்டு...சலசலக்கும் இலக்கிய ஓடை தூர விலகிச் செல்கிறது. (பல எழுத்தாளர்களின் வாழ்வில் ஏற்பட்டுள்ள இலக்கிய வீழ்ச்சிக்கு ஏதோ ஒரு—மனமுறிவு காரணமாக இருக்கிறது. ஆனால்—இவைகளை யெல்லாம்—தகர்த்தெறிந்து விட்டுப் பேனா—பிடிப்பவனே இலக்கிய உலகத்தின் தலைவன் ஆகிறான்).

15. அந்தரங்கம் ஒரு வானவில்

உயர்ந்த மனச்சாட்சியுள்ள மனிதனாக வாழ்வது முந்திய காலங்களில் எளிதாக இருந்தது. வயல் வெளியில் தனிப்பட்ட ஒரு கதிர் சுதந்திரமாய் ஆடி அசைவதற்குக் கிடைத்த வாய்ப்பைப் போல் அது தெளிவாக அறுதியிடப்—பட்டிருந்தது. அந்தப் பொறுப்பை நிர்ணயிக்க முடிந்தது. ஆனால் இன்று—பொறுப்புணர்வின் ஈர்ப்பு மையம் தனி மனிதனிடம் இல்லை. பொருள்களிடையே உள்ள தொடர்பில் உள்ளது. மனிதனை விட்டுப் பிரிந்து-தங்களுக் கென்று தனியானதொரு இடத்தை அனுபவங்கள் பெற்றுள்ளன. அவை கலை, இலக்கிய, விஞ்ஞான மேடைகளில் அரங்கேறியுள்ளன. சமூக ஆராய்ச்சிப் பரிசோதனைகளைப் போல் மற்றவர்கள் அனைவரையும் பயன்படுத்திப் பலவித அனுபவங்களை உருவாக்கும் நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட சமூகத் தொகுதிகளில்—புதைந்துள்ளன.

நமது இயக்குதலின் மூலம் கிடைக்காத அனுபவங்கள்—காற்றிலே சஞ்சரிப்பது போலப் பரவியுள்ளன.

நாம் கோபம் கொள்ளும் போது நிகழும் சம்பவங்களில் பலர் தலையிட்டு—அதில் நம்மை விடப் பிரதானப் பாத்திரத்தை ஏற்கிறார்கள். நம்மோடு சம்மந்தப்பட்ட உணர்ச்சிகளே கூட சில நேரங்களில் மற்றவர்களைக் கௌரவப் படுத்தும் போது—அந்த உணர்ச்சிகள் நமக்கே சொந்தமென எப்படி வாதிட முடியும்?

குணங்களைத் தாங்கிக் கொள்ள மனிதன் இல்லாமல் -குணங்கள் நிறைந்த ஓர் உலகம்—அனுபவிக்க யாரும் இல்லாமலே அனுபவங்கள் நிறைந்த புதிய உலகம் இன்று—எழுந்துள்ளது.

இலட்சியச் சூழ்நிலையில் மனிதன் எதையுமே அனுபவிக்க முடியாதது போலத் தோன்றுகிறது. தனி மனிதனின் சொந்தப் பொறுப்பு என்கிற கோட்பாடில் ஆறுதல் காண்பதற்குப் பதிலாகப் புதிய உட்பொருள் காணும் சூத்திரங்கள் உருவாகி உள்ளன. மனி னையே பிரபஞ்சத்தின் மையமாகக் காணும் போக்கு நீண்ட காலமாகத் தடைபட்டு—கரைந்து வருகிறது—இதனால் மனிதனின் ஆளுமை குறைகிறது. அனுபவத்தின் முதல் அம்சம் அனுபவிப்பது—செயலின் முதல் அம்சம் செய்வது எனக் கருதும் நம்பிக்கை வெறும் வர்ணஜாலக் கனவுதான். கைவிரல் தொடும் எல்லாப் பொருள்களுமே சொந்தமானவை எனக் கருதும்—அந்தரங்க புனிதம் கொண்டவர்களோடு தொடர்பு கொள்ளும் போது உலகமே தனியானதொரு அந்தரங்க உலகமாகி வானவில்போல் ஒளி—வீசுகிறது.

தனக்கென்றொரு நிலையான-குணமில்லாத விசித்திரப் பிறவிகள்—மாறும் உலகின் தலைவிதியை நிர்ணயிக்கிறார்கள்-ஒவ்வொரு நிமிடமும் புதுமை மலரும் போது முரண்பாடுகள். இயற்கையாகவே திகழ்கின்றன. (முரண்பாடு என்பது முரண்பாடல்ல—அதுவே மனித சரித்திரத்தின் வளர்ச்சி.)

16. நான் ஏன் எழுதுகிறேன்?

மெழுகுவர்த்தி முற்றிலும் எரிந்து தீர்ந்து போய்விட்டது. என் கண்கள் மங்கலாய் இருக்கின்றன. அன்பிற்கினிய உங்களிடம் எனது செய்திகள் சேரும் வரை—பரபரக்கும் என் உள்ளத்தில் அமைதியைக் காண முடியாது.

வாழ்க்கையில்—கடந்த காலத்திற்கு வேலி கட்டிவிட்டு, ஒரு புதிய திசையைச் சுட்டிக் காட்டும் சில வினாடிகள் இருக்கின்றன. அந்த இடைநிலைக் காலத்தில், உள்ளத்தின் கழுகுக் கண்களைக் கொண்டு, கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

உலக சரித்திரம்கூட இப்படிப்பட்ட ஒரு சுய விமர்சனத்தையும்—நிகழ்ச்சிகள் பற்றிய மறு சிந்தனைகளையும் விரும்புகிறது. உலகம் இத்தகைய சூழ்நிலையில் பின்னோக்கி செல்வதைப் போலவோ, நகர மறுப்பதைப்—போலவோ தோற்றம் காட்டும். ஆனால் அது உண்மையல்ல. அப்பொழுது அது சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு தனது எண்ணங்களுக்கும், செயல்களுக்கும் அறிவார்ந்த விளக்கங்களைப் பெறவே முயல்கிறது.

அந்த நேரத்தில்—இலக்கியவாதி கவிதை மழை பொழியத் தொடங்கி விடுகிறான். ஏனென்றால் ஒவ்வொரு உருமாற்றமும் தெளிவில்லாத (ஆனால்) ஒளிமயமான வண்ணங்களைப் பற்றி இசைபாடும் ஒரு பெருங்கவிதையின் முதல்—வார்த்தையாகவோ அல்லது கடைசிப் பாடலாகவோ தான் இருக்க முடியும், (கவிகள் உலகத்தின் கடந்த கால அனுபவங்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புகிறார்கள்.)

தீர்ப்பளிப்பவர்களில் மென்மையானவர்களும், மனப் பூர்வமான இரக்க முடையவர்களும் தமது இளம் வெப்பத் தால் சமூக முயற்சிகளின் கருவையெல்லாம் சூடேற்றும் சூரியனும் அவர்கள்தானே! மனம் செய்யும் தவறுகளையும், சந்தர்ப்பங்கள்—உருவாக்கும் தீமைகளையும் தீயநெஞ்சங் களின் குறை கூறல்களையும்—தவிர்த்து வாழ்க்கைச் சோலையை வசந்த மயமாக்குபவர்கள் அந்த இலக்கிய வாதிகள் அல்லவா?)

நம்மைச் சூழ்ந்துள்ள கருமேகங்கள் சிதறி ஓடவும்—நமது துயரங்களைச் சேர்ந்து அனுபவிக்கவும், நம்மோடு வெம்பி அழவும், பிறந்த அவர்கள்... (ஆழங்காண முடியாத அன்பை வெளியிட முடியாமல் தவிக்கிறார்கள்.)அவர்களை எனது நெஞ்சோடு அணைத்துக் கொண்டு-என் உள்ளத்தில் உள்ளதை எல்லாம் உங்களிடம்-சொல்லி விடவே இப்போது நான் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

சிகரத்தில்
உறங்கும்
நதிகள்

பாகம் : 1

கார்மேகங்கள் கலைந்து போவதால், வானம் வருத்தப் படுவதில்லை. மழையை நம்பி இருக்கும் மனிதர்களுக்குத் தான் அதனுடைய அருமை தெரியும்.

வேண்டிய அளவு சூரிய வெளிச்சம், நிலாக்காலம், மன உளைச்சல் இவைகளை எடுத்துக் கொண்டு முதலிலிருந்து முடிவு வரை ஒன்றோடொன்று ஒட்டப்பட்ட சம்பவத் தொகுப்பாய் வளர்ந்த அவனுடைய வாழ்க்கைப் பயணம் நரை கூடி ஓய்வு கொண்டது! அதைப் பற்றி அவனுக்கு ஒன்றும் கவலையில்லை! ஆனால் அவனுடைய திவ்யா...

இதயத்திற்குள்ளே அனாதையாக ஒரு கனவு! கண் முன்னாலே விரியும் சூனியத்தில், தொடர்ந்து வரும் கால வித்தியாசத்திற்கேற்ப நிழலாடும் இறந்த கால ஓவியங்கள்! எத்தனையோ வசந்தங்களும், இலையுதிர் காலங்களும் வந்து போய் விட்டன.

கேசவன் ஏரிக்கரையில் உட்கார்ந்து கொண்டிருந் தான்! சலனமற்று கிடந்த மரங்களை காற்று முத்தமிட்டது! அதைப் பார்த்தபோது. மனித உறவுகளின் கண்ணாம்பூச்சி யாட்டம் மனதுள் இலக்கை மறந்து தனிமை கொண்டு திரிவது அவனுக்குப் புரிந்தது!

மன உலகில் வெயில் எரிய, நிழலில் ஒதுங்கி அதனு டைய சுமை தூக்கி, நகர்ந்த புறப்பாடு மீண்டும் அவனு டைய மானசீகத்தில் தோற்றம் காட்டியது!

நடுங்கிக் கொண்டும், போர்த்திக் கொண்டும் மனித ஜீவன்கள் எதிர் கொண்ட முனகல் இரவைச் சூர்யோதயம் காய்ந்து விட செய்கிறது!

சிறுவர்கள் மலைப் பூக்களைப் பறித்துக் கொண்டிருந் தார்கள்! படுக்கையை விட்டு எழும் தாயை கட்டிக் கொள் ளும் சிறுவன் மாதிரி காலை வெயிலைத் தழுவும் பனி மூட்டம்.

பச்சை ரதம் போல் மூங்கில் புதர் மஞ்சு மூட்டம், கப்பை கிழங்கை தின்று கொண்டு சாய்ந்து, சாய்ந்து நடந்து போகும் மலைத் தோட்ட கூலிகள். ஏற்றப் பாதையை, ராஜ வீதியாக்கி நடை பழகும் குதிரைகள்! அங்கே கூப்பிடு தூரத்தில் ஒரு மரத்தடியில் திவ்யா நின்று கொண்டு, "காற்றே! எனக்கு இனிதாக, எதையாவது சொல்லு" என்று முணுமுணுப்பதைப் போல், முக அபிநயம் கொண்டு சிரித்தாள்!

இந்த மலைக் கிராமத்தின் குளிர்ந்த சீதோஷ்ணங்களில், இதுவரை உருண்டு சென்ற வருடங்கள், திவ்யாவிற்குத் தாலாட்டுப் பாடி, அவள் பருவம் அடைந்ததும் அவளுக்குப் பூச்சூடி விட்டு போய் விட்டன.

ஏரியோரத்தில் ஒரு படகு இருந்தது. அலைகளின் சுழற்சியில்...மூழ்கடிக்கப் படாமல், கால வீதியில், வந்த சின்னம் அது. வெப்பம் அதனுடைய உடலைக் காய்ந்து விடச் செய்யும். குளிர் எஃகைப் போல் அதை விறைக்கச் செய்யும். வயதாகி விட்ட கிழவனின் செல்லக் குழந் தையைப் போல், தாழ்ந்த அலைகளில், அது மெதுவாக, அசைந்து கொண்டிருந்தது.

மரத்தின், சின்னச் சின்னச் சிவப்பு மலர்க் கிரீடங்கள் மண்ணில் சாய்கின்றன! அவைகளின் அழகிய நாள் முடிந்து விட்டது!

'திவ்யா' சிரித்துக் கொண்டு நின்றதை பார்த்தபோது, 'இந்த மலர்கள் முகம் சிவக்கவும், மெல்லச் சிரிக்கவும், இவளிடமிருந்து தான் கற்றுக் கொண்டனவோ?" என்று மனசு வேகமாக ஒரு புதுக்கவிதையை எழுதி அழித்தது!

"ஹைபர்போல்" சிந்தனைக் கூட்டத்தைச் சேர்ந்த கவிஞர்கள், கருத்து வலிமை தருவதற்காக பொருத்தமே இல்லாத கொடூரமான கற்பனைகளை உருவாக்குவார்கள்! அதைப் போலவே, நாகரிகத்தின் சாட்சியமற்றுக் கிடக்கும் இந்த கிராம மக்களின் வாழ்வை அழகு படுத்த, ஒரு பொருத்தமில்லாத கொடூரமான எண்ணத்தை உருவாக்கிய பிறகு, காலதேவன் திவ்யாவை இங்கே உலவ விட்டிருக்க வேண்டும்!

அவளைத் தொட்டுத் திரும்புவதால் மலைக் காற்றின் மூச்சுக் கூட போதையாயிருக்கிறது! ஆனால் அவளது இதயத் தளத்தின் மீது சோகத்தின் மணம், கார நெடி வீசு கிறது!

இப்பொழுதெல்லாம் அவள் ஏரிக்கரையில் அடிக்கடி ஒரு முணு முணுப்பின் ஒலியளவில், துக்கப் பாடல்களை பாடிக் கொண்டிருக்கிறாள்!

ஏரியே! நான் இன்னும் சற்று நேரம் உன்னோடு தங்கவா?" என்று கேட்பது போல் அங்கேயே நின்று விடுகிறாள்;

"என்ன திவ்யா"—கேசவனின் குரல் ஆறுதல் கூறுவது போல், அவளைத் தொட்டது!

"இன்னிக்கு, உன்னோட பொறந்த நாள். அதை மறந்துட்டியா?"

"வயசுப் பொண்ணாயிட்டேன்! அதுக்குப் பிறகு, பொறந்த நாள் என்ன வேண்டிக் கிடக்கு? வேடிக்கை பண்ணாதீங்க தாத்தா!"

"ஏம்மா! இப்படிச் சொல்ற?"

"எத்தனையோ பொருத்தமில்லாத பொறந்த நாள்கள் நடக்குது! அது எனக்கு வேணாம்!"

"பொருத்த மில்லாத பொறந்த நாளா?"

"ஆமா தாத்தா. ஒரு நடிகையோட பொறந்த நாளைக் கொண்டாடினப்ப, பதினாறு மெழுகுவத்திகளை ஏத்தி வச்சாங்களாம்! அங்கிருந்த ஒருத்தர், 'இது அவளோட உண்மையான வயதைக் குறிக்குமா? என்று கேட்டாராம்!"

"ம்! அப்புறம்..."

"அதுக்கு இன்னொருத்தர், 'இவளோட உண்மையான வயசுக் கேத்தபடி மெழுகுவத்தி ஏத்தி வச்சா ஒரு தீ விபத்து நடந்து விடும்' என்றாராம்." இதைச் சொல்லி விட்டு, திவ்யா சிரித்து விட்டாள். சோகத்தின் அலுப்பில் வந்த சிரிப்பு அது!

பிறகு, துருவ நட்சத்திரங்களைப் போல் மின்னிய அவளுடைய கண்கள் துயரத்தின் இரு துருவமாக உருவான தோற்றம் கொஞ்சம் கலைய, அவள் கேசவனின் தோளைத் தொட்டாள்!

காற்று சந்தோஷமாக வீசியது! மேகங்களைத் தங்கள் ஊருக்கு கூப்பிடுவது போல் கிராம வாசிகள், நெற்றி மேட்டில் கைவைத்து வானத்தைப் பார்க்கின்றனர்!

"என்னிடம் இருப்பதை எல்லாம் உங்களோடு பங்கு போட விரும்புகிறேன்" என்று வானம் சொல்வதைப் போல் மேகம் கறுத்தது!

திவ்யாவும், கேசவனும் கவலைகளைக் கடந்து நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்! அவர்களுக்குப் பின்னால், மரத்தடியில் நின்றபடி, ஒரு நடுத்தர வயது ஆணழகன் திவ்யாவை வெறித்துக் கொண்டிருந்தார்!

ஒரு விதமான பனிமூட்டத்துடன் கூடிய இனிய இசைக் காற்று வளையங்கள் சுமந்து வந்தன!

வேட்டைக் காரனின் வெறியோசையாக இல்லாமல், பறவைக் குரலாக, சப்த மண்டலம் முழுவதும் புனிதம் போர்த்திக் கொண்டது.

அந்த மனிதர் திவ்யாவைப் பார்த்துக் கொண்டே அவர்களுக்குப் பின்னால் நடந்தார்!

அவர் முன்பெல்லாம், தனது கனவுகளோடு விளையாடு வதற்காக, ஆண்டுக்கொருமுறை இங்கே வருவார்! நாளாக நாளாக விளையாட்டு மைதானம் வீடாக மாறியது. அப்புறம் வீடு சரணாலயம் ஆகி விட்டது.

★

பாகம் : 2

மழை மூட்டமும், பொருமிக் கொண்டிருந்த பூமியும் அவர்களை அங்கே கொண்டு வந்தன.

"என்ன திவ்யா; இன்னைக்கு நம்ம ஊர்த் திருவிழா! ஞாபகமிருக்கா? ம்...அம்மா இருந்தவரை, இந்த நாளு வடை, பாயசத்தோடு வந்தது!

"எல்லாமே மாறத்தான் வேணும் தாத்தா; அம்மா தந்த தாய்ப்பால். அப்புறம் ஆண்டவன் தந்த கண்ணீர்!'

"இப்பவே வெறுத்துப் போகக் கூடாது திவ்யா"

"என்னவோ இந்த ஊரே எனக்குப் பிடிக்கல! நான் ஏன்தான் இங்கே பொறந்தேனோ?

வானத்திலிருந்த சூரியன் சுரங்க விளக்காய் மாறிய மாலைப் பொழுதில், மலை மடியில் வெயில், சோம்பலாகப் படுத்து உறங்கிக் கொண்டிருந்தது!

ஊரின் மீது மங்கல் நிறமான வெப்பம் கலந்த மூடுபனி தவழ்ந்தது. தொலைவில், நீர் வீழ்ச்சியின் இரைச்சல்!

கடந்து போன நூற்றாண்டுகளின் முத்திரை பதிக்கப் பட்ட மனிதர்கள், கோவில் பிராகாரத்தில் நின்று நடுங்கிக் கொண்டு, இதயத்திற்குப் பதிலாக, நெஞ்சில் அடித்துக் கொண்டிருந்தார்கள்!

சவ்வு மிட்டாயைப் பெரிய கம்பில் சுற்றி கொண்டு, அதை இழுத்து, இழுத்துச் சிறுவர்களுக்குக் கடிகாரம் செய்து கொடுத்தபடி ஒருவன் கோவில் வீதியில் போய்க் கொண்டிருந்தான்.

தூரத்து மைதானத்தில் கிராமத்துப் பையன்கள், குடை ராட்டினத்தில் சுற்றிக் கொண்டிருந்தனர். ஒழுங்கான குதிரைகள் ஒன்றையொன்று முந்தாமல் வட்ட மடித்தன!

ராஜா பாதர் சார்!—தங்களையே பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்த அவரை, அப்போதுதான் கேசவன் கண்டு கொண்டான். இருவருடைய கண்களிலும் பூப் பூத்து உதிர்ந்தது. திவ்யாவோ புறவெளியில் பார்வைத் தூண்டில் போட்டுக் கொண்டிருந்தாள்.

ஊர், திருவிழாக் கோலம் பூண்டு கொண்டிருந்தது. முறைப் பையன்கள் மீது பாவாடைப் பெண்கள் மஞ்சள் நீரூற்றும் வேடிக்கை தொடங்கியது! நேரம் செல்லச் செல்ல வயது வித்தியாசத்தின் எல்லைகளைத் தாண்டி கிழவர்கள் கூட அந்த விளையாட்டில் அகப்பட்டனர்!

கிராமத்தின் மூலை முடுக்கெல்லாம், ஓடையாய்க் கிடந்த மானுடம், ஒரு ஜீவநதியாய்ப் பிரவாகம் கொண்டு குதூகலித்து ஓடியது.

டைமன், ஆட்டியன், கிளாவர், இஸ்பேடு உருவங்கள் வரையப்பட்ட பெட்டியைப் போன்ற மேடையின் மீது காசுகளை வைத்துச் சிலர் சூதாடிக் கொண்டிருந்தனர்.

வர்ணப் பொடி கரைத்த நீலம், மஞ்சள் சிவப்பு நிற சர்பத்துக்களைச் சிறுவர்கள் தங்கள் விருப்பம் போல் வாங்கி குடித்தார்கள்.

கையிலே சிறுவர்களைத் தூக்கி தட்டாமாலைசுற்றுவது போலத் தோளிலே காவடியை பக்தர்கள் சுற்றிக் கொண்டிருந்தனர். முளைப்பாரியைத் தூக்கிக் கொண்டு பெண்கள் நடந்து போனார்கள்.

"பவளக் கொடி" தெரு கூத்து நடந்தது. விதூஷகன் இரட்டை அர்த்தமுள்ள வசனங்களைப் பேசி அடிக்கடி பொதுமக்களைக் கை தட்டிச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான்.

ராஜா பாதர் திவ்யாவைப் பார்த்தார். மேகங்கள் கலைந்து, நிலவு ஒளி வீசியது. மனதின் உட்பகுதியில் அலைந்து திரிந்து கொண்டிருந்த சோகம், கண்களில் வெளியேறியது. அவருடைய உணர்வுகள் என்ன என்பதை திவ்யாவால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அவரைப் பார்த்த பிறகு இந்தக் கிராமத்தில் தனது தண்டனைக் காலம் முடிவடைந்தது போல் மனதில் ஒரு நினைவு கொண்டாள்.

ஒரு பரந்த உலகத்திற்கு அவள் செல்ல வேண்டும்! அங்கிருந்தபடி, இந்தச் சிறையில் கிடந்து வாடும் முகங்களுக்காகக் கீதம் பாட வேண்டும் என நினைத்துக் கொண்டாள்!

கனவுகள் வளர்ந்தன!

"திவ்யா! உனக்கு நான் ஒரு கதை சொல்லப் போகிறேன்!"—கேசவன் மெல்ல பேசினான்.

ஆற்றங்கரையில் கிராமமே கூடி இருந்தது. அவர்களை யெல்லாம் 'மெதுவாக அடியெடுத்து வந்து' அங்கே நிற்க வைத்தது யார்?

பிறக்கும் போதே கவிதையாய்ப் பிறந்து இயற்கை அரியணையில், மக்களின் கனவுகளில், உலகின்சுற்றுப் புறத் தில், உயிரோட்டம் கொள்ளும் அந்த நிலவைக் கேட்டுப் பாருங்கள்!

நிலா வெளிச்சம், நதிக்கரையைக் குளிப்பாட்டும் அதிசயம் நடந்து கொண்டிருந்தது.

பருவமெய்திய ஆண்களும் பெண்களும் ஆற்றங்கரை யில் கூடத் தொடங்கினர்! கோதுமை வயல்களில் மேயும் ஆடுகளைப் போல் ஆசை அவர்களின் இதயத்தில் இருந்தது. காற்று வீசும் இனிமையில், பேச்சுக் குரல்கள் கூட சங்கீதமாக மாறிக் காதில் விழுந்தன!

அந்த ஊர் வழக்கப்படி ஊர்த் திருவிழா நாளன்று ஆற்றங்கரையில், நிலா வெளிச்சத்தில் காதல் கொண்ட ஆணும், பெண்ணும் பலரறியக் கைகோத்து நின்றால், கோயில் பூசாரி அவர்களைக் கோவிலுக்கு அழைத்துச் சென்று, மண முடித்து வைப்பார்! பெற்றோர்கள் ஆசீர் வாதம் செய்வார்கள்.

நாணத்தில் ஊமையான பருவப் பெண்களெல்லாம் திருவிழா நாளில் வெண் புறாக்களைப் போல் திரிந்தார்கள்.

ஒரு நாக்கு ஒரு வார்த்தை பேச, ஒரு வாழ்வில் ஒரு நம்பிக்கை வளர, அவர்கள் ஆத்மாவில் பூச்சூடிக் கொண் டார்கள்!

ஆனந்த கண்ணீரில் நனைத்து எடுக்கப் பட்ட கண்கள் வாழ்வைத் தேடின! இதுவரை முள் கிரீடம் சுமந்த இதயங் களையெல்லாம் காதலின் கீதம் பூப்பூவாய் மாற்றிக் கொண் டிருந்தது'

இந்த விளையாட்டில் பங்கு பெற விரும்பாத கன்னிப் பெண்கள் தனியே நின்று கொண்டிருந்தனர். அங்கே திவ்யாவும் இருந்தாள். அருகே கேசவனும், ராஜாபாதரும்!

கூட்டம் ஊர் திரும்பிக் கொண்டிருந்த போது, மூவரும் நடந்து வந்த புல்வெளியின் மேல் திவ்யாவுக்காக, இயற்கை அவளை முந்திக் கொண்டு...

அழுதுவிட்ட சுவடுகள்போல் பனித் துளிகள் இருந்தன!

எல்லாவற்றையும் மீறி ராஜபாதரின் வருகை தந்த இனந்தெரியாத உற்சாகத்தோடு திவ்யா கேட்டாள்.

"தாத்தா! கதை சொல்றேன்னு சொன்னீங்களே!"

பாகம் : 3

கேசவன் சிரித்துக் கொண்டே, வீட்டுக்கு அவர்களை அழைத்துச் சென்றான். போகும் வழியில், மின்மினிப் பூச்சிகள், தூரப் பார்வைக்கு, நிலவின் வேர்வையைப் போல் வேலி ஓரங்களில் கிடந்தன. நடைபாதைக்கு வலப்புறம் "சௌ சௌ" தோட்டம். லாட ஆணி போல் காலில் ஒட்டும் அட்டைகள், காற்றில் யாரோ குளிரைத் தடவி விட்டிருக்கிறார்கள்.

வீட்டின் கணப்பு அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. ஒரு மூலையில் கொடையாரஞ்சுப் பழங்கள் குவிந்து கிடந்தன.

மோடாவில், ராஜாபாதரும், நாற்காலியில் திவ்யாவும் உட்கார்ந்து கொள்ள, கேசவன் வீட்டின் உள் திண்ணையில்

அமர்ந்திருந்தான். வசதியான பெரிய வீடும், நிலமும் கேசவனுக்கு இருந்தன.

"திவ்யா, இவர் நமக்கு ரொம்ப வேண்டியவர்." என்றான் கேசவன், ராஜாபாதரைப் பார்த்தபடி.

அவரைக் கண்டது முதல் ஒரு புது வகை இன்பம் திவ்யாவைத் தொற்றிக் கொள்ள அந்தக் கிழவன் யாருடைய கதையையோ, விஸ்தாரமாகச் சொல்ல ஆரம்பித்தான்!

"இரவின் கனவுகளையெல்லாம் கூறுகட்டிப் பிரித்து வைத்த சிற்றிடங்களைப் போன்ற பிரகாசமான கண்கள் சுமந்தவர்கள் ஏரிக்கரையோரம் நடந்தார்கள்! நிலாச் சோறு போல சூரியன் குளிர்ந்த பகல்! பனி மூட்டத்திற்குள்ளே வெயில் சாய்ந்து கொண்டு இருந்தது!

எதிர் வரும் அந்தியின் மஞ்சள் ஒளியில் நீலமலை விடுதி ஒரு விசித்திர மாளிகையாகக் காட்சியளித்தது. அவள் அந்த விடுதியின் "ரிசப்னிஸ்ட்".

இன்னும் அவளைக் காதல் முள் குத்தவில்லை. பூப் போன்ற அவளுடைய பாதங்களை வணங்குவதற்காகவே, கரம் கூப்புவது போல் தெரியும் மலைச்சிகரங்கள்.

அவள் விடுதியின் நடைபாதையில் அடிக்கடி முகம் பூத்தாள்! தூங்கும் கனவைப் போன்ற அழகிய புன்சிரிப்பு. அவளுடைய தலைக்கு மேலே, யாருக்காகவோ வந்து தூது சொல்லும் தென்றல் காற்று!

காலத்தின் கர்ண பரம்பரைக் கதை போல, அவளுடைய கண்கள் ஒளிவீசிக் கொண்டிருந்தன! அவளுடைய சிறு சிறு அசைவிலும் பேரழகு ஊர்வலம் போனது.

அவன் அந்த விடுதியில் தான் தங்கி இருந்தான். வந்த சில நாட்களில், அவளை தேவதையாக்கித் தனது கனவுகளைப் பலிப் பூவாய்த் தூவும் பக்தனானான்.

தூரத்தில், காற்றிலாடிய, மணமில்லாத, மலைப்பூக்களில் வசந்தம் 'வீக்கம்' கொண்டிருந்தது. மலைக் காட்டுக்குள்ளே பல நிறங்களில் சின்னச் சின்னப் பறவைகள் பறந்து கொண்டிருந்தன. சிலப் பறவைகள் கூவின. வண்ணத்துப் பூச்சிகள் சிறகசைத்தன.

அந்த இடம் ஆள் அரவமில்லாத சூனியப் பிரதேசமாக இருந்தது. தூரத்திலிருந்து யாரோ ஒரு மரத்தை வெட்டும் சத்தம் மட்டும் வந்து கொண்டிருந்தது.

"கடைசியா...உன்னைத் தொட்டுட்டேன். எப்பவும் என்னை ஞாபகத்தில் வச்சிருப்பியா?"

"எனக்கு பயமாயிருக்குங்க!"

"ஊருக்குத் தெரிஞ்சிருமோன்னு பயப்படுறியா?"

"ஆமாங்க. தயவு செஞ்சு யாருகிட்டயும் பேச்சு வாக்கில கூடச் சொல்லிடாதீங்க."

"ஒரு நாளும் சொல்ல மாட்டேன்!"

"சத்தியமா?"

"சத்தியமா"

நான்கு பக்கமும் அறிமுகமில்லாத பெரிய பெரிய மரங்கள். செடி கொடிகளும் மரங்களும், புதர்களும் அங்கே ஒரு சிறிய அடர்ந்த காட்டையே சிருஷ்டித்திருந்தன.

அவள் அவனைப் பார்த்தாள். கனவுகளில் சிதறிக் கிடக்கும் காதலுக்கு ஒரு உருவம் தரத் தன்னால் மட்டுமே முடியும் என்பதைப் போல அவளுடைய கண்ணோரம் பிரகாசம் கொண்டது.

இதய தேவாலயத்தை இருட்டாக்கி விட்டு, அந்த காதல் ஜோதி சூனியத்தில் தோன்றி மறையும் நீர்க் குமிழியைப் போல உடைந்து போய்விடக் கூடாதே என்று மனக் கோலமிட்டாள்.

அவளையறியாமல் கண்ணீர் துளிகள் வழிந்தன. காதல்...கண்களால் பார்ப்பதில்லை. இதயத்தால் பார்த்து கண்களால் அழுகிறது.

வேதனை தரும் தீய வேளை வரும் போதுதான் காலம் யாரையும் பைத்தியமாக்கித் துடிக்க வைக்குமோ?

சொர்க்கத்தில் தனது சாம்ராஜ்யத்தைப் பற்றி வீண் பெருமை பேசும் காதல் பூமியில் தலை குனிந்தே நடக்கிறது.

அறிமுகமற்ற அவனிடம் நீலமலை விடுதியில், இனந் தெரியாத ஒரு உணர்வு பூக்க, காதல் கொண்டு, அவன் வசமான அவளை அவனும் ஆழமாகவே நேசித்தான்.

இன்று அவளைப் பார்க்க முடியவில்லை. பக்கத்திலிருந்த அவனுடைய மலைத் தோட்டத்திற்கு போய்வர வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

நாலைந்து பேர் ஜீப்பில் அவனுக்காகக் காத்திருந்தார்கள். அவனுடைய மைத்துனன் நாகப்பன், ஜீப்பிலிருந்து இறங்கி அவளைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். கண்களால் ஒரு மான பங்கம் நடத்தினான்.

நாகப்பன் முரட்டுத்தனமான சுபாவங்களின் கூட்டு வார்ப்பாக இளமை முதல் வளர்ந்தவன்.

மலைத் தோட்டத்தின் நிர்வாகப் பொறுப்பையெல்லாம் சுமப்பதைப் போன்ற பாவனையில் தர்மத்தை வேட்டையாடிக் கொண்டிருந்தான்.

அவனுடைய கண்ணுக்குப் பின் பார்வை உருவாகத் தனது இருப்பிடத்திற்கே கற்பனையில் அவளைக் கொண்டு போனான்.

அலுக்காமல் சலிக்காமல் விதவிதமான கனவுகளுக்கு வர்ணம் பூசி, ஒரு அந்தப்புரம் கண்டான்!

அவனுடைய மாளிகைக்கு பின்னால் 'கல்லாறு' ஓடிக் கொண்டு இருந்தது. அதைச் சுற்றிலும் கொய்யாத் தோப்புகள்.

மரங்கள் தலையாட்ட பூமியின் தாலாட்டுப் பாடலை போல, நதி நடக்கும் ஓசை.

நாகப்பன் அவளை நினைவுகளால் கட்டியிழுத்து அங்கே கொண்டு போனான்! அந்த கற்பனை சுகத்தோடு அவனால் நிறைவு பெற முடியவில்லை.

அங்கும் இங்கும் நடை போட்டான்! அடிக்கடி குளிர் பானத்தை உதடுகளால் தொட்டான். காத்திருத்தலுக்கு எதிராகச் சலனம் கொண்டான். அவளோடு பேச முயன்ற போதெல்லாம், ஒரு வெறி மனதுள் புதைந்து கொண்டிருந்தது.

எல்லோரோடும் இயற்கையாகப் பேசிக் கொண்டே தனது கடமைகளைச் செய்து கொண்டிருந்தவள்... தனது அவளின் திரும்பாமையாலும், நாகப்பனின் பிரவேசத்தாலும் கொஞ்சம் சூடானான்.

பிறகுதான் காதலின் நெடுஞ்சாலையை விட்டு வழி தவறிப் போய் விடக் கூடாதேயென்று விழிப்பும் கொண்டாள். இது மூட பக்தியல்ல என்னும், உண்மையும் நம்பிக்கையும் ஒன்று சேரும் நேர்வழி என்றும் சுயதரிசனம் செய்து கொண்டாள்.

மனதிற்குள் ஒரு பிரார்த்தனை வளர்ந்தது.

காலதேவனே காதலின் கிரீடத்தைப் புழுதியில் வீசி விடாதே! அதனுடைய காணிக்கைகள் இங்கே வர அனுமதி கொடு.

என் காதலை அழித்து விடாதே! பூமியில் அணையும் விளக்குகள்... மறுபடியும் எரியும்.

ஆனால், வானத்திலிருந்து ஒரு நட்சத்திரம் உதிர்ந்து விட்டால்...

★

பாகம் : 4

நாகப்பன் லாட்ஜில் மாமனுக்காக காத்திருந்தான் அவன் பால்கனிக்கு வந்து நட்சத்திரங்களைப் பார்த்தான். இரவின் ஆபாசங்கள் பூமியில் இருக்கின்றன; இரவின் அழகுகள் வானத்தில் இருக்கின்றன. அவனே பூமியின் ஒரு இரவு நேரத்து ஆபாசம். அவனுக்கு இதெல்லாம் தெரிய வழியில்லை.

வானத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தான். அழகு அவனை விட்டு வெகு தூரத்திற்குப் போய் விட்டது.

வானத்தின் அழகைக் கூட இழுத்துப் போட்டு பூமியில் ஆபாசப் படுத்த விரும்பினான்.

எப்படியோ மாமன் வந்தான். மாமன் என்றால் யார்? அவன் நமது பாஷையில் 'அவளுடைய அவன்' தான். அவனுக்கு மைத்துனரைப் பார்த்தவுடன் ரத்தம் கொதித்தது. சமாதானத்தில் தணிகின்ற கோபங்களும் உண்டு. கோபங்கள் அங்கீகரிக்காத வேஷம் போடும் சமாதானங் களும் உண்டு.

அங்கே சமாதானம், தனது வேஷம் கலைந்து, கோபத்தின் அடிமையானது.

"என்ன மச்சான், எஸ்டேட்டுலயே பார்க்க முடியலியே!"

"மாமனைப் பார்க்கணுங்கிற ஆசையில் ஓடி வந்தேன். மற்றபடி தானே எஸ்டேட்!"

இதை அவன் ஜீரணித்துக் கொண்டான். ஏனெனில், அவனுடைய கதையே சோக மயமானது. வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும், தோற்றுப்போய், வாழ்வைத் தேடித் தேடி அவன் அலைந்து கொண்டிருக்கிறான்.

அதிசயமான ஒரு பெண்ணுலக சுதந்தரமாய் ஷைலஜா அவனை மணந்து கொண்டபோது; அந்தப் பிணைப்பில் கசந்து போய் வாழ்வு அதனுடைய ஏதாவது ஒரு மூலையிலாவது தனக்கு ஓர் இடம் போடக் கூடும் என்று எதிர் பார்த்து இந்த கிராமத்திற்கு வந்தவன் அவன்.

நகரம் ஆசை நாயகியாக, கிராமம் மனைவியாக எப்படியோ ஒரு முரண்பாடான காலம். இந்து தர்மத்தை அமெரிக்க நாகரிகத்தின் காலடியில் அழித்துக் கொண்

டிருப்பதை அவன் கண்டான். அவனுடைய காட்சியில் ஒரு யுகத்தின் பார்வை அடைக்கலம் தேடி அனாதையானது.

அவன் தன்னைப் புறக்கணித்து, ஒரு நாடோடியாக்கிய நகர வாழ்க்கையை நினைத்துக் கொண்டான். கால ஓட்டத்தின் எல்லைகளைத் தாண்டி நினைவுகள் பின்னோட்டம் போட்டன.

அவனுடைய வீடு, ஒரு பிரம்மாண்டமான அரண்மனை. வியாதியால் செத்துப் போகும் முன்னால், மனவியாதி படைத்த அக்காவின் பெண்ணை அவன் மணந்து கொண்டான்! ஷைலஜா எஸ்டேட்டுக்கும் தொழிற்சாலைக்கும் எஜமானியானாள். ஆனால், அவனுக்கு மனைவியாகவில்லை. ஷைலஜா அவனால் கல்லூரியில் சேர்க்கப்பட்டவள் ஒரு பெரிய டாக்டராக வெற்றி பெற்று, பிணங்களோடு பேசினாள். அவனைப் பேசும் பிணமாக்கினாள். எங்கேயோ ஒரு கிராமத்தில் கிடந்தவளை, அக்காவின் மகள் என்பதற்காக டாக்டராக்கிவிட்டு, அவன் மரண அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறான்.

பாம்புக்குப் பால் வார்த்தது போல் கொடுமைக்கார ஷைலஜாவோடு அவளது தம்பி நாகப்பனையும் பக்கத் துணையாக வைத்து விட்டுச் சென்று விட்டாள் அக்கா!

இது போதாதென்று, மகன் சந்திரனின் போக்கைப் பற்றிய கவலைவேறு அவனை வாட்டியது.

அன்பு என்பது நம்மைத் தேடி வருகின்ற போது, அது எல்லா விதமான பரிசுகளையும் அளிக்கிறது. அதை நாம் தேடிப் போகும் போது, ஆயுள் தண்டனைதான் நமக்கு கிடைக்கிறது.

அவனுடைய நகர வீட்டில், ஷைலஜா கோபாவேசத்தோடு பேசிக் கொண்டிருந்தாள்! சிரிப்பு என்பதே அவள்

கணவனில்லாத நேரத்தில், பிறரிடம் தன்னை உயர்த்தி அவனை இழிவு படுத்தும் உணர்வின் வெளியீடாக மாறி விட்டது.

தீபத்தை அணைத்து விட்டுக் கணவனைக் கொஞ்சு வதைவிட, அதை ஏற்றி வைத்துக் கொண்டு, காசுகளை எண்ணுவது தான் பிரியமான பழக்கம் அவளுக்கு.

முதலிரவிலேயே, லட்சக் கணக்கான முதல்களை எண்ணிக் கொண்டு ஷைலஜா பணக்காரியானாள்.

கடந்த கால வாழ்க்கை, விசுவரூபம் கொண்டு, அவனைக் காலடியில் போட்டு மிதித்தது. திருமண விழா வெல்லாம் சிறப்பாகத்தான் இருந்தது. ஒரு மாயா ஜாலக் காட்சியைப் போல!

அப்போது, அவனுக்கு ஆபத்துக்கள் தன்னைச் சந்திக்கப் போவதை உணர்ந்து கொள்ளுகிற தீர்க்க தரிசனம் கிடையாது.

இவளது உதடுகள் பேசாதபோது அமுதம் சிந்தும்! பேசுகின்ற போது விஷம் கக்கும் என்பதைக் காலம்தான் கற்றுத் தந்தது.

அவன் தலைநகரத்தின் முதல் தரமான தொழிலதிபன், வெளியிலே நடைபெறும் கூட்டங்களில் ரோஜா மாலையின் இதழ்களைச் சுவைப்பான். வீட்டுக்கு வந்ததும் ஷைலஜா கன்னத்திலே காறி உமிழ்வாள்.

அவனோ...

ஏ! வாழ்க்கையே!

ரோஜாவின் அத்தர் இவ்வளவு கேவலமானதா? என்று நினைத்துக் கொண்டே சோகத்தில் புரண்டு கொண் டிருப்பான்.

வாழ்க்கையிலே பிரச்சனைகள் அதிகரிக்க அதிகரிக்க அவன் மதுவின் ரசிகனானான். இரவு வீடு திரும்பும் போது பெரும்பாலும், அவனுடைய சுவாசத்தில் மதுவாசனை வீசும். மாங்காய் ஊறுகாயைத் தின்றவுடன் மாமரத்தில் ஏறுவது போல் வருகின்ற போதைக்கு பக்தனானான்.

சில பேர் மதுவின் எஜமானர்களாக இருந்து தங்களைக் கவுரவப் படுத்திக் கொள்வார்கள். சிலர் மதுவின் அடிமைகளாகித் தங்களை அசிங்கப் படுத்திக் கொள்வார்கள். அவனைப் போன்ற சிலர் மட்டும் தான் மதுவின் நண்பர்களாய் மாறி, மதுவையும் தங்களையும் கவுரவப் படுத்திக் கொள்வார்கள், என்றாலும் தேவர்கள் நரகத்துக்குத் திரும்புவது போல்தான் அவன் வீட்டிற்குத் திரும்பி வருவான்.

ஷைலஜா காரியவாதியாக இருந்தாள். ஒவ்வொரு மாதமும் வருமானத்தை அவளிடம்தான் தரவேண்டும் என்று பிடிவாதம் செய்வாள்.

ஷைலஜா, தான் சொல்லுவதே உண்மை என்றும், அவன் பொய்யன் என்றும் நகர்கின்ற ஒவ்வொரு நிமிடத்தையும் நம்ப வைத்துக் கொண்டிருந்தாள்.

அமைதியாக இவன் மது அருந்தி விட்டு வரும் போது ''என்னையா? சாப்பிட்டுட்டு வந்துட்டியா?'' என்று கூச்சல் போடுவாள். அவனிடமுள்ள ஒரே ஒரு பலவீனத்தைத் தனது பலமாக மாற்றிக் கொண்டு, அதைக் கொண்டாடுவதற்காக வானொலியில் வரும் விளம்பரதாரர் நிகழ்ச்சியைப் போல, பத்து மணிக்கு மேல் அவள் சத்தம் போடுவாள்.

ஷைலஜா! ஒரு விசித்திரமான பிறவிதான். அவளை மையப்படுத்தியே குடும்ப உறவுகள் இயங்க வேண்டும் என்ற ஆசை அவளுக்குள் மலர்ந்தது. அந்த மலர்ச்சி அவனுடைய வாழ்க்கையைப் பாலைவனமாக்கியது.

பாலைவனமாவது அவனுடைய வாழ்வுமட்டுமல்ல, சந்திரனின் வாழ்க்கையும் தான்!

சந்திரன், அவளாலேயே ஒரு கடுமையான வக்ர மோகீயாக இளம் வயதிலிருந்தே வளர ஆரம்பித்தான். உயர் தரக் கல்வி நிலையங்களில் அவனைச் சேர்த்த போதும், மேட்னிஷோ விளம்பரங்களே அவனுக்கு மகிழ்ச்சியை தந்தன—எப்படியோ, அபூர்வமான இயற்கை அறிவினால் கல்லூரி வரை வந்து விட்ட அவன் இந்த சமூகத்தை எதிர்க்கின்ற கலகக்காரனாக மாறிவிட்டான். இளம் வயதில் ஒவ்வொரு இளைஞனும் பிரபலமான கூட்டத்தில் சேரவே ஆசைப்படுவான். சந்திரனும் அதைப் போலவே, கஞ்சாத் தூள் நிரம்பிய சிகரெட்டை இழுத்துக் கொண்டு மேல் நாட்டு இலக்கியங்களைப் பற்றிப் பேசுகிற கூட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டான்.

இலககியம் வாழ்க்கையைக் காட்டுகிற கண்ணாடி என்று சொல்லி விட்டு தாங்களே கண்ணாடி போட்டுக் கொண்டே பரிதாபமான இளைஞர்கள் அவர்கள்.

அன்று கல்லூரிக்குப் பக்கத்தில் கூட்டம் நடைபெற்று கொண்டிருந்தது. அது சமாதான சபையின் ஆண்டு விழா. "பக்கத்தில் உள்ள சிறிய இடம் கல்லூரிக்குச் சொந்தமானதா? இல்லை சமாதான சபையினுடையதா? என்ற வழக்கில், தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் வாதாடி வரும் வழக்கறிஞர், சபையின் தலைவர். அவர் சமாதானத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

அவர் ஒரு அரசியல் கட்சியின் ஆதரவாளராகவும் இருந்தார்.

அந்த கட்சியில் இரண்டு பேர் கோஷ்டி சேர்த்துக் கொண்டிருந்தனர். தலைவர் அவர்களை உலக சமாதான மாநாட்டிற்கு அனுப்பியிருந்தார்.

அவருடைய நண்பர், ''இவர்களைப் போய் இந்த மாநாட்டிற்கு அனுப்பலாமா?'' என்று கேட்டபோது.

''இதனால் உலக சமாதானம் ஏற்படாவிடினும் இவர்களுக்குள்ளாவது சமாதானம் ஏற்படுமே'' என்று தலைவர் சிரித்துக் கொண்டே சொன்னாராம். ஆனால், அந்த சமாதான சபைக் கூட்டத்தில் கடுமையான விவாதங்கள் மட்டுமே எழுந்தன. சந்திரன் கஞ்சா போதையில் மயங்கிய நிலையில்தானும் கேள்வி கேட்க வேண்டும் என்ற ஆதங்கத்தோடு, ''சுவாமிஜி மனம் என்பது எங்கே இருக்கிறது?'' என்று கேட்டான்.

சுவாமி சிரித்துக் கொண்டே சொன்னார். அது உனது கேள்வியில் இருக்கிறது.

பாகம் : 5

இரண்டு பக்கமும் மரங்களடர்ந்து நிற்கும் நதிக் கரையில், நாகப்பன் மனம் வெறுத்து நின்று கொண்டிருந்தான். வானத்திலிருந்து மேகங்கள் துளித் துளியாய் உதிர்ந்து விழுந்தன! சிறுவர்களோடு நாகப்பன் இறக்க பாதையில் வேகமாக ஓடி மாந்தோப்புக்குள் புகுந்தான்.

அங்கே ஒரு விளாமரம் தனியாக நின்று கொண்டிருந்தது. நெடுக்கமான ஓட்டிற்குள்ளே துவர்ப்பாக கூடு கட்டி இருக்கும் விளாம் பழங்களை உடைத்துச் சுவைத்துக் கொண்டே பெண்கள் உற்சாகமாகத் தோட்ட வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

இரண்டு கால்களும், விரல்கள் இன்றி மொட்டைச் சதையாக ஊனம் கொண்ட கோலத்தில், அங்கே ஒரு பெரியவர் இருந்தார். அவர் ஏணி வைத்து,வீட்டு மொட்டை மாடியில் ஏறுகிற காட்சியைச் சிறுவர்கள் நடித்துக் காட்டி,

விளையாடிக் கொண்டிருந்தார்கள். விடலை வயதுப் பெண்கள் மழைக் குளிருக்கு இதமாகக் கிழங்குகளை வேக வைத்து தின்று கொண்டிருந்தார்கள்.

பெரியவர்களெல்லாம் கேரளப் பாணியில் ஓலைக் குடைகளைப் பிடித்துக் கொண்டு அழுக்காகிப் போன சேற்று கால்களை தண்ணீரிலும் முன்னும் பின்னும் பக்க வாட்டிலும் எடுத்து வீசிக் கழுவிக் கொண்டு தோப்புக்குள் வந்தார்கள்.

நாகப்பன் நெஞ்சுக்குக் கணப்பு போடுகிற மாதிரி குத்துக் காலிட்டு உட்கார்ந்து கொண்டு, ஈரப் பதமுள்ள தீப்பெட்டியில் ஐந்தாறு முறை குச்சிகளை உரசி வெள்ளை தழும்புகளை உண்டாக்கி விட்டு, தப்புக் கடலை எடுக்கிற மாதிரி, தீக்குச்சி சூடிக் கொண்டிருக்கும் இளம் நெருப்புச் சுடரை வெளியே கொண்டு வந்து, இரண்டு கைகளின் குவிப்பிற்குள் தலைகீழாகப் பிடித்தபடி சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

மாமாவின் வசை மொழிகள் அவனைக் கலங்க வைத்தன. எஸ்டேட்டுக்குப் போனவர் அவனது தவறு களையெல்லாம் கண்டு பிடித்து விட்டார். ஒழுங்கற்ற வரவு செலவுக் கணக்கு, அவன் நடத்திய பெண் வேட்டைகள் எல்லாமும் அவனைக் காட்டிக் கொடுத்து விட்டன. அவனுடைய அடியாட்களே மாமாவைக் கண்டதும் அவனுக்கு எதிராக மாறிவிட்டனர்.

தாங்க முடியாத வேதனையில், அவன் லாட்ஜை விட்டு வெளியே வந்து, காலார நடந்து தொலை தூரம் வந்து விட்டான்.

மழைத்தூரலுக்குச் சாக்குகளை ஒரு நீளமான ஓலைக் கூடு மாதிரி மடித்துத் தலையில் போட்டுக் கொண்டு பெண்கள் ஏலக்காய் எடுத்துக் கொண்டிருந்தனர். பருவம்

அடைவதற்குக் காத்திருக்கும் கருத்த உடம்பு கொண்ட பாவாடைக் காரிகளோடு, கோயில் மாடு மாதிரி வந்த சில வாலிபர்கள் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஈரக் காற்று மூக்கைத் துளைத்து, மழையிலே கரைந்து போன மேகம் மறுபடியும் பூமியிலிருந்து வானத்திற்குப் போவது போல் காள வாசலில் புகை மூட்டம் கிளம்பியது. அதற்கருகே சாம்பல் பூத்த தரை. காள வாசலை தாண்டி இரண்டு பக்கத்திலும் குடிசை வீடுகள்.

மேலாடை இல்லாமல், கட்டிய சேலையிலேயே, மாரப்புச் சுற்றிக் கொண்டு கொண்டைப் போட்டுப் பூச் சூடாமல் ஓய்வு கொண்டு வெற்றிலை உருளை இடித்துக் கொண்டிருந்த பெண்கள். கருப்பிக்குப் பிறந்த சிவப்புக் குழந்தையைப் போல் அந்த மழை மூட்ட இருளைக் கீறிக் கொண்டு தீடிரென வெயில் அடித்தது. உடனே, ''காக்காவுக்கும் குருவிக்கும் கல்யாணம்'' என்று சிறுவர்கள் பாட ஆரம்பித்தார்கள்.

பொற் கொல்லத் தெருவிலிருந்து நாகப்பனின் நண்பர்கள் சில பேர் சாராயக் கடைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களோடு நாகப்பன் கலந்து கொண்டான். எஸ்டேட்டை விட்டு, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இவர்களோடு வந்து கலந்து கொள்வது அவனுக்கு வாடிக்கை.

வழியிலே ஒரு பெட்டிக் கடையில் கடைக்காரர் கருத்த உடம்புக்கு பொன் முலாம் பூசுகிற மாதிரி, பருவம் பூத்த தனது புஷ்பிணி மகள் யாரோ ஒருத்தியை அங்கே உட்கார வைப்பார். அந்த வீட்டுக் குழந்தைகள் எல்லாம் வயது வந்ததும் பகல் நேரத்தில் இப்படிப் பெண் பார்த்துக்கொண்டு வருகிற மாப்பிள்ளைகளைப் போல் கடைக்கு வருகிற வாடிக் கைக்காரர்களை யெல்லாம் பார்த்து விட்டு, இரவுகளில் லாட்ஜில் வெளியூரிலிருந்து வரும் நாகப்பனைப் போன்ற

பணக்கார ஆண்களின் உடனிருப்பில் அலங்கோலம் கொண்டவர்கள். அழகாகக்கொண்டயை முடித்துவிட்டு முகத்திலே பூவைத்துக் கொள்வது போல், அந்த பெண்கள் புன்னகை செய்வார்கள். கொஞ்ச நேரம் அவர்களின் கைகளைத் தொட்டுக் கொண்டிருந்து விட்டு சாராயக்கார ஆண்கள் திண்பண்டம் வாங்குவார்கள்.

அந்தத் தீண்டுதல்களை விளம்பரப் படுத்தக் கூடாது, என்பதற்காக அவர்கள் வளையல்களை முன் கையிலிருந்து சதைப்பிடிப்பான பகுதிக்கு ஏற்றி அங்கே மௌனம் கொள்ளச் செய்வார்கள். நாகப்பனும், நண்பர்களும் அங்கே அமர்ந்திருந்த கடைக்காரரின் கடைசி மகளின் கன்னத்தைக் கிள்ளி விட்டு நடந்து போய்க் கொண்டு இருந்தார்கள்,

சாரயக் கடைக்குச் சமீபமாக அவர்கள் வந்து விட்டார்கள். நாகப்பனுக்கு லேசான ஆஸ்த்மா தொல்லை உண்டு. சாராயக் கடையை அவர்கள் தரிசித்த போது நான்கு புறமும் பனிமூட்டம். திசைகளே அவனுக்குக் கல்லறை கட்டுகிற மாதிரி நாகப்பனுக்கு சவக்களை தட்டு கிறது.

உடம்பு தானாகவே குளித்துக் கொள்வது போல் பிரவாகம் கொண்ட வேர்வை. சுவாசம் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்து விட்டது போல் மூச்சுத் திணரலில் நெஞ்சுக்குள், சோகங்களின் இறைச்சலாய் ஊஞ்சல் கட்டி ஆடும் இருமல்-பாறையில் கடலலைகள் மோதுவது போல் நெஞ்சில் மோதுகிறது. 'ஒ' வென்ற அலைச் சத்தம் போலவே நெஞ்சம் இறைகிறது. ஒரு மாத்திரையை நாகப்பன் விழுங்குகிறான். தொட்டாற் சுருங்கியாய் இருமலின் சலனம் குறைகிறது. நண்பர்கள் அவனைக் கைத்தாங்கலாக அழைத்துச் சென்று சாராயக்கடையில் உட்கார வைக்கிறார்கள். கடைக்கு முன்பு இரு புறமும் வரிசையாய்த் தட்டுகளில் பதார்த்தங்கள் வைக்கப்

பட்டிருக்கும் கடைகள் கோயிலுக்கு போவதற்கு முன் இரு புறமும் தேங்காய் விற்கும் காட்சியை நினைவு படுத்து கின்றன.

நாகப்பன் பெஞ்சில் உட்கார்ந்து இருந்தான். கோழிக்கறி வருவலும் தோங்காய்பூ தூவப்பட்ட ரத்தப் பொறியலும், மிச்சரும் அவனுக்கு எதிரே வைக்கப்பட்டது. அவன் சாரயம் குடித்து விட்டு அவைகளை சாப்பிட்டான்.

தலை கனப்பது போல் தெரிந்தது. மனசிற்குள் கற்பனைக்கதை பூதங்கள் இடம் பிடித்துக் கொண்டு, பிறகு விசுவரூபம் கொள்வது போல் ஒரு திமிர் ஏறியது. பிறந்த நாள்முதல் சாப்பிடாமலேயே இருந்தவனுக்குப் பல நாட்கள் கழித்து ஒரேயடியாக அத்தனை நாட்களுக்குச் சேர்த்துப் பசித்த மாதிரி நாகப்பனுக்குப் பசியெடுத்தது.

நண்பர்கள் வாழைப் பழங்களை உரித்துக் கொடுத் தார்கள்—காமுகனுக்கு முத்தம் கொடுக்கிற மனைவியைப் போல் வாழைப்பழம் அவனுள் ஒரு அசுர வெறியை உண்டாக்கியது மிக்சரத் தின்னும் போது, காரம் வருத் தாமல் ரோஜாப்பூ இதழ்களைத் தின்னுவது போல் பூப் பூவாக இருந்தது.

ஒரு சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்ட போது அவன் கொள்ளிவாய்ப் பிசாசு போல் தோற்றம் காட்டினான் அவன் ஊஞ்சலாடிக் கொண்டே தலையைத் தூக்கி கழுத்தை ஆட்டி, இடது கைச்சுட்டு விரலை நீட்டி உதடு களில் புன்னகை பூத்து, கண்களில் அலட்சியம் எறிந்து 'ஏ' என்று தரையில் கால் மிதித்து இது மதுவின் கனவுகள் சிருஷ்டித்த சொர்க்கம் தான் என்று அடையாளம் கண்டு கொண்டு, நெகிழ்ந்த வேட்டியைக் கட்டினான். ஊரின் முகப்பில் உள்ள ஒரு தோட்ட வீட்டுக்கு அவனை நண்பர்கள் அழைத்துச் சென்றார்கள்.

அந்த வீட்டில் காப்பி கொட்டைகள் நிரப்பப் பட்டிருந் தன. மழை நாட்களுக்கு அது வெது வெதுப்பாக இருக்கும். அங்கே ஒரு அக்காள் இருந்தாள். அவளை இந்த நண்பர்கள் அடுத்தவர்களுக்காக 'அக்கா' என்றே அழைப்பார்கள்.

அவள் அந்தப் போர்வையில் மழை நிலங்களின் பின்னிரவுகளில் மெதுவாக வந்து, ஒரு அதீதமான மன்மத நாடகத்தின் பாத்திரமாக மாறி இவர்களை வீட்டிற்கு அழைத்து சென்று பெருமூச்சு விடுவாள். அணைத்துக் கொள்வாள்.

அவள் அணைக்கும் போது, கணப்புப் போட்டு தூங்கு வது போல் இருக்கும்—இவர்களை விட, அவள் அதிக வயதுடையவள். அவர்களெல்லாம் இவளுடைய தாக்கு தலில் 'வக்ர மோகம்' கொண்டு இவளின் பட்டுப்பூத்த மேனியிலுள்ள சிவந்த, இனிக்கும் மணம் பரவும் உதடு களைச் சுவைத்து நீர்த்துப் போனார்கள்.

அவள் யாரையோ காதலித்து, இங்கே கிழவனின் மனைவியாக வந்தாள். அன்று அந்தக் கிழவன் மணலித் தோட்டத்திற்குப் போய் விட்டான்.

அவளுக்கு ஜாதிக் குதிரை போன்ற உடல் வாகு. ஆளைத் தூக்கி எறிகிற கம்பீரமான தோற்றம் இவர்களை அடித்துப் போட்டு விட்டது.

அந்த மலடியின் ஆக்ரமிப்பில் சரிந்து தோற்றுப் போனவர்கள் முதன் முதலாக நாகப்பனை அங்கே அழைத்துச் சென்றனர். அவள் காமத்தின் விருந்து மண்ட பத்தில், இரக்கத்திற்குரிய ஒரு பிச்சைக் காரியாய் நின்று கொண்டிருப்பவள் என்பதை நாகப்பன் முதல் பார்வையி லேயே புரிந்து கொண்டான்.

அந்த நண்பர்கள் எல்லாம் அவளோடு இளநீர் குடிப்பதைப் போல் புகைப் படம் எடுத்துக் கொண்டவர்கள். காதலுக்குத் தைலம் பூசி விட்டவர்கள்.

நண்பர்கள் நாகப்பனை விட்டு விட்டுச் சென்றார்கள் அவள் கீழே பாயை விரித்த போது, மழை பொழிய ஆரம்பித்தது. குளிருக்கு இதமாகப் போர்வையை இழுத்து மூடும் போது நாகப்பன் வந்தான். எல்லாமே பூவாகி வந்த உடம்புக்கு அவன் ஆடையானான்.

போர்வை விலகிப் போய் விட்டது. முதன் முதலாகத் தான் ஆசைப் படுவது அவனுக்குத் தெரிந்தது. மூங்கில் புதர்களைப் பணிமூட்டம் மூடுகிறது. தொடர்ச்சியாக மழை பொழிகிறது. வெளியே வாகனங்களில் ஓசை, டீக்கடையிலிருந்து பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன—சில பேர் டீயும், பன்னும் சாப்பிட்டுவிட்டு கொசுக் கடியில் நடந்து போனார்கள்.

அவள் நாகப்பனோடு சரிசமமாய்ப் போராடிக் களைத்து வீழ்ந்து மறுபடியும் போராட இரவு தொடர்கிறது. அவள் இதுவரை தன்னை ஆளுகின்ற ஒரு ஆண் மகனைத் தேடவே, உடம்பெல்லாம் ஆடைகட்டி, தனது அழகை கண்ணா மூச்சி ஆட விட்டாளோ என்ற கேள்வி அவளுக்குள்ளேயே எழுகிறது.

அதற்கு 'ஆம்' என்று பதில் சொல்வது போல் சாரல் மழை, பேய் மழையாக மாறி வெளியே பெய்து கொண்டிருந்தது.

பாகம் : 6

ஜன்னல் கம்பிகளைப் பிடித்தவாறு, அவன் வெளியே கிடந்த தரைப் பூக்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். வந்து நாட்களாகி விட்டன! திட்டமிட்டபடி ஊர் திரும்ப முடியவில்லை. எஸ்டேட்டிலும் கிராமத்திலும்,

நாகப்பனைப் பற்றிக் கேள்வி பட்ட செய்திகள் மனதிற்குத் தொய்வை ஏற்படுத்தி விட்டன.

இரவு வெளியே போன நாகப்பன் இன்னும் திரும்ப வில்லை. வேட்டையாட வந்தவனைப் போலப் பொறுப் புணர்ச்சியற்று அவன் அலைந்து கொண்டிருந்தான். நகரத்திற்குப் போனால் .. ஷைலஜா!... எஸ்டேட்டுக்கு வந்தால் நாகப்பன்.

அவனுடைய வாழ்க்கை ஒரு விஷ வட்டத்திற்குள் அடங்கி ஒடுங்கி மூர்ச்சையாகி விடுமோ என்று துயரம் கொண்டான்!

ரிஷப்ஷனிஸ்டின் அன்பு ஒன்றுதான் அவனுக்கு ஆறுதலாக இருந்தது. வாழ்வில் சுய வெறுப்புக் கொண்டு, அலைந்து அவனது நேசம், அவளிடம் தன்னை அலங்காரம் செய்து கொண்டதில் வியப்பில்லைதான்!

அவள் வேலை நேரம் முடிந்ததும், எல்லோருக்கும் தெரியும்படியாக, இருவரும் விவாதித்துக் கொண்டிருப் பார்கள்!

அவனுடைய மனதிற்கேற்ற கனவுகாணும் தோழி யாகவே அவள் வாய்த்து விட்டது, பழைய நாட்களுக்குத் திரும்பிப் போன மாதிரி உற்சாகமாக இருந்தது.

மாணவப் பருவத்தில் கடுமையான வறுமைச் சூழ் நிலைகளுக்கிடையிலும், அவன் தன்னை ஒரு சுய சிந்தனையாளனாக வளர்த்துக் கொண்டு, எப்போதும் நண்பர்கள் கூட்டத்தோடு வலம் வந்தான்! ஒரு முறை ஊரில் இவர்கள் ஒரு ஏழுபேர் ஓட்டலுக்குப் போய், வடை சாப்பிட்டு விட்டு வந்தனர். சர்வர் அப்போது, ஏழுபேர், ஒண்ணே முக்கால்ணா" என்று சத்தம் போட்டு, பில்லைச் சொன்ன காட்சியை இப்போது பார்ட்டிகளுக்குப் போகிற நேரங்களில் எல்லாம் நினைத்துக் கொள்வான்:

அவனிடம் இத்தகைய சம்பவங்களையெல்லாம், மனம் விட்டுப் பேசிக் கொண்டே நடந்து போய்க் கொண்டிருந்த போது, ஏரிக்கரை வந்தது. அங்கே இருந்த சிமெண்ட் பெஞ்சில் அவர்கள் அமர்ந்து கொண்டார்கள்.

"என்னங்க! இப்படிப் பெருமூச்சு விடறீங்க!"

"ஒரு முடிவெடுக்க வேண்டிய நிலைக்கு வந்துட்டம்மா!"

"என்னாலே உங்க வாழ்க்கை சீரழிஞ்சுறக் கூடாது! அந்தப்புரத்துல மட்டும் வசிக்கிற காதலி மாதிரி உங்க அந்தரங்கத்தோடயே இருந்து முடிஞ்சிட்டாப் போதும்.

"அதெப்படி, எனக்கு வாழ்க்கைலே எல்லாமே இருந்தது ஆனா, நிம்மதி மட்டும் இல்ல. நீ அதைக் கொடுத்த. உன்கிட்ட எதுவுமே இல்ல; நிம்மதி மட்டும் இருந்தது. நான் உனக்கு எதையுமே கொடுக்காம உங்கிட்ட இருந்ததை மட்டும் எடுத்துக்கிட்டேனே. இது நியாயமா?

"என்னையவே நீங்க எடுத்துக்கிட்டா எதுவுமே மிச்சமா யிருக்கத் தேவையில்ல"

"அதான் நானும் சொல்றேன். இப்படி ஐக்கியமாயிட்ட பிறகு, பேதமெதுக்கு? நான் உன்னை கல்யாணம் பண்ணிக் கலாம்ன்னு நினைக்கிறேன்?"

"ஐயா, உங்க அந்தஸ்து என்ன? நான் சாதாரண லாட்ஜ் வேலைக்காரி"

"வீட்டுக்காரி நல்ல வேலைக்காரியாயிருக்கணும். இல்லீன்னா, வேலைக்காரி வீட்டுக்காரியாகறதுல, தப்பே இல்லியே."

"இப்ப எதுக்கு இந்த வேண்டாத பேச்செல்லாம்? முதல் தரமான காதல், கருத்துல இருக்கணும். இரண்டாந்தரக் காதல் சம்பவங்கள்ல வளரும், மூணாந்தரந்தான் நபர்களை அடையாளம் காட்டும். இந்த அதிசயம், ரகசியமாகவே இருந்து அழிஞ்சிறட்டும்."

"இல்லம்மா? நீ உணர்ச்சி வசப்படற, ஒரு முடிவுக் காகத்தானே யாரும் புறப்படுவாங்க."

"சில நேரங்கள்ல, முடிவெடுத்துக்கிட்டும் புறப்படுகிற லட்சியப் பயணங்களும் உண்டுதானே?"

"என் மனைவி வருத்தப்படுவாளேன்னு பார்க்கிறியா?"

"மனைவி, பையன், சொத்து, சுகம்னு வேர் விட்டு விருட்சமான குடும்பம் என்னாலே பாழாயிடக் கூடாது!"

என்ன குடும்பம்! அதோட எனக்குன்னு வாய்ச்ச மனைவி ரொம்ப வித்தியாசமானவ!"

"ஏங்க, பாவம், அவங்களை நொந்துக்கிறீங்க."

"இல்லம்மா, வறுமை வந்தாக் கூடத்தாலியை விட்டுட்டு, மற்ற நகைகளைத்தான் நம் பொண்ணுங்க கழட்டுவாங்க! ஆனா, இவ வசதி வந்தவுடனே தாலியைத் தவிர, எல்லா நகைகளையும் கண்ணிலே ஒத்திக்கிறாள்!"

"நடந்ததையே நினைச்சுட்டு இருந்தா எப்படிங்க. பையனுடைய எதிர்காலத்தையாவது நல்லபடி கொண்டு வர வேணாமா?"

அதை ஏம்மா கேக்கறே ஆஸ்திக்கு ஒரு பையன்; ஆசைக் கொரு பொண்ணுன்னு சொல்லுவாங்க! ஆனா என் ஆஸ்தி, ஆசை எல்லாத்தையும் அழிக்க ஒரே ஒரு பையன் போதும் போல இருக்கே!"

“சரி! சரி! ரொம்ப சீரியஸ் மூட் வேணாம்! கையிலே ‘வன வாசம்’ புத்தகம் தானே. படிச்சிட்டீங்களா?

“இல்லம்மா? படிச்சுக் கிட்டே இருக்கேன் அற்புதமான கவிஞன்.”

“அப்படியா?”

“ஆமா, நாங்க, படிச்சுட்டிருந்தப்போ,ஒருதரம் இருபது மைல் நடந்து போயி அவரோட பேச்சைக் கேட்டோம்.

காதல் வெற்றியடைந்தால் அது வெறும் காரியம்? தோல்வியடைந்தால் அது ஒரு காவியம்ன்னாரு! மறக்கவே முடியல! காமமும் கொலை வெறியும் இலக்கியமாயிட்டிருக்கிற இந்தக் காலத்தில இதையெல்லாம் நினைக்க சுகமாகத்தான் இருக்கு!”

அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது நாகப்பன் தனது ஆட்களுடன் குடிபோதையில் வந்து கொண்டிருந்தான்? அதைக் கண்டதுமே, அவன் குன்றிப் போய் விட்டான்!

மனம் சோகத்தின் துருவப்பிரதேசமாய் நடுக்கம். இருட்டிலே தொலைந்து போன வெளிச்சம் போல் அவன் சுய நினைவிழந்தான்.

அருகே வந்த நாகப்பன், லாவணி மெட்டில் பேச ஆரம்பித்தான்,

“என்னமச்சான், மலைக்குப் போனாலும், மாமன் மச்சான் தயவு வேணும்.

“நாகப்பா, ஏற்கெனவே உன் நிலமை சரியில்ல. இப்ப எதுவும் பேச வேணாம். வா! ரூமுக்குப் பேகலாம்!”

“ரூமுக்குப் போற கேஸ்தான் நீ. வேறெப்படிப் பேசுவே. கேளுங்கப்பா நியாயத்தை.”

“மாப்பிள. பணம் வேணுன்னாலும் வாங்கிக்க. போய் சாப்பிட்டுவா! பிறகு பேசலாம்.”

“என்ன மச்சான், ஊராத்திக்கு மளிகைக் கடை வச்சிட்டு, எனக்கு மஞ்சள் துண்டைக் காட்டறியா? எங்கக்காவுக்கு இப்பவே தந்தி அடிக்கிறேன்” என்று சத்தம் போட்டுக் கொண்டே, நாகப்பன் போய் விட்டான்.

இமயமலை மீது சேறு பட்டது போல் அவள் வருந்தினாள். பழக்க மற்ற ஆர்ப்பாட்டங்களும், வார்த்தையின் ஆபாசமும் அவளை நடுங்க வைத்தன. அவளுடைய கண்ணீரைத் துடைத்தான். தோள்களைத் தட்டிக் கொடுத்தான்.

வாழ்வில் தனக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்கள், நழுவிப் போனது போல் இதுவும் ஆகிவிடக் கூடாதே என்று உறுதியாக நினைத்தாள்.

“என்னம்மா, ரெம்ப வருத்தமா?”

“இல்லீங்க. இவ்வளவு நடந்தபிறகு, உங்க முடிவுக்கு நான் கட்டுப் படறேன். இதில, என்னோட சுய நலமும் இருக்கு.

நாகப்பன் வந்ததிலிருந்தே என்னை ஒரு மாதிரி பார்க்கிறான்! இப்ப, நம்ம தொடர்பைச் தெரிஞ்ச ஆத்திரத்தில் ஏதாவது செஞ்சுட்டா?”

“நீ, முடிவெடுத்த நேரம். ரொம்ப நல்ல நேரம். வா! இப்பவே அதை நிறைவேத்திருவோம்.”

பச்சைப் போர்வையாகப் புல்வெளி. திசையெல்லாம் நெருப்பு வட்டம் போடும் பூக்கள், காற்று, தொட்டு விளை யாடிக் கொண்டிருந்தது.

மப்ளரைத் தலையில் சுற்றிக் கொண்டு மசால் வடையும், டீயும் என்று குளிருக்கு இதமாகக் கிராமவாசிகள் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.

பனிக்காற்றில் புகைச்சலோடு பல கூலிகள் வீட்டுத் திண்ணைகளில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவர் களில் சிலர், ஊமத்தம் பூ இலைச் சுருட்டைக் குடித்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு இது ஒன்று தான் மருந்து, வீட்டிற்கு வந்த விருந்தாளிகள் மலைக்குளிரில் சரியாகப் பசியெடுக்காததால், ஏதோ வெந்ததைத் தின்று விட்டு வெளியே வந்தார்கள்.

என்ன செய்வது? அங்கு வந்த விருந்தாளிகளுக்கு, மருந்து போன்ற சாப்பாடு தான் கிடைத்தது.

இரவிலே கொசுத் தொல்லை வேறு, ஆம். அவர்கள் பகலெல்லாம் மருந்து சாப்பிட்டு விட்டு, இரவெல்லாம் ஊசி போட்டு கொண்டார்கள்.

ஊர்க் கடைசியில் இருந்த பங்களா மேட்டில், முருகன் கோவில் இருந்தது. உச்சி பூஜைக்கால ஓசை ஒலிக்க ஆரம்பித்தது. கல்லும் கனியாகும். ஆனால் கல்லே குழந்தையானது போல், முருகன் காட்சியளித்தான். இரு புறமும் பூஜைத் தட்டுகள். பல ஓதுவார்கள் கீத மிசைத்துக் கொண்டு இருந்தனர்.

அவன் அவளுடைய கரம் பற்றி கோவிலுக்கு அழைத்து வந்தான். முருகனைச் சாட்சி வைத்துத்தாலி கட்டினான்.

மௌனமாக அவர்கள் ஊரோரத்து மலைப்பாதையில் அடுத்த ஊருக்கு நடந்து போனார்கள்.

அங்கிருந்து ஒரு பர்லாங் தொலைவில்தான் அடுத்த ஊர் இருந்தது. அவள் பிரியப்பட்டாளென்பதற்காக அங்கே இருவரும் போனார்கள்!

சந்தையில் பெண்களுக்கு வேண்டிய மாலைகள், பூ, தந்தப் பொருட்கள் விற்பனையாகிக் கொண்டிருந்தன. வேண்டிய பொருள்களை வாங்கிக் கொண்டு அவர்கள் லாட்ஜுக்கு வந்தார்கள்.

நாகப்பனை அங்கே பார்க்க முடியவில்லை. லாட்ஜ் இருண்டு கிடந்தது. மின்சாரவெட்டு ஏற்பட்டிருப்பதாய்ச் சொன்னார்கள் அறையில், அவள் மெழுகுவத்தி ஏற்றி வைத்தாள்.

"இது கூடத் தேவையில்லையே" என்றான் அவன்.

சில மாணவர்கள் முதல் முறை பரீட்சையில் தோற்று விட்டு, இரண்டாவது முறை வெற்றி பெறுவது போல இரண்டாவது கல்யாணத்தின் போதுதான் உண்மையான முதலிரவைக் கொண்டாடினான்.

அவன் ஜன்னலின் வழியே தேனிலவைப் பார்த்துக் கொண்டிருந்தான்? அவனுடைய கனவுகள், எல்லை தாண்டிப் போய், ஒரு சிறிய உயிருள்ள கனவுக்கு, நிலாச் சோறு ஊட்டிக் கொண்டிருந்தன. அவன் கணவனானான்; அவள் தாயானாள்.

பாகம் : 7

கடல் நடுவே வலை வீச்சில் ஒரு சாய் சதுரமான கோணத்தில் தூக்கி நிறுத்தப்பட்ட படகைப் போல இருந்த மலைப் பாறையில் நாகப்பன் தனது ஆட்களோடு உட்கார்ந்திருந்தான்.

மலையிலிருந்து தற்கொலை செய்வதற்காகக் குதித்துக் காயப் படாமல் எழுந்து பைத்தியம் பிடித்து ஓடும் ஜலராணி யாய் அருவி கீழே விழுந்து, நதியாக நடந்து கொண்டி ருந்தது.

தண்ணீரின் மிகச் சிறிய தவளைகள் கொசுக் கடியின் அளவில் பாறையின் மேல் இருந்தவர்களின் உடம்பை சுகமாய்த் தொட்டபோது,

இந்தத் தண்ணீர் மட்டும் கடிக்காமல் முத்தமிடும் தேவலோகத்துக் கொசுக்களை உற்பத்தி செய்கிறதோ? என்று சந்தேகம் ஏற்பட்டது.

இரும்புக் குழாய்களில் தடுப்புச் சுவர் எழுப்பப் பட்டி ருந்தது. கோதாவில் நிற்கும் மல்யுத்த வீரர்களைப் போல் சில இளைஞர்கள் அருவியில் குளிப்பதற்காக நின்றிருந் தார்கள். பல பேர் குளித்துக் கொண்டிருந்தார்கள்.

ஏற்றப் பாதையில் வீசுகிற காற்றுக்கும் நதி ஓட்டத் திற்கும் பிடிபடாமல் சாய்ந்து சாய்ந்து நடந்து கொண்டு லேசாகக் கீழாடையைக் கையில் பிடித்த படி ஆண்களும், பெண்களும் அருவியை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

அரச மரத் திண்ணைக் கோவிலில் சக்தி வாய்ந்த அம்மன் சிலை திரிசூலம் நடுவில் செருகப்பட்ட எலுமிச்சம் பழம். பிள்ளை வரம் வேண்டி வந்த பெண்கள் மரத்தில் சிறு சிறு தொட்டில்களைக் கட்டிக் கொண்டிருந்தனர்.

கூட்டத்தோடு பாறையில் உட்கார்ந்திருந்த நாகப்பன் உடம்பு முழுவதும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு தனது எண்ணங்கள் நிறைவேறாத மனவேதனையில் அதற்கெதி ராக நின்ற சக்தி வாய்ந்த மாமனை எதிர்க்க முடியாத கசப்பான அனுபவத்தை மறப்பதைப் போல் நீண்ட நேரம் அருவியில் குளித்தான். மன வெப்பத்துக்கு அது இதமாக இருந்தது.

மறுபடியும் பாறைக்கு வந்து, புளியோதரை சாப்பிட்டான். அப்போது அவனுடை வேலைக்காரன் ஓடிவந்தான். அவன் கையில் ஒரு 'தந்தி' இருந்தது. அக்காவுக்கு உடம்பு சரியில்லை. உடனே அவன் ஊருக்குப் புறப்பட்டாக வேண்டும்.

மாமனுக்கும் இதைப் போலச் செய்தி வந்திருக்கும் என்ற நினைப்பில் பதட்டத்தோடு புறப்பட்டுச் சென்றான்.

கணவனையும், தம்பியையும் வசையாடிக் கொண்டே, ஷைலஜா வீட்டில் படுத்திருந்தாள். பக்கத்தில் நின்ற சந்திரனை சபித்தாள். அவளுடைய பரம்பரையே 'ஆஸ்துமா' வியாதியில் அவஸ்தைப்படும் கூட்டம். டாக்டர் எவ்வளவோ, எடுத்துச் சொல்லியும் தானும் ஒரு டாக்டர் என்பதையும் மறந்து விட்டு அவள் புலம்பிக் கொண்டிருந்தாள்.

இது ஒரு நோயே அல்ல, மன உணர்ச்சியின் அவஸ்தை ஒரு மேல் நாட்டுப் பெண்ணுக்கு சைலஜாவைப் பார்த்ததும் மூச்சுத் திணறும். காலண்டரில் அந்தப் பூவை பார்த்தாலும் அவள் அவதிப் படுவாள். இதெல்லாம் அவளே படித்த செய்திதான். இனி ஒரு பெண் கணவன் வீட்டிலிருக்கும் போது, இந்த நோயால் கஷ்டப் படுவாள். அடுத்த தெருவில் இருக்கும் அம்மா வீட்டுக்குப் போனதும் நோய் குணமாகி விடும்.

ஆனால், என்ன செய்வது? ஷைலஜாவின் அம்மா வீடு இப்போது அடுத்த உலகத்திலேயே இருக்கிறது. அதோடு ருசி தேடிய நாக்கு, ரத்த அழுத்தம் போன்ற பல வியாதிகளையும் அவளுடைய உடம்பில் உருவாக்கி விட்டது. இதே வீட்டில் பட்டத்து ராணியைப் போல அவள் ஆட்சி செய்த பழைய நாட்கள் ஞாபகத்திற்கு வந்து அந்தக் கல் நெஞ்சுக் காரியை மெதுவாக அழ வைத்தன.

வியாதியால் மனிதர்களுக்கு ஆபத்து வருகிறது. ஆனால் அப்போதுதான் மனிதத் தன்மையும் அவர்களுக்கு வருகிறது. தனது நல்ல வாழ்வைத் தானே பாழடித்துக் கொண்டதைப் போன்ற சந்தேகப் பேய் அவளைப் பிடித்து ஆட்டத் தொடங்கியது.

அப்போது அவளுடைய கணவன் வேகமாக உள்ளே வந்தான்! ''வாங்க. போற நாள் வர்றப்பதான் போனவங் கள்ளாம் வருவாங்களாம்.

பயணக் களைப்போடு உள்ளே வந்தவன், வழக்கம் போல, அவளுடைய வார்த்தைகளை அலட்சியம் செய்து விட்டு, வீணா மனதை அலட்டிக்காத ஷைலஜா. இப்ப என்ன ஆயிட்டது? இது அடிக்கடி வர்றது தானே, என்றான்.

'உம்ம புத்தியைக் காட்டீட்டீரே! இனிமேல் இது வர்ராதுய்யா? ஓரேயடியாய் போயிடும்! போறப்ப என்னை கூட்டிட்டுப் போயிடும்! உமக்குத் திருப்தி தானே?

''என்னைப் புரிஞ்சுக்காம பேசாத ஷைலஜா.'

'உம்ம புரிஞ்சுக்காமயே இது வரைக்கும் உம்மோட வாழ்ந்து குப்பை கொட்டியாச்சு? இனிமேலா கோபுரம் கட்டப்போறேன்!

எவ்வளவு உயர்ந்த நிலைக்குப் போனாலும், தனது இயற்கையான கிராமிய வாசனையும், அகங்காரமும் மாறாமல் வாழ்ந்து விட்ட ஷைலஜா!

குற்றால நீர் வீழ்ச்சிக்குப் பக்கத்தில், குழாயடிச் சண்டை போடுவதைப் போல, அந்தக் கௌரவமான சூழ் நிலையை நார் நாராக் கிழித்தெரிந்து கொண்டிருந்தாள்.

அவள் கணவனின் அடிப்பட்ட மனம் இந்த அடியையும் தாங்கிக் கொண்டது.

மெதுவாக அவளிடம் போய் தலையை ஆதரவாகக் கோதினான். இதுக்காகத்தான் தந்தி அடிச்சியா ஷைலஜா?

'ஏன் எஸ்டேட்டை விட்டு வர பிடிக்கலியா என்று அவள் போட்ட சத்தம், ஆட்டோவில் இருந்து இறங்கிய நாகப்பனுக்கு கேட்டது. அதெப்படி அக்கா வரமுடியும். எஸ்டேட்டுலதானே அவருக்கு எல்லாம் இருக்கு' என்ற படியே நாகப்பன் உள்ளே வந்நான்.

இதன்னடா புதுக்கதை எல்லாந் சேர்ந்து எனக்குப் படுக்கையிலேயே சமாதி கட்டிடுவீங்க போலிருக்கு,

சும்மா பேசிக்கிட்டே இருக்காதம்மா. டாக்டர் செலவு தான் முக்கியம்னு சொல்லலே. என்றான் சந்திரன்.

நானும் டாக்டர் தாண்டா! செய்வு என்னடா செய்வு! ஒரேயடியா ஒழிஞ்சு போயிர்றேன்.

சந்திரன் எரிச்சலோடு நாகப்பனைப் பார்த்தான்.

என்ன மாமா? வந்ததும் வராததுமா வத்தி வைக்கிற வேலை ஆரம்பிச்சுட்டீங்களா?

வத்தி வைக்காம, பொத்தி வைக்க ஒண்ணும் புதையல் இல்ல மாப்ள.

'என்னடா? ஏதோ பொடி வைச்சுப் பேசற மாதிரி இருக்கு? என்று ஷைலஜா குமுறினாள்.

மாமா, சாதாரண ஆளில்லக்கா மலையில ஒருத்திக்குத் தாலி கட்டிட்டு மனைவிக்கும் பாடை கட்ட நேரா வந்துட்டார்.

இதைக் கேட்டதும் ஷைலஜா ஆவேசத்தோடு எழுந்தாள். இரண்டு கைகளாலும் தலையிலும் மார்பிலும் அடித்துக் கொண்டாள்.

ஓடிப் போய் சுவரில் முட்ட முயன்றாள். நாகப்பனும் சந்திரனும் அவளைப் பிடித்துக் கொண்டனர்.

'அட சண்டாளா, இந்த ஒரு காரியத்தை நீ செய்ய மாட்டேங்கற நம்பிக்கையில் தானே இதுவரைக்கும் வாழ்ந்துக் கிட்டிருந்தேன் போச்சு, எல்லாமே போச்சு, பொறுக்கம்மா பொங்கச் சோறு.

'டெக்கா இப்படி வருத்தப்படுற எல்லாத்துக்கும் நான் இருக்கேன், நீ ஒரு காரியத்தை மட்டும் பண்ணு.

இனிமேல் என்னடா காரியம்?

'அக்கா, நாகப்பன் எதையும் நல்லதுக்குத் தான் சொல்வான், உன் உயிரிருக்கிறப்பவே உயில் சரியாயிருக் கான்னு ஒரு பார்வை பாத்திரு.

'சபாஷ் என்றாள்! சாகப் பிழைக்கக் கிடந்தவளைப் பார்க்க வந்த சாப்பாட்டு ராமன் திவசம் எப்பன்னு கேட் டானாம்! என்று லைலஜாவின் கணவன் சோகத்தில் மறைக்க முடியாத ஏளனத்தை வெளியிட்டான்.

'அவன் சொல்றதுல என்னம்மா தப்பு. புதுப் பெண்டாட்டிக்குத் தாலி கட்டின மனுஷனை, யார் நம்பு வாங்க ? நான் போன பிறகு உனக்குப் புதுமகனும், புது மருமகளும் வந்துட்டா? உன் பழைய மகனையும் மருமகளையும் யார் பார்த்துக்கு வாங்க?

'நீங்க யாரும் அதைப் பத்தி கவலைப்பட வேண்டாம். இதையெல்லாம் எதிர் பார்த்துதான் உங்கக்கா பேர்ல வாங்கின எல்லா சொத்தையும் எம் பேர்ல மாத்திக் கிட்டேன்.

ஒழுங்கா இருந்தா, நாகப்பன் என்கிட்டேயே இருக் கலாம். என்றான் லைலஜாவின் கணவன்.

அக்கா கடைசில நான் அனாதையாயிட்டேன்! மாமாகிட்ட சொல்லுக்கா, அவர் சொல்றபடியெல்லாம் கேக்கறேன். என்று தந்திரமாக நாகப்பன் கெஞ்சினான்.

எப்படியோ ஒரு போராட்டம் ஊமைப் போராட்டமாக மாறியது. ஒத்துப் போக முடியாத இரண்ட உணர்வுகள் நேரம் பார்த்து மோதிக் கொள்வதற்காக பின் வாங்கி சமாதானக் கொடி பிடித்தன.

அந்தக் கொடி நிழலில் ஒரு ஜீவன் உறங்கிக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் சைலஜாவிற்கு விழிப்புத் தட்டி விட்டது. அவளைப் பார்த்து விட்டுப் போவதற்காகப் பல பெண்கள் ஆப்பிள், சாத்துக்குடி ஹார்லிக்சுடன் வந்திருந்தார்கள்.

உட்கார்ந்து பேசிவிட்டுப் போனார்கள். எல்லோரும் மேட்டுக் குடியைச் சேர்ந்தவர்கள். இப்படி வந்துவிட்டுப் போவது அவர்களுக்கொரு பொழுது போக்கு. சிலபேர் தங்கள் குடும்பத்தில் நோய் வாய்ப்பட்டு இறந்த பெரியவர்களை நினைத்து சிறிது நேரம் கண் கலங்கி ஷைலஜாவையும் பயமுறுத்தி விட்டுப் போனார்கள்.

இரவு வரை இது தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. ஷைலஜாவை மருந்து சாப்பிட வைத்துவிட்டு அனைவரும் உறங்கப் போனார்கள் எங்கிருந்தோ ஒரு தெரு நாய் ஊளையிட்டுக் கொண்டிருந்தது. பகல் மரணமான பிறகு நிலா விளக்கை ஏற்றி வைத்துவிட்டு, வானம் சிந்திய நட்சத்திரக் கண்ணீர்த் துளிகள் உதிரப் போவதைப் போல ஒட்டிக் கொண்டிருந்தன.

திடீரென்று நள்ளிரவில் ஷைலஜாவின் அறையில், அவளுடைய கணவன் கதறுவது கேட்டது.

நாகப்பனும், சந்திரனும் வேலைக்காரனும் ஓடிப் போய் பார்த்தார்கள். விளக்கு வெளிச்சத்தில் சைலஜாவின் வயிற்றில் குத்தப்பட்ட கத்தியும் இரத்த வெள்ளமும் கோர மாய்க் காட்சி அளித்தன.

'ஐயோ மாமா இப்படிச் செஞ்சுட்டீங்களே! புதுப் பெண்டாட்டி மயக்கத்துல, எங்கக்காவைக் கொன்னுட்டிங் களே!

என்ன நாகப்பா உளர்ற? அவரென்றும் உளறலப்பா? உங்களுக்குத்தான் எங்கள் யாரையுமே பிடிக்காதே. கடைசில, இவ்வளவு பெரிய கொடுமையைப் பண்ணீட் டீங்க. என்று சந்திரன் அழுதான்.

எங்கக்காவைக் கொன்ன உங்களைப் பழி வாங்காம விடமாட்டேன். என்று சொல்லிவிட்டு, நாகப்பன் தொலை பேசியை எடுத்துப் பேசினுன்.

ஷைலஜாவின் கணவன் பிரமை பிடித்தது போல் சிலை யாக நின்று விட்டான். ஒவ்வொரு நாளும் தன்னைக் கொல்லாமல் கொன்றவள் சாகும்போது கொலைக்கார னாகவே ஆக்கிவிட்டுப் போய் விட்டாளே என்று அவன் மனம் கதறியது.

வாசலில் போலீஸ் ஜீப் வந்து நின்றது. இன்ஸ்பெக்டர் போலீஸார் பின் தொடர வேகமாக வந்தார்.

ஷைலஜாவின் உடலைப் பார்வையிட்டு விட்டு எல்லோ ரையும் கூட்டிக் கொண்டு வெளியே வந்தனர். கைரேகை நிபுணர்கள் அவர்களது பணியைச் செய்தனர். ஷைலஜா வின் உடல் பிரேத பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது.

வெளியே இன்ஸ்பெக்டர் விசாரணை செய்து கொண் டிருந்தார்.

'பாருங்க சார்' இந்த வயித்தெரிச்சலைக் கேளுங்க. எங்க அத்தானே, அக்காவைக் கொன்னுட்டாரு என்று அவரிடம் உருக்கமாய் சொன்னான். நாகப்பன்.

'ஆமாங்க இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கிட்டு 'அப்பா, இப்படி, அம்மாவை மோசம் பண்ணிட்டாரு— என்று சந்திரனும் தொடர்ந்தான்.

சார், இவங்களை நம்பாதீங்க! நான் இந்தக் கொலையைப் பண்ணவே இல்லை! என்று ஷைலாஜவின் கணவன் புலம்பலோடு முறையிட்டான்.

அதை ஸ்டேஷன்ல்ல போய் பேசிக்கலாம். முதல்ல புறப்படுங்க என்றார் இன்ஸ்பெக்டர்.

பாகம் : 8

மரத்தடியில் நின்று கொண்டு பல பேர் பேசிக் கொண்டிருந்தனர். டீ மசால்வடை, வேர்க்கடலை விற்பனை சூடு பிடித்துக் கொண்டிருந்தது. கறுப்புக் கோட்டுக் களைப் போட்டபடி பல வழக்கறிஞர்கள் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தனர்.

'லாபில்' வழக்கறிஞர்களுக்கிடையே சுவாரஸ்யமான விவாதம் நடந்து கொண்டு இருந்தது. அவர்களில் சிலர் எல்லா அரசியல் கட்சிகளையும் தலைவர்களையும் தூக்கி எறிந்து பேசினார்கள். அவர்கள் பெரும்பாலும் எந்த வழக்கிலும் ஜெயிக்காத ஞாயிற்றுக்கிழமை வக்கீல் களாகவே இருத்தனர். அவர்களில் ஒருவருடைய உறவினர் சிக்கலான வழக்கு ஒன்றில் மாட்டிக் கொண்டு அவரிடம் வந்தாராம். அதற்கு அவர் மிகவும் அக்கரை யோடு, இந்தக் கேஸை முடிப்பது என் பொறுப்பு. நல்ல வக்கீலாகப் பார்த்துப் பிடித்து, இரண்டில் ஒன்று பார்த்து விடலாம் என்றாராம்.

வழக்கறிஞர் செல்லையா தனது ஜூனியர்கள் புடை சூழ வந்து கொண்டிருந்தார். அவரென்றால் நீதிபதி களுக்கே சிம்ம சொப்பனம்.

ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த கவிஞர் ஒருமுறை ஒரு பிரச்னையில் ஆவேசமுற்று, (பதினைந்து ஆண்டு களுக்கு முன்னால்) அமைச்சர் மாளிகைகள் தீப்பற்றி எரியும், என்று பேசிவிட்டார். ஒரு வருடம் வரை வழக்கு நடைபெற்றது. வழக்கறிஞர் செல்லையா சமத்காரமாக வாதாடினார். கவிஞன் ஒன்றைக் கண்டிக்கும் போது கோபத்தின் உச்சத்திற்குச் சென்று வார்த்தைகளை உருவாக்கி விடுகிறான்.

தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம், என்றார் பாரதியார்.

"கொலை வாளினை எடடா? எனப் பாடினார் புரட்சிக் கவிஞர்."

"ஏழைகளுக்குப் பயன்படாத தானியக் களஞ்சியங் களைக் கொடுத்திடுங்கள்" என்றார் மகாகவி இக்பால்.

அவர்கள் மீது யாரும் வழக்குப் போடவில்லை.

தவறுகளைத் திருத்திக் கொள்ளுங்கள் என்கிற வேண்டுகோள்களைக் கோபத்தில் வெடி குண்டு வீச்சாக மாறி விடுகிறது. இவ்வாறு தர்க்க ரீதியாக வாதாடினார். அதிலிருந்து அவருடைய தொழிலில் கொடி கட்டிப் பறக்க ஆரம்பித்தது.

அவர்தான் நாகப்பனுக்காக வாதாடினார். நேரடி யாகப் பார்த்தவர்கள் இரண்டு பேர் இருந்ததால், மிக எளிதாக வழக்கு முடிந்து விட்டது. ஷைலஜாவின் கணவ னுக்கு ஆயுள் தண்டனை கிடைத்தது.

சிறைச்சாலைக் கதவு திறக்கப்பட்டது. அங்கே புதிய கைதிகளை வார்டன்கள் அடித்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் கைதிகள் பரிதாபமானவர்கள். அவர்கள் உட்கார் திருந்தால், ஏன் உட்கார்ந்தாய் என்று அடிப்பார்கள், நின்று கொண்டிருந்தால் உட்கார், உட்கார் என்று சொல்லிக் கொண்டே அடிப்பார்கள். வலது புறத்திலிருந்த 'ஏ' வகுப்பிற்கு ஷைலஜாவின் கணவன் அழைத்துச் செல்லப் பட்டான்.

சிறைச்சாலை ஒரு விசித்திரமான உலகம். அரை பிளேடை வைத்து சுகமாக 'ஷேவ்' செய்து விட்டார்கள். பீடியைக் கொடுத்தால் எந்தப் பொருளும் கிடைக்கும். பீடிச் சக்கரவர்த்தி என்று சில பீடிகளை விளம்பரம் செய்வது பொருத்தம் தானென்று சிறைச்சாலையில் ஒரு நாள் இருந்தால் போதும் ஒத்துக் கொள்வார்கள்.

ஷைலஜாவின் கணவன் இருந்த அறையில் சுகமான காற்று வீசியது. முன்னால் வேப்ப மரங்கள், குளிப்பதற்கு வசதியான தண்ணீர்த் தொட்டி.

மாலை நேரத்தில் சுண்டல் தரப்பட்டது. மாமரத்தடி யில் தொண்டர்களோடு நின்று கொண்டு ஒரு தலைவர் 'மாங்குயில் கூவிடும் பூந்சோலை' என்று சிறைச் சாலையைப் பற்றிக் கவிஞன் எழுதிய வாசகம் எவ்வளவு மெய்யானது என்பதை விளக்கிக் கொண்டிருந்தார். பகலில் எல்லோரோடும் கலந்து படிக்கலாம். மாலையில் விளை யாடலாம் 'ரிமாண்டில்' இருப்பவர்களுக்கு எந்த வேலையும் கிடையாது. அரசியல் கட்சித் தலைவர்கள் பெரும்பாலும் வந்தவுடன் மருத்துவமனைக்குச் சென்று விடுவார்கள். அதற்குத் துணையாக அவர்களது உடலில் ஏதாவதொரு நோய் இருக்கும். தங்களுக்குக் கிடைக்கும் பழம், பிஸ்கட், இவற்றை 'சி' வகுப்பில் இருக்கும் தொண்டர்களுக்குப் பகிர்ந்து தருவார்கள் ஒரு நக்கிட் வாலிபர் (பட்டதாரி) பெரிய மீசை வைத்துக் கொண்டு கொஞ்சம் கூட மனச்சலன

மில்லாமல் ஒரு எளிய வீரனைப் போல பல வருடங்களாக அந்தச் சிறைச் சாலையில் இருக்கிறார்.

கைதிகள் குழப்பம் செய்தால் தீடீரென்று விசில் ஊதி விட்டு அறைகளில் புகுந்து. 'கன்விக்ட் வார்டன்கள்' (ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள்) கைதிகளை அடி அடியென்று அடிப்பார்கள். 'மிசா' கைதிகள் சிலரைத் தண்ணீரில் நிற்க வைத்துக்கொண்டு அடித்ததை ஷைலஜா வின் கணவன் பார்த்தான்.

ஒரு கன்விக்ட் வார்டரினிடம் ஒரு அலி வேலை செய்து கொண்டிருந்தான். அவனை கேலி செய்தே அனைவரும் பொழுதை போக்கி விடுவார்களாம். அந்த வார்டர், அலி குளிப்பதற்காக ஒரு குடம் நீரில் சந்தன சோப்பைப் போட்டு விடுவாராம்.

அங்கே இருந்த கவிஞன் ஒருவன் அலியைப் பாத்திர மாக்கி ஒரு பாடலே எழுதி விட்டான்.

சேற்றினிலே குளித்துவரும்
சிற்றன்பக் காதலியே
அல்லிராணி ஆனால் என்ன?
அல்லிமேனி ஆனால் என்ன?

எல்லாம்

அர்த்த ஜாம பூஜைதானே வெறும்
அரை குறை டாஷைதானே
பணம் மட்டும் இருந்தாச்

சிறைச் சாலைக்குள் அப்பா, அம்மாவைத் தவிர எல்லாம் கிடைக்கும்.

பல பேர் திருட்டுத் தனமாக கஞ்சா, மது அனுபவங் களில் மிதந்தார்கள்.

இரவு நேரம் மிகவும் மென்மையானது. However jail is jail என்ற அறிஞரின் மொழியை அந்த நேரம் மெய்ப்பித்து விடும்.

ஒவ்வொரு இரவையும் பகலாக்கிக் கொண்டு ஈர விழி களில் இமைகளை நனைத்த படி ஷைலஜாவின் கணவன் அஞ்சாத வாசத்தைப் போல அந்த தண்டனைக் காலத் தைக் கழித்துக் கொண்டிருந்தான்.

நாகப்பன், சந்திரனைச் தொழிற்சாலைகளைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லி விட்டு மலைக்கு வந்தான். ரிசப்ஷனிஸ்டைத் தேடினார்கள். எங்கும் அவளைப் மறந்துவிட்டு சுகயோக வாழ்வில் ஈடுபட்டான்.

ரிசப்ஷனிஸ்ட் கருவுற்று கேசவனால் ஒதுக்கப் பட்டவள். திவ்யாவைப் பெற்றுக் கொடுத்து விட்டுப் பிரசவ மரணத்தைத் தழுவிக் கொண்டாள். கேசவன் திவ்யாவை வளர்த்து ஆளாக்கிய நேரத்தில் ஷைலஜாவின் கணவனான இராஜா பாதர் தண்டனைக் காலம் முடிந்து அவர்களைச் சந்திக்க வந்தான்.

அம்மாவை இழந்தாலும் அப்பாவின் நிழல் இருக்கிறதே என்று பூரிப்பில் திவ்யா ராஜாபாதர் அருகில் நின்றாள். +2 முடித்திருந்த திவ்யா நகரத்திற்குப் போய் உயர்ந்த கல்வி கற்று நாகரிகமாக வாழ நினைத்தாள். அவளுடைய ஆசையைப் புரிந்து கொண்ட இராஜாபாதர் அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்றார். கேசவன் நிலங்களைப் பார்த்துக் கொண்டு கிராமத்தில் தங்கி விட்டான்.

வாழ்வின் இருட்டறையில் இருந்து வெளி வந்தவுடன் 'திவ்யா' என்ற வெளிச்சத்தைக் கண்ட மகிழ்வில் இராஜா பாதர் புதிய வாழ்வைத் தொடங்கினார். நாகப்பன் அப்போது வெளி நாடுகட்குச் சுற்றுலா சென்று இருந்தான். சந்திரன் என்னதான் இருந்தாலும் தந்தையை வரவேற்கும்

மனோபாவத்தைப் பெற வேண்டிய சூழல் ஏற்பட்டு தான், சந்திரன் அவனை உற்சாகப் படுத்தினான்.

திவ்யாவின் கல்லூரியை ஒரு 'தமிழ்ச் சங்கம்' என்று தான் சொல்ல வேண்டும். தமிழகத்தின் தலை சிறந்த அரசியல் வாதிகளும், அங்கிருந்து தான் உருவாகினார்கள். எல்லாக் கல்லூரிகளிலும், தமிழையே பாட மொழியாக்க வேண்டும் என்கிற கோரிக்கையை வலியுறுத்துவதற்காக அவளுடைய கல்லூரியில் ஒரு கருத்தரங்கம் நடத்துவதாக முடிவு செய்தனர். திவ்யாவை கருத்தரங்கில் பேசச் சொன்னபோது அவள் நாவரசனையும் அழைக்குமாறு சொன்னாள்.

மண்டபத்தில் இடமில்லாத அளவு கூட்டம் நிரம்பி வழிந்தது. திவ்யா பேசும் போது அந்தச் சூழலைக் குறுப் பிட்டு, நாம் இறைச்சாட்சிக்குப் போனால் அங்கேயும் இடம் போதாது என முழக்கமிட்டான். நாவரசன் மிக இனிமை யாக ஒரு வீணையை மீட்டுவதைப் போல வார்த்தைகட்குக் குரல் கொடுத்தான். மாணவர் உலகம் மயங்கி விட்டது. தமிழ் இலக்கியக் கவிதைகளைப் போகிற போக்கில் இனிமையாகச் சொன்னான். 'சர்க்கரைப் பந்தலில் தேன் மழை பொழிவதைப் போல, என்கிற வாசகத்தை இனிமேல் 'நாவரசன் கவிதைகளைச் சொல்வதைப் போல என்று தமிழ் பேராசிரியர் பாராட்டினார்.

கன்னிமரா நூலகத்தில் திவ்யாவும் நாவரசனும் அடிக்கடி சந்தித்தனர். சித்தப்பா வீட்டில் அவன் தங்கி இருந்தான். அவனுடைய அழுக்குத் துணிகளை ஒதுக்கி வைத்து விடுவார்கள். கார்பரேஷன் குளியல் அறைக்குத் தான் அவன் குளிக்க வருவான்.

திவ்யா 'Star in the desert' கவிதை புத்தகத்தைக் கையில் வைத்திருந்தான் அவனுடைய கதையைக் கேட்ட போது விழிகள் ஈரமாயின.

செருப்பில்லாத நாவரசனின் கால்களை அவன் இரக்கத்தோடு பார்த்தபோது வேட்டியின் கரையும் கிழிந்திருந்தது.

பாகம் : 9

வைகை எக்ஸ்பிரஸ் மின்சாரப் பாம்பு போல் ஓடிக் கொண்டிருந்தது.

மாலை நேரம்— அழுக்கடைந்த சட்டைகளோடு ரயில்வே தொழிலாளர்கள் கேன்டீனில் ஆம்லேட்டை ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். ஒரு திரைப்படப் பாடலாசிரியர் அந்த வண்டியில் பயணம் செய்து கொண் டிருந்தார். அவரை அடையாளம் கண்டு கொண்ட தொழிலாளர்கள் அவரிடம் பல்வேறு விதமான சினிமாச் செய்திகளைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தனர். அவருடைய பாடல்களைப் பாராட்டினர்.

வண்டி இருபது நிமிடங்கள் தாமதமாகப் போய்க் கொண்டிருந்தது. ஒரு தொழிலாளி திருவனந்தபுரத்தி லிருந்து சென்னைக்கு வந்த ரயில் அரைமணி நேரம் அட்ஜஸ்ட் செய்து குறித்த நேரத்தில் சென்னைக்கு வந்து விட்ட ஒரு எஞ்சின் டிரைவரின் சாமர்த்தியத்தைப் பாராட்டிக் கொண்டிருந்தார்.

"பெர்னாட்ஷா ரயிலில் போனகதை தெரியுமா?" என்று திவ்யா நாவரசனிடம் கேட்டாள்.

'தெரியாதே' என்றான் நாவரசன். திவ்யா சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"பெர்னாட்ஷா ஒருமுறை ரயிலில் போகும் போது டிக்கெட்டைத் தொலைத்து விட்டாராம் டி. டி. ஆர். அவரிடம் டிக்கெட் கேட்டார். டிக்கெட் தொலைந்து விட்ட

தெனத் தெரிந்து கொண்டு அவர் பெர்னாட்ஷா என்பதை அறிந்து 'சரி பரவாயில்லை' என்றார். உடனே பெர்னாட்ஷா, போகிற இடம் எனக்கு மறந்து விட்டது. எனவே கட்டாயம் டிக்கெட் வேண்டுமே என்றாராம்.

அனைவரும் சிரித்துக் கொண்டே 'கட்லெட்' வாங்கிச் சாப்பிட்டனர்.

"நாலு வடை ரூ 3-55" என்று ஒரு இளைஞர் உற்சாகத்தோடு வியாபாரம் செய்து கொண்டிருந்தார்.

நாவரசனிடம் புலவர் கல்லூரியில் படித்தால்—எதிர் காலம் இருண்டு விடுமெனக் கூறி அவனை பிளஸ் டூ எழுத வைத்து—கலைக் கல்லூரியிலேயே சேர்த்து விட்டனர் திவ்யாவும், சந்திரனும்.

தமிழக அனைத்துக் கல்லூரிகள் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக...அவர்கள் மதுரைக்குச் சென்று கொண்டிருந்தனர். சந்திரன் துணையாகப் போனான்.

மதுரையைப் போல அமைதி தவழும் நகரத்தை எங்கே பார்க்க முடியும்?

வழுக்கை இளநீராகப் பார்த்தெடுத்து வெட்டிக் குடித்து விட்டு...படகில் ஏறி, வண்டியூர் மாரியம்மன் தெப்பக் குளத்திற்குப் போகலாம். அதனுடைய உச்சிமாடியில் நின்று கொண்டு மதுரை நகரம் முழுவதையும் ரசிக்கலாம். எதிரில் இருக்கும் தியாகராசர் கல்லூரியின் புல்வெளியும், தாமரைக் குளமும், தமிழும் நம்மை மயங்க வைக்கும். வைகை மணலில் நடந்தே போய்க் கரையேறி ஐராவத நல்லூர் டூரிங் தியேட்டரில் இரண்டாவது ஆட்டம் பார்த்தால அந்த சுகமே தனி. அந்த முனிச்சாலையில் இரவு பத்து மணிக்கு மேல் இடியாப்பமும் ஆட்டுக் கண்ணும் சாப்பிட மாணவர்கள் கூட்டம் கூட்டமாகப் போவார்கள். காலை நான்கு மணிக்கே ஷேவ் செய்து கொள்ளலாம். இரவு முழுவதும் சுடச்சுட இட்லி சாப்பிடலாம். பெருந்

தலைவர் காமராஜர் விரும்பி இட்லி சாப்பிட்ட ஒரு கடை கூட அங்கே உண்டு. மீனாட்சியம்மன் கோவில் பொற்றா மரைக் குளத்தின் படிக்கட்டில் உட்கார்ந்தால் மனதில் அமைதி தவழும்.

அழகர் கோவிலுக்கு உல்லாசப் பயணம் போகலாம். ஆடி வீதியிலும் புதுமண்டபத்திலும் இலக்கியக் கூட்டம் கேட்கலாம். சாப்பாட்டுப் பிரியர்களுக்கு 'அம்சவல்லி' யின்' கோழி சில்லரை'யும் 'சுல்தானியா'வின்' 'டிரை சுக்கா' வும் புதுக் கவிதை போல் சுவையூட்டும்.

காந்தி மியூசியத்தில் பேச்சுப் போட்டி நடந்தது.

"ஜாதி, ராஜீய வேறுபாடுகளை ஏற்றுக் கொண்டால் தான் இந்திய தேசிய ஒருமைப்பாடு நிலைக்கும்" என்கிற சினிமாஸ்கோப் தலைப்பில் தமிழகக் கல்லூரிகளின் மாணவ மாணவியர் தீப்பொறி பறக்கப் பேசிக் கொண்டிருந்தனர். நாவரசனின் தமிழ் உச்சரிப்பு அற்புதமாக இருக்கும்.

அவன் மிக அலங்காரத்தோடு பேசினான். திவ்யா கருத்துக்களை இனம் காட்டி—தர்க்கரீதியாக விவாதித் தாள். வழக்கம் போல முதல் பரிசு—திவ்யா, இரண்டாம் பரிசு—நாவரசன்.

அனைவரும் உற்சாகத்தோடு அன்று இரவு ரீகல் டாக்கீசில் "Go naked in the world" ஜீனா லோலாபிரிகேடா நடித்த படம் பார்த்தனர். ஒரு விபசாரியின் உருக்க மான கதை அது.

அவர்கள் மறுநாள் காலை லாட்ஜில் கணக்கு முடித்து விட்டு வைகையில் சென்னை வந்தனர். மிகப் பெரிய சுழற் கோப்பையும், தங்கப் பதக்கங்களும் பரிசாக வழங்கப் பட்டன.

இந்த வெற்றியைக் கொண்டாடுவதற்காகக் கலைக் கல்லூரிக்கு ஏழுநாள் விடுமுறை விடப்பட்டது.

அன்று மாலை திவ்யாவை அவன் வீட்டில் சந்தித்துக் கடற்கரைக்கு அழைத்துச் செல்ல அவனிடம் நாவரசன் அனுமதி பெற்றிருந்தான்.

திவ்யா ஆண்களோடு கூச்சமில்லாமல் பாசத்தோடு பழகக் கூடியவள். கல்லூரி மாணவர்கள் அனைவரும் "சிஸ்டர்—சிஸ்டர்" என்று அவளைச் சுற்றிக் கொண்டிருப் பார்கள். ஒரு பேராசிரியர் அவர்களை அடிக்கடி கேலி செய்வார். உடனே "சிஸ்டர்" என்று தானே சொல்கி றோம் என்பான் ஒருவன். நர்சுகளைக் கூட 'சிஸ்டர்' என்று தான் சொல்கிறோம். அதற்காக நர்சுகளை யாரும் காதலிப்பதில்லையா?" என்று அந்தப் பேராசிரியர் வேடிக்கை செய்வார்.

திவ்யா சேரிகளுக்குச் சென்று குழந்தைகளைக் குளிப் பாட்டுவாள். இரவில் அந்த ஏழைகளுக்குப் பாடம் நடத்து வாள். கல்லூரி மாணவர்கள் அவளோடு பழக விரும்பிக் கடிதம் எழுதுவார்கள். அனைவருக்கும் பதில் எழுதுவாள். இவளோடு பேசவும்—பழகவும் ஒரு பைத்தியக்காரக் கூட்டமே உருவாகி விட்டது. ஒரு கல்லூரியில் பேசிவிட்டு வரும் போது திவ்யா ஒரு மாணவனைப் பார்த்து, 'என்ன சோர்வாக இருக்கிறீர்கள்' என்று கேட்டாள்? அவன் 'லேசான காய்ச்சல்' என்றான். உடனே திவ்யா அருகே சென்று அவனுடைய நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். முதலில் அவனுக்குக் காய்ச்சல் இருந்ததோ என்னவோ— திவ்யா அவனுடைய நெற்றியைத் தொட்டதும் அவனுக்கு 104 டிகிரிக் காய்ச்சல் அடிக்க ஆரம்பித்து விட்டது.

இப்படிப் பட்ட சம்பவங்களை எல்லாம் நினைத்துக் கொண்டு நாவரசன் சோர்வோடு திவ்யாவின் வீட்டுக்கு வந்த போது பத்து பதினைந்து மாணவர்கள் உட்கார்ந் திருந்தார்கள். திவ்யா இனிமையாக வந்தாள். அவர்கள்

விடுதி நாள் விழாவுக்காக அவளிடம் தேதி வாங்கிக் கொண்டு போய் விட்டார்கள்.

நாவரசன் ஏளனமாக, "என்ன திவ்யா நாளாக நாளாக கிளைக் கழகங்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறது? பேசாமல் ஒரு கட்சி ஆரம்பித்து விடேன்" என்றான்.

"உங்களுக்கு எப்போதும் குறுகிய மனப்பான்மை. பிராந்தியக் கட்சி அனுதாபி தானே" என்றாள் திவ்யா.

"சரி வா...கடற்கரைக்குப் போவோம். குறைந்த பட்சம்...வேர்க்கடலை, சுண்டல் விற்கிற பையன்கள் வந்து 'அக்கா அக்கா' என்று உன்னைச் சுற்றிச் சுற்றிக் கழுத்தை அறுக்காமல் இருந்தால் போதும்" என்றான் நாவரசன்.

அமைதியான "சாந்தோம்" கடற்கரைக்கு அவர்கள் போனார்கள். ஒரு காவலாளி அவர்களைத் தொடர்ந்து வந்து, "சார் பதினஞ்சு ரூபாக் குடுத்துட்டு சௌகர்யமா ரெஸ்டிங் ரூமுக்குள் உட்கார்ந்து பேசலாமே" என்றான்.

இருவரும் வெறுப்போடு முகம் சுளித்து விட்டுக் கடலோரமாகப் போனார்கள். காலைத் தொட்டு விட்டு எதையும் கேட்காமல் ஓடிப் போய்விட்ட அலைகளை திவ்யா பார்த்தாள். சூரியனின் அஸ்தமன நேரம். அவர்கள் நடந்து சென்று ஒரு படகருகே அமர்ந்து கொண்டனர்.

திவ்யாவின் மடியில் நாவரசன் படுத்துக் கொண்டான். தலையை மடியில் புதைத்துக் கொண்டு அவள் சந்தேகப் படாத அளவு கொக்கோக சேஷ்டைகள் செய்தான். பேசிக் கொண்டே தவறு செய்வது போல் அவளது மார்பகங்களை அடிக்கடி தொட்டான், அங்கே கை சுட்ட போது—ஒரு குழந்தையின் கன்னத்தைத் தொடுவது போல் இருந்தது. அவள் இன்னும் மலரவில்லையோ என்று

சந்தேகம் கொண்டான். ஏக்கப் பெருமூச்சு விட்டான். திவ்யா திடீரெனச் சிரித்தாள்.

“என்ன திவ்யா” என்றான்.

“இல்லை நான் குளித்து விட்டு வந்தால் நீங்கள் விடுகிற பெருமூச்சே உலர்த்தி விடும் போலிருக்கிறதே” என்றபடி திவ்யா சிரித்துக் கொண்டாள்.

பாகம் : 10

சாவி கொடுத்தால் டமாரம் அடிக்கும் கரடி பொம்மையைக் குழந்தை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தது. யாராவது தூக்கினால் இடுப்பை நெளித்து நான்கு பக்கமும் திரும்பிப் பார்த்தது. எப்போதும் சிரித்துக் கொண்டே இருந்தது. சிறு வயதிலேயே தாயை இழந்த மங்களவதியின் வீட்டில் அந்த சின்னச் குழந்தைக்கு ஏராளமான பாட்டிகள் கிடைத்து விட்டார்கள். நாவரசனின் சித்தப்பா மகளுடைய குழந்தை அது. நாவரசனுக்கு அந்தக் குழந்தையைக் தூக்கக் கூட உரிமையில்லை.

சித்தப்பா பக்கத்து வீட்டுகாரர்களையெல்லாம். கூட்டி வைத்துக் கொண்டு நம்மாழ்வாரின் திருவாய் மொழியைப் படித்துக் காட்டிக் கொண்டிருந்தார் “ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி” என்ற வரியைத் திரும்பப் படித்து ரசித்து விளக்கம் சொன்னார்.

காட்டிலே இராமனைக் கண்ட குகன் அவரை உபசரிக்கிறான் இராமபிரான், வாருங்கள். நான் இந்தப் புல்வெளியில் இருக்கிறேன்! என்று சொல்கிறார். அவரைப் பிரிய மனமின்றி குகனும் அவனுடைய ஆட்களும் செல்கின்றனர். சீதையும் இராமரும் அருகருகே உறங்கி ஓய்வு கொள்ள, இலக்குவன் வில்லில் அம்பை பூட்டி நான்கு பக்கமும் குறி பார்த்தபடி காவல் காக்கிறான். தூரத்திலிருந்து இதைப் பார்த்த குகன் இலக்குவன் இராமரை கொன்று விட்டு சீதையை அபகரிக்கக் கருதுகிறான் என்று ஒரு உலக்கை

யைத் தூக்கிக் கொண்டு அவனை தாக்க வருகிறான். குகனின் மகன் இதைப்பார்த்து விட்டு தனது தந்தை இராம, இலக்குவரை கொன்று—விட்டு சீதையை கவர நினைக்கிறாரே என்று சந்தேகப்பட்டு வேல் கம்பைத் தூக்கிக் கொண்டு வருகிறான். துயில் நீங்கிய இராமபிரான் மூவரும் ஆயுதத்தோடு இருப்பதை பார்த்து வியப்படைகிறார். என்ன சேதி என்று கேட்கிறார்; குகனும், அவன் மகனும் தங்கள் சந்தேகத்தை இராமபிரானிடம் கூறுகின்றனர். அவர் சிரித்துக் கொண்டே இலக்குவனின் துணைச் சிறப்பை விளக்குகிறார். அனைவரும் வெட்கப்படுகின்றனர். 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி' என்ற வரி இத்தகைய துணையைத் தான் குறிப்பிடுகிறது! என்றார் சித்தப்பா. நாவரசனுக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. தத்துவம் பேசுவது எவ்வளவு சுலபமாய் நடக்கிறது என நினைத்துக் கொண்டான்.

சொந்த அண்ணன் மகனை அனாதையைப் போல் நடத்திக் கொண்டு ஊருக்கு உபதேசம் செய்கிறார் சித்தப்பா. அனாதைத் தன்மை தனது உடனிருப்பாகவே மாறி விடுமோ என்று நாவரசன் நினைத்தான். ஆனால் திவ்யாவின் அன்பு முகம் அவனுக்கு ஆறுதலாகக் காற்று வெளியில் மாயத் தோற்றம் காட்டி சிரித்தது. என்றாலும் திவ்யா தன்னை காதலிக்கிறாளா என்ற கேள்விக்கு அவனால் விடைகாண முடியவில்லை. எல்லோரடும் அவள் சகஜமாகவே பழகினாள். ஒரு முறை அவள், "எனக்கு பக்கத்தில் ஒரு ஆண் மகன் படுத்து உறங்கினால் கூட என்னால் களங்கமற்று உறங்க முடியும்" என்று சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

ஏற்கனவே ஐந்தாறு காதல் தோல்விகளைச் சந்தித்தவன் அவன் இன்று எப்படியும் திவ்யாவிடம் கேட்டு விட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள்.

அன்று கல்லூரி விடுமுறை நாள் காந்தி மண்டபத்தில் சந்திப்பது என்பது முடிவு செய்திருந்தார்கள்.

நாவரசன் சென்ற போது திவ்யா, இரண்டு காந்திய வாதிகளோடு காத்திருந்தாள். அவர்களுக்கு நாவரசனை அறிமுகப்படுத்தினாள். அனைவரும் வெளியே வந்து கரும்புச் சாறு குடித்தார்கள். திவ்யா எப்படியாவது நாவரசனை உலகக் கண்ணோட்டம் உடையவனாக மாற்றி விட வேண்டும் என்று விரும்பினாள். பாசத்திற்கு அதிகம் அடிமைப் படாமல் லட்சிய உணர்வோடு இயங்க வேண்டும் என்று அறிவுரை கூறுவாள்.

காந்தியவாதிகளிடம் விடை பெற்றுக் கொள்ள திவ்யாவும், நாவரசனும் ஒரு பூங்காவிற்குப் போனார்கள். திவ்யா ஒரு சிறிய டிபன் பாக்சில் கொண்டு வந்திருந்த எலுமிச்சம் பழச் சோற்றை கொஞ்சம் எடுத்து நாவரசனுக்குக் கொடுத்தாள். அவன் அதை ஊட்டி விட வேண்டும் என்று வற்புறுத்தினான். அவள் சிரித்துக் கொண்டே ஊட்டி விட்டாள், அழகு ஒரு கவிதையை போல வசீகரமானது. சிறிய உருவம், ஒழுங்கான, எளிய, தூய ஆடை, காலும், முகமும், மார்பகமும் என்று உடலெல்லாம்- ஒரு முயல் குட்டியைத் தொடுவதைப் போல, அவன் ஏற்கனவே பட்ட காதல் காயங்களுக்கு ஒத்தடம் தருவதைப் போல அமைந்து விட்டது.

நாவரசன் மென்மையாக திவ்யாவின் கன்னத்தில் முத்தமிட்டான், இதுவரை இல்லாத அனுபவம் என்பதால் அவள் முகம் குப்பென்று சிவந்து விட்டது.

"அதிகம் உணர்ச்சி வசப்படாதீர்கள்" என்றாள். ஆனால் அவன் கையையும் உடம்பையும் திரும்பத் திரும்ப ஆசையோடு தொட்டுக் கொண்டிருந்தாள்.

திவ்யா அவனை ஒரு விசித்திரமான அன்புக்கு ஏங்கும் குழந்தையாகவே பாவனை செய்து கொண்டாள். ஒரு முறை தலையில் குட்டுவான். தனக்கு யாருமே இதுவரை அன்பு காட்டவில்லையென்றும் திவ்யாவை விட்டால்

தனக்கு வேறு கதியில்லை என்றும் அழுது கொண்டே மடியில் சாய்து கொள்வான்,

பூங்காவிலிதுந்து எழுந்து கடற்கரைப் பாதை வழியே அவர்கள் நடந்து சென்றார்கள். ஒரு சிமிண்ட் பெஞ்சில் அமர்ந்து கொண்டார்கள்.

"நீ பலரோடு பழகுவது பிடிக்கவில்லை திவ்யா' என்றான் நாவரசன். ஒரு நாள் அவன் அவளுக்குக் கவிதை எழுதக் கற்று கொடுத்தான். அன்றிலிருந்து அவளது ஆசைப்படி அவளை 'நீ' என்றே அழைத்தான்.

"எப்போதும் உங்கள் வட்டம் குறுகியதாகவே இருக்கிறது. நீங்கள் உழக்கிலே கூடக் கிழக்கு மேற்கு பார்க்கிறீர்கள்"

"எனக்கு மட்டும் உனது அன்பு சொந்தமாக வேண்டும்."

"இல்லை—நம் இருவரின் அன்பும் இந்த உலகத்திற்கே சொந்தமாக வேண்டும்.

பேசிக் கொண்டே இருந்த திவ்யா மயங்கி நாவரசனின் மடியில் விழுந்து விட்டாள்.

அவளோடு பேசும் போதே அவளை அனுபவிப்பது போல் சுகமாக இருக்கும். அத்தனை பேரழகி திவ்யா. அவளுடைய குறும்புத் தனமும் சேட்டைகளும் மனசைக் கிறங்க அடித்து விடும். இப்போது அந்த அழகுச் செல்வம் அவன் மடியில் கிடக்கிறது.

வருஷத்திற்கு ஒரு காதல் தோல்வியைச் சந்தித்த பரிதாபத்திற்குரிய நாவரசன் அப்படியே திவ்யாவை மயங்கிய நிலையிலேயே அனுபவித்து விடலாமா என நினைத்தான். ஆனால் திவ்யா என்கிற பொக்கிஷத்தை அவசரபட்டு இழந்து விடக் கூடாது என்று முடிவு செய்தான்.

அவளோடு இருக்க கூடிய ஒவ்வொரு நிமிஷமும் இன்ப மூட்டுவதாக இருக்கும் ஓவியம் வரைவாள்—பாடுவாள்—பேசுவாள்—எழுதுவாள். அவளது குழந்தைத்தனத்தைப் பயன்படுத்திக் கொண்டு தொடும் சுகம்—மடியில் சாய்தல்—அணைத்து மயங்குதல் ஆகியவற்றை அனுபவித்தாலே போதுமென நினைத்துக் கொண்டான். பக்கத்தில் இருந்த குளத்திலிருந்து தண்ணீர் எடுத்து வந்து திவ்யா முகத்தில் தெளித்தான்.

திவ்யா விழித்தெழுந்தாள். ஒரு தேவதையைப் போலச் சிரித்தாள்.

"ஓ நீங்கள் எவ்வளவு புனிதமானவர். பலவீனமான நேரத்தில் பலமாக நின்று என்னை காப்பாற்றினீர்கள்" என்று அவனைப் பார்த்தாள், "சரி நேரமாகி விட்டது, வாருங்கள் போகலாம்" என்றாள்.

இடது கை அவளது மார்பில் படுமாறும் வலது கை அவளின் பிருஷ்ட பாகத்தில் படுமாறும் எழுந்து நின்ற திவ்யாவை புதுவிதமாக அணைத்துக் கொண்டான். ஒவ்வொரு நிமிஷமும் புதிய புதிய சிருங்கார ரச அனுபவ முறைகளை சிருஷ்டிக்கும் அந்தக் காமத்தின் பிரும்மதேவன் திவ்யாவைப் பாசப் பார்வையில்தொட்டு விளையாடினான்.

அவளை வீட்டில் விட்டு விட்டு அவன் சித்தப்பா வீடு சென்றான்.

இரவு முழுவதும் அதே நினைவு. காலை மலர்ந்ததும் எழுந்து குளித்துவிட்டு திவ்யா வீட்டிற்குச் சென்றான்.

தான் மயங்கி விழுந்த போது அவன் காப்பாற்றியதை திவ்யா வீட்டில் எல்லோரிடமும் சொல்லியிருந்ததால் அனைவரும் மிகப் பிரியமாக அவனை வரவேற்றனர். ராஜாபாதர் "திவ்யா மேலே தான் இருக்கிறாள். போய்ப் பார் தம்பி" என்றார்.

திவ்யா குப்புறப் படுத்துக் கொண்டு இரண்டு கால்களையும் தூக்கித் தூக்கி ஆட்டிக் கொண்டு எதையோ எழுதிக் கொண்டிருந்தாள்.

தாகூரின் புத்தகம் ஒன்று பக்கத்தில் கிடந்தது. அவன் அவளுடைய கண்ணைப் பொத்தினான். திடுக்கிட்டு விழித்த அவள் ''எப்போது வந்தீர்கள்?'' என்று கேட்டாள். அவள் எழுதிக் கொண்டிருந்த கவிதையை வாங்கிப் படித்தான். நேற்றைய அனுபவங்களை அவள் விரிவாக எழுதியிருந்தாள்.

குறிப்பாக, பூங்காவில் அவன் முத்த மிட்ட காட்சியை வார்த்தை ஜாலங்களோடு விவரித்திருந்தாள்.

'அவன் என்னிடம் வந்தான். மடியில் சாய்ந்தான், அணைத்தான். முத்தமிட்டான். அவன் ஒரு குழந்தை' என எழுதியிருந்தாள். அவள் சிரித்தபடி அதை அவனிடம் கொடுத்தாள்.

''வந்ததும் ஏன் கண்ணைப் பொத்தினீர்கள் நல்ல வேளை வேறொன்று செய்ய வில்லை என்றாள்.

''வேறொன்று என்றால்''—நாவரசன் பெருமூச்சு விட்டான்.''

''படுக்கையில் படுக்காமல் விட்டீர்களே! என்றாள் திவ்யா.

அப்படியே அவளைப் படுக்கையில் தள்ளித் தானும்... என நினைத்தான் நாவரசன்.

இனிமையான விடுமுறை நாட்கள். திவ்யாவும்—சந்திரனும், நவரசனும் மலைக் கிராமத்திற்கு வந்திருந்தனர். கேசவன் உற்சாகத்தோடு வரவேற்றான். மூவரும் எஸ்டேட்டை சுற்றிப் பார்க்கச் சென்றனர். கேசவன் முதுமை கொண்டு தனிமை சுகம் தேடினார்.

எஸ்டேட்டை ஒட்டி அருவி விழும் இடத்தில் புதிய குடியிருப்பு ஒன்று எழுந்திருந்தது. அந்தப் பகுதியில் இரும்பு கிடப்பதை அறிந்து—ஒரு கம்பெனி முதலாளி அங்கே வந்து தங்கியிருந்தார். கழுதைகள் வேலைக்குப் பயன் படுத்தப்பட்டன.

கடைசியில் இருந்த வீட்டில் அந்த 'கிராமத்தின் அக்கா' தங்கியிருந்தாள். நாகப்பனின் கூட்டாளிகளும், சாராய வாசனையும் இடமொதுங்க அவள் ஒரு புது வாழ்வில் சௌந்தர்யம் கொண்டிருந்தாள். கிழட்டுக் கணவன் இரும்பு தோண்டும் கம்பெனி முதலாளிக்கு அந்தரங்க காரியதரிசியாய் இருந்தான்.

அந்த மலைப் பகுதியில் அப்போது ஒரு புதிய பயம் கவிந்த—அச்சமூட்டும் நிலை படர்ந்திருந்தது. மாலை நேரம் ஆகி விட்டால் ஏலக்காய் ஏற்றிச் செல்லும் லாரிகள் தடுத்து நிறுத்தப் பட்டன. அந்த வட்டாரத்தைச் சுற்றியுள்ள இடங்களுக்கு வரும் பணக்காரர்களின் செல்வங்கள் கொள்ளை யிடப்பட்டன. பச்சைக் கலரில் பேண்ட்டும், சர்ட்டும் அணிந்து கொள்ளைக்காரன் தங்கையா தனது கூட்டத்தோடு மலைராஜாவாகமாறி யிருந்தான். பணக்காரர் களிடம் கொள்ளை யடித்த பொருள்களை யெல்லாம் வசதியற்ற ஏழைகளுக்கு அள்ளிக் கொடுத்தான்.

"நீலப் புடவைக்காரி
நிலக்கோட்டை காமுலம்மாள்
மறவன் மேல் ஆசைவச்சு
மன்னவனைத் துறந்த ராணி
ஆண்டிருந்த சீமையிலே கண்ணம்மா—இன்று
ஆளவந்தான் கொள்ளைக்காரன் தங்கையா"

நாடோடிப் பாடல்கள் அவனது புகழைப் பாடிக் கொண்டு பவனிவந்தன.

''இனுசு பெக்டர் துரைகளுக்கும்
இங்கிலீசில் எழுத்தனுப்பி
வாரேண்டா தொப்பிக்காரா
வந்து பிடிங்கடான்னு
சென்ட்ரல் சினிமாவிலே கண்ணம்மா—அவன்
செகண்டு ஷோவும் பாக்குறானாம் கண்ணம்மா''

அவனுடைய வீரசாகசங்கள் எல்லாம் திண்ணைப் பேச்சின் கருப்பொருளாயின. 'அக்கா' வை மையப் படுத்தி அவன் இயங்கியதாகப் பலபேர் சந்தேகப் பட்டார்கள்.

திவ்யாவிற்கு இது ஒரு பெரிய ஆச்சரியமாய் இருந்தது. இருளோடு தொடர்பு கொண்ட அடிமை வாழ்வின் பக்க மாகக் கிழக்கு நகர்ந்து வருவது போல் ஒரு தோற்றம் அவளுள். திவ்யா இந்த வருடம் ஒரு புதிய முயற்சியைத் தொடங்கி இருந்தாள். நகரத்தில் அவள் வாழ்ந்த பகுதியில் அனைவரையும் திரட்டி சங்கம் ஒன்றை அமைத்திருந்தாள். பொங்கல் திருநாளன்று அந்தப் பகுதியைச் சேர்ந்த அனை வரும்—எங்கே வேலை பார்த்துக் கொண்டிருந்தாலும் வந்து விட வேண்டும் ராஜாபாதருக்குச் சொந்தமான மிகப் பெரிய பள்ளியில் அவர்கள் அனைவரும் கூடுவார்கள். அந்தப் பகுதிக்கு என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டு மென்று திட்டமிடுவார்கள். அடுத்த ஆண்டுவரை அதைச் செயல் படுத்துவார்கள். ஒரு படிப்பகம் இருந்தது. அதில் அம்புலிமாமா, இந்து நேசன் தவிர எல்லாப் பத்திரிக்கை களும் வாங்கப்பட்டன. நூலகத்தில் உலகு அளவிலான எல்லாப் புத்தகங்களும் இருந்தன.

நாவரசன் ஒரு அரசியல் கட்சியின் ஆதரவாளனாய் இருந்தான். பொதுக் கூட்டங்களில் எல்லாம் கலந்து கொண்டு பேசினான்.

களங்கமற்ற திவ்யா ஒருகுழந்தையைப் போல அவனைப் பாவித்துத் தொட்டுப் பழகவெல்லாம் இடம் தந்தாள்,

அவன் திவ்யாவின் நிழலில் தன்னை வளர்த்துக் கொண்டு எப்படியும் பெரிய மனிதர் ஆகிவிடுவதெனத் தீர்மானித்துக் கொண்டான்.

மலைக் கிராமத்திற்கு ஓய்விற்காக வந்த அவர்கள் கொள்ளைக்காரனின் ஆட்சி அங்கே நடப்பதை அறிந்து பிரமித்தார்கள்.

மாலை நேரம். பனி—புகை போல கிராமம் பூராவும் பரவிக் கொண்டிருந்தது. திவ்யாவும்—நாவரசனும் தனித் தனியே மனதில் கனவுகளை வளர்த்துக் கொண்டிருந்தனர். 'அக்கா' வைப் பார்த்து விட்டு வரலாமென்று புறப்பட் டார்கள்.

போகிற போதே மழை பிடித்துக் கொண்டது. தாவணியை எடுத்துத் தலையில் முக்காடு போட்டுக் கொண்டாள் திவ்யா. நாவரசன் திவ்யாவின் பின்னால் அவளை ரசித்த படியே நடந்து கொண்டிருந்தான். அவள் திரும்பிப் பார்த்து சிரித்துக் கொண்டே கேலி செய்தாள்.

அக்கா அவர்களையெல்லாம் வரவேற்று உபசரித்தாள். நாற்காலிகளையும் மோடாக்களையும் எடுத்துப் போட்டாள். 'சாயா' கொடுத்தாள். திவ்யாவிடம் சிறுவயதிலிருந்தே அன்பு பாராட்டியவள் அக்கா. அவளுடைய வாழ்க்கை பொருத்தமற்ற கணவனால் பாழடைந்து போனதே என திவ்யா சோகம் கொண்டாள். நகரத்தில் வாழ்ந்தபோது— பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்துப் போராட வேண்டுமென்ற முடிவிற்கு ஏற்கனவே திவ்யா வந்திருந் தாள். அதன் தொடக்கம் தான் அவள் குடியிருந்த பகுதியில் அவள் அமைத்த சங்கம்.

அக்காவோடு அவர்கள் நீண்ட நேரம் பேசினார்கள். மழை விட்டு விட்டுப் பெய்து கொண்டிருந்தது. நாவரசன் ஏதாவது ஒரு காரணத்தை முன்னிட்டு திவ்யாவைத்

தொட்டுக் கொண்டிருந்தான். அந்தப் புனிதா தி—ஆசா பாசத்தை எல்லாம் கடந்த பெரு வெளியில் எதிர்காலம் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

"ஏன் திவ்யா இப்படி ஒரேயடியா திக்பிரமை பிடிச்ச மாதிரி ஒக்காந்துட்டே!" என்று அக்கா கேட்டாள்.

"இல்லக்கா—ஒங்களோட புதுப் போக்க நெனச்சா ஆச்சரியமா இருக்கு—நீங்க எப்படி அவங்களோட சேர்ந்தீங்க"

"வாழ்க்கையில என்னை போல வஞ்சிக்கப் பட்டவங்க எல்லாம் சேர்ந்து உருவாக்கினது தான் இந்தக் கொள்ளைக்கூட்டம். தங்கையாவோட தங்கச்சிய எஸ்டேட் மேனேஜரான ஒரு வெள்ளைக்காரன் கற்பழிச்சுட்டான். அதனால அவரு பணக்கார வர்க்கத்தையே பழி வாங்கணும்னு இப்படி ஆரம்பிச்சுட்டாரு" என்றாள் அக்கா.

திவ்யாவிற்கு இவர்களெல்லாம் விதைக்காமல் பலனை எதிர்பார்ப்பவர்கள் மாதிரி தெரிந்தது. மக்களைத் திரட்டாமல் தனிமை கொண்டு அநீதியை எதிர்ப்பது எப்போதும் வெற்றி பெறாது என நினைத்தாள். அக்கா இலை மறைவு காய் மறைவாக கொள்ளைக் கூட்டத்தோடு சேர்ந்திருந்தாள். திவ்யாவும் நண்பர்களும் விடை பெற்ற பிறகு—அக்கா தனிமையில் தனது ஏமாற்ற மயமான வாழ்வை நினைத்த படி நீண்ட நேரம் அழுது கொண்டிருந்தாள் இந்தச் சமுதாயம் முழுவதையும் பழிவாங்கத் துடித்தாள்.

நகரத்திற்குத் திரும்பிய பிறகு திவ்யா—தனது சங்கத்தை வலிமைப்படுத்தி பொதுப் பிரச்னைக்காகப் போராடத் தொடங்கினாள். கல்லூரி மாணவர்களை ஒன்றுபடுத்திச் செயல்பட்டாள்.

தமிழைப் பாடமொழி ஆக்க வேண்டும் என்னும் போராட்டம் அப்போது தமிழகம் எங்கும் நடந்து கொண்டி

ருந்தது. 'தமிழ்' என்று சொன்னாலே தமிழகம் முழுவதும் பற்றி எரியக் கூடிய கால கட்டம் அது நாவரசன் சேர்ந்த கட்சி தீவிரமாக போராட்டத்தில் ஈடுபட்டது.

திவ்யாவும் நாவரசனும் மாணவர் இயக்கத்தைத் திரட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நாவரசன் இதில் வரும் புகழை வைத்துக் கட்சியில் ஒரு பெரிய இடத்தை வளைத்துப் பிடிக்க திட்டம் தீட்டி தீவிரமாக செயல்பட்டான். திவ்யாவும், நாவரசனும் ஊர் ஊராகச் சென்று பேசினார்கள். ஒலி பெருக்கி கூட இல்லாத கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டனர். பல மாணவர்கள் தலைமறைவாகி போராட்ட உணர்ச்சிகளைத் தூண்டினர். திவ்யாவும், நாவரசனும் சட்டப்படி கைது செய்யப் பட்டனர். போராட்டம் தீவிரமானதும் ..அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

தேர்தல் நேரம் நெருங்கி விட்டது. அவனுடைய கட்சியின் 'தளபதி' போன்ற ஒரு குட்டி தலைவரைத் துதி பாடியே நாவரசன் தேர்தலில் 'டிக்கட்' பெற்று வெற்றி யடைந்து விட்டான்.

விடுதலைக்குப் பிறகு திவ்யாவிடம் தீவிரமான சிந்தனைகள் உருவாக்கத் தொடங்கின. பொருளாதாரப் பிரச்னை தீரும் வரை நாடு—புதிய உருவம் பெற முடியாது எனத்தீர்மானித்தான் மறுபடியும் கிராமத்திற்குத் திரும்பிச் சென்றான்.

நாகப்பன் வெளி நாடுகளை யெல்லாம் சுற்றி விட்டுக் கடைசியாக திரும்பி வந்தான். அக்காவின் வீட்டுக்குச் சென்று அவளோடு பேசிக் கொண்டிருந்தான். பல பரிசுப் பொருள்களைக் கொடுத்தான். நிறைய மது அருந்தினான். மது மயக்கத்தில் தனது அக்காவைக் கொலை செய்தது தானே என்று—சர்க்கசில் கத்தி வீசும் ஒருவனை அமைத்துச் சென்று மாமாவைக் கொல்ல முயன்றதாகவும்,

பிறகு அக்காவையே கொன்று விட்டு மாமா மீது பழியைப் போட்டு விட்டதாகவும் உண்மைகளை யெல்லாம் கூறி விட்டான். அக்கா இதை டேப் ரெக்கார்டரில் பதிவு செய்து போலீசாரிடம் ஒப்படைத்து விட்டாள். நாகப்பனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

ராஜாபாதர் இதைக் கேள்விப் பட்டதும் மகிழ்ந்தார். கேசவனும் சந்தோஷம் கொண்டாடினான்.

கொள்ளைக்காரன் தங்கையா ஒரு துரோகியால் காட்டிக் கொடுக்கப் பட்டு கைது செய்யப்பட்டான். ஆனால் அவனுடைய கூட்டம் தமிழகம் முழுவதும் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

சமூகத்தில் ஏழை—பணக்காரன் என்கிற வேற்றுமை ஒழிகிறவரை இன்பவாழ்வு கானல் நீரே என்று அவர்கள் முழக்கமிட்டார்கள்.

அவர்களைப் பக்குவப்படுத்தி ஆக்க வேலைகளில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தாள் திவ்யா. ராஜாபாதர் அவளைத் தேடி வந்தார். மலை ஓரத்தில்—அருவிக் கரையில் பறவைகள் பாடிக் கொண்டிருந்தன.

மாலைச் செவ்வானம் யாரோ ஒரு காதலியின் நாணத்தை அபிநயம் செய்துக் கொண்டிருந்தது திவ்யா அங்கே நின்று கொண்டிருந்தாள். ராஜாபாதரும்—கேசவனும் ஆனந்தக் கண்ணீர் சூடிய போது—ஒரு காவல் துறை அதிகாரி வந்து "திவ்யா—மக்களை சமூகத்திற்கு விரோதமாகத் தூண்டி விட்டதற்காக பாதுகாப்புச் சட்டப்படி உங்களைக் கைது செய்கிறோம்"—என்றார்.

முதியவர்கள் திகைக்க—ஊரெல்லாம் கிளர்ச்சி ஒலி எழ திவ்யா கை விலங்குகளோடு சிறைச்சாலையை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தாள்.

மக்கள் கூட்டம் கூட்டமாக திவ்யாவைத் தொடர்ந்து சென்றனர். "எங்களையும் கைது செய்" என்று முழக்க மிட்டனர்.

மலைச் சிகரத்திலிருந்து அருவி பூமியில் விழுந்து கொண்டிருந்தது. அந்தச் சிகரத்தில் உறங்கிய மனிதநதி ஜன சமுத்திரமாகப் பிரவாகம் கொண்டு திவ்யாவின் பின்னால் போய்க் கொண்டிருந்தது.

தேவலோகத்தில் ஒரு தமிழ் குயில்

(கவிதை நாடகம்)

காட்சி அமைப்பு

காட்சி :–1

பாரதி பாரதத்தாயைச் சந்தித்தல்

காட்சி ;–2

பாரதி கண்ணனைச் சந்தித்தல்

காட்சி :-3

பாரதி தமிழன்னையைச் சந்தித்தல்

காட்சி :-4

பாரத வீரர்களுடன் சந்திப்பு

காட்சி:-5

கண்ணம்மாவைச் சந்தித்தல்

காட்சி :–6

குயிலுடன் உரையாடல்

காட்சி :–7

பாஞ்சாலியுடன் சந்திப்பு

காட்சி :-8

கடவுளுடன் பாரதியும்,

பாஞ்சாலியும் கலந்துரையாடல்

காட்சி-1

பங்கேற்போர் :— பாரதி, பாரதித்தாய்.

அன்றொரு நாள், அழகு விளையாடும் நீல வானம் பொன் வண்ணம் சிந்துகின்ற அந்தி நேரம்.

அமரர் எல்லாம் அமுதம் உண்டு கொண்டும், குமுத மலர்ச் சிரிப்பில் குழி விழுந்த கன்னியரின் கன்னங்களைக் கண்டு கொண்டும், கண்மூடாமல் இருக்கும்போது, மனம் கவி பாட, ஒரு கவிஞன் கற்பக விருட்சத்தின் அருகில் வந்தான்.

(ஏ! கற்பக விருட்சமே! நீ எல்லாம் தருவாயாமே! ஆனால் என்றுமே உன்னால் கவிதை தர முடியாது என்றான். கர்வத்துடன் தலை நிமிர்ந்து நின்றிருந்தான்.)

முண்டாசும், முறுக்கு மீசையும், முகமெல்லாம் கோபத்தின் முகவரியும் கலந்தாட நின்றிருந்தான் எங்கள் கவியரசன் பாரதி!

அப்போது, இமயத்திலே, பனிப்போர்வை போர்த்து உறங்கி, எங்கள் குமரியிலே கால் சதங்கை கட்டி விளை யாடும் இந்தியத்தாய் வந்தாள். அவள் பேசுகிறாள்!

பாரதத்தாய் :—

மகனே! மறுபடியும் வசந்தம் வருமா? மணல் மேடெல்லாம் பூ மலருமா? (நிலம் விட்டு கலமேறி நீரினைக் கடந்து, பாரினை வென்ற இனம் இருக்க நிழலின்றித் தவிக்கிறதே!) நெருப்பில் வேகிறதே! அழுக்கே ஆடையாய், இறப்பே நித்திரையாய் ஆனந்த சுதந்திரம் வந்த பின்னும் வாடுகிறதே!

பாரதி :—

பொறு தாயே! நீயோ நீராடும் விழி கொண்டாய், போராடும் மனம் கொண்டாய், பழம் பெருமை

காற்றோடு போய்விடுமோ என்று பதைக்கின்றாய். (இந்திய நாடு இலட்சிய வீடு! என்றும் அழியாது அதன் பீடு!

பாரதி :—

(இரவில் வானவில் வராது தாயே! இந்தியாவிற்கும் இனிமேல் துன்பம் வராது!)

பா. தாய் :—

குயில் கூவும் சோலையெல்லாம் வெய்யிலால் அழிந்ததடா மகனே! வீரம் விளையாடும் திருநாட்டில் பலபேர் "வீரமென்று சொன்னால் அதன் விலை என்ன?" என்று கேட்கின்றார். வீணைகள் விறகாக, பூவெல்லாம் தீயாக, சந்தனம் சேறாக, சரித்திரம் சிறு கதையாக ஆனதடா! வேலையில்லாத் திண்டாட்டம், ஆள் தூக்கும் போராட்டம், விலைவாசி ஏற்றம், எத்தனை கொடுமை? நித்திரையைக் கூட—ஒத்தி வைத்து விட்டு நிலை மாறும் தேசம் வாழுமென்றா சொல்கின்றாய்? சிறு பூண்டா பிறை நிலவாய் மாறும்? கள்ளிப் பாலா தாய்ப்பாலாகும்?

பாரதி :—

தாயே! நீ ஏனம்மா தாலாட்டுப் பாடாமல் ஒப்பாரி வைக்கின்றாய்?

பாரதி :—

கங்கை நதி பொங்கி வரும், செங்கமல மங்கையர்கள் தங்க நிறம் கவியெழுதும் வான வெயில் உருகி வந்து பூமிக்கு ஆபரணம் ஆன கதை போல, அழியாத சத்தியத்தின் நிறம் எழுதும் வாவியிலே தாவித் துள்ளும் கெண்டை, இனிக்கும் செங்கரும்பு கொடியிலே மணக்கும் நல்லரும்பு. எங்கும் இயற்கை கொலுவிருக்கும் இனிய திருநாடு. யாரம்மா பாரதத்தைப் பழித்

துரைத்தார்? யாரம்மா உன் கண்ணில் கண்ணீரை ஓட வைத்தார்? அவர் பெயரைச் சொல்லி விடு!

பா. தாய் :—

என் பெயர் சொல்ல நீயிருக்கும் போது, என் மகனே! இங்கே மற்றவரின் பெயர் எதற்கு? புலிக்குகைக்கு வந்த குயிலும் நீயே! போர்களத்தில் விளையாடும் வாளும் நீயே! ஆறுதல் போதுமடா மகனே, அரை நொடியில் வருகின்றேன். பாரதத்தின் தேரை மறுபடியும் ஓட வைப்பேன்! அந்தப் புகழ் வீதிக்கு உன் பெயர் வைப்பேன்!

—திரை—

காட்சி : 2

பங்கேற்போர் :—

பாரதி, கண்ணன்

கண்ணன் வருகை :—

பதம் பிடிக்கும் பருவ மயில்கள், பாடும் குயில்கள்! அரங்கேறும் அபிநயங்கள்! ஆசைக்கு வலை வீசும் விழி மீன்கள்! ஆடவந்து, தரைமேலே குதிக்கின்ற அதிசயங்கள்! ஊர்வசியும், மேனகையும், ஒய்யாரி ரம்பையும், காதல் கலைக்கு காவியம் எழுதிய தலைவனுக்கு கலைப்பரிசு தருகின்றார். அவர்கள் இமை மூடித் திறந்தால் போதும், இந்திரனின் சபை கூடும் என்று யாரோ ஒரு தேவலோகக் கவிஞன் எழுதி வைத்தானாம்! அந்த உல்லாசபுரிக்கு புல்லாங்குழல் மன்னன் கண்ணன் வந்தான். புரட்சிக் கவிஞன் பாரதி அவனோடு பேச்சுப் பாடல் நடத்துகின்றான்?

★

பாரதி :—

கண்ணா! மழைமேக வண்ணா! என் கவிதையின் கதாநாயகனே! வில் விஜயன், பீமன், சொல்காத்த தருமன், சூதாடும் சகுனி, இவர்களையெல்லாம் ஆட வைத்த சூத்திரதாரியே! அழகிய நிலவொளியில் யமுனை நதிக்கரையில் ஆனந்த ராகம் இசைத்த வனே! (பஞ்சபாண்டவர்க்கு மட்டும்தான் நீ பாரதப் போர் நடத்துவாயோ? பஞ்சத்தில் வாடுகின்ற இந்தியர்க்கு துணை புரிய மாட்டாயா? ஏ! ஜாலக் காரா! இங்கே உனக்கென்ன வேலை...?)

கண்ணன் : —

மதுவேந்தும் கோப்பை மயங்குவதே இல்லை. பூச்சூடும் இடமெல்லாம் பூப்போல உதிர்வதில்லை. எங்கே நான் போனாலும் அந்த இடம் என் வசமாய் ஆகும். நான் எதற்கும் வசமானதில்லை. நான் பாலைவனத்திற்கு வசந்தமாய்ப் போவேன். அமா வாசை இருட்டில் நிலவாய் வருவேன். அறிதுயில் கொண்ட அரங்கனைப் பற்றி நீ அறியாத கதை உண்டோ அழகு தமிழ்க் கவிஞா?

பாரதி :

தலைவா! (நீ தசாவதாரம் எடுத்த பொன் நாட்டில், புதிதாக பசியவதாரம் எடுத்த கடவுள் யார்?) புண்ணிய நதிக்கரைகள், புத்தனுக்கே ஞானத்தைப் புரிய வைத்த போதிமர நிழல்கள். கண்ணா! (நாங்கள் மகாபாரதம் படித்தாலும் எங்களுக்கு மண் ணெண்ணெய் கிடைப்பதில்லை. எத்தனை லீலைகள்? எத்தனை ஜாலங்கள்? அரக்கரை அழித்தாய்— அரசர்க்கு நீதி நெறிகள் வகுத்தாய்—பச்சை மாமலை மேனியில் பதிந்திருக்கும் செம்பவள வண்ண இத ழோரம் ஒரு திருவாசகம் சிந்தாதா? தேய் பிறையாய்

இருக்கும் என்தாய் நாட்டை தேன் நிலவாய் வாழ வைக்க உன் திருமேனி நடக்காதா? ஊமைகளை பேசவைத்த கீதைநாயகா! இப்போது—இந்தியா விற்கு போனால் நீயே—ஊமையாவாய் நாகரிகத்தின் எல்லைக் கோடுகளைத் தாண்டி- நாடு எங்கெங்கோ போகிறது. ராஜ லீலை மன்னவனே! இராஜ தந்திரியே! நான் உன்னை பூப்போட்டு வணங்குகி றேன்—புறப்படடா!

கண்ணன் :—

குலைசாயும் வாழைத் தோப்பு—அங்கெல்லாம் குளிர் பூசும் இளந்தென்றல்! மலையெல்லாம் ஜீவநதிகள்! மரணத்தில் புகழை விதைக்கும் மனிதர்கள்! எல்லாம் இருந்தாலும், இதயங்கள் பூப்போல விரிந்தாலும், அங்கே இல்லாமல் போனது ஒன்றே ஒன்று! நிறத்தை, பிறப்பை, மொழியினை வைத்து உண்மை நெறி கெட ஜாதிகள் சொல்லி, பலபேர் குறுக்கு வழியில் கோபுரத் தில் ஏறிவிட முயல்கின்றார். போகின்றேன் அங்கே! மறுபடியும் வருகின்றேன்!

—திரை—

காட்சி : 3

பங்கேற்போர் :—

பாரதி, தமிழன்னை

தண்ணீருக்கு மேலே நெருப்பு முகம் காட்டுவதைப் போல், பொய்கையெல்லாம் மலர்ந்த செந்தாமரைப் பூக்கள்! வெள்ளை அன்னமும், அழகைக் கொள்ளை யிடும் குமரிகளும் விளையாடும் ராஜ வசந்த நந்தவனம் கண்திறக்க நல்ல நல்ல பூவெடுத்து செந்தாழம் பூமேனி

அசைய சேயிழையார்—வருகின்றார். அங்கே எங்கள் தமிழன்னை வெட்ட வெளியைத் தேடி வந்த வீரமுள்ள குல தெய்வம் போல் நின்றிருந்தாள். தமிழ்ப் பால் குடித்த தலைவன் அவள் புகழைப் பாடுகின்றான்!

★

பாரதி :—

எந்தன் சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்க்க வைத்த திருமகளே! சங்கத் தமிழ் கொடுத்து, சங்கீத வரம் கொடுத்து, சிங்க மகனென்று சீராட்டி, பாராட்டி வளர்த்தவளே! எங்கோ கிடந்தேன், எழுது கோலை உன் அருளால் எடுத்தேன். வாழ்க தமிழ் மொழி! வாழிய பாரத மணித் திருநாடு! என்று கவியமைத்துக் கொடுத்தேன். எங்கே உன் பெருமை...? இதயம் எரிகிறது தாயே!

தமிழன்னை :—

பாட்டனுக்கு ஒரு யானை இருந்ததாம். அவன் பேரனை மூட்டைப் பூச்சி கடித்ததாம் என்று பழம் பெருமை பேசிப் பேசி புதிய தலைமுறையை அழித்து விட்ட தமிழ் நாட்டின் தலையெழுத்தை யார் மாற்ற முடியும்? பழமை உரமாக வேண்டும். அங்கே புதுமை மலராக வேண்டும். அந்தப் பகுத்தறிவு நெஞ்சத்தில் பதிந்து விட்டால் தமிழ் நாடு பழையபடி நிமிர்ந்து விடும். எல்லாமே வாய்ப் பேச்சு, எங்கே போனாலும்—வார்த்தை விளம்பரங்கள்!

பாரதி :—

அத்தனையும் அப்படியே இருக்கிறதா? என் காலம் தான் இறந்த காலம் என்றிருந்தேன். இந்தக் காலமும் அப்படியே இருக்கிறதா...?

தமிழன்னை :—

மகனே! காணல் நீரில் மீன் பிடிக்க முடியுமா? காகிதப் பூவில் தேனெடுக்க முடியுா? இனிமேல் கன்னித் தமிழின் புகழ் வளர்க்க முடியுமா? நித்தம் நித்தம்—சாகின்ற ஆட்களுக்கு யார் அழுவார்?

பாரதி :—

இல்லை யில்லை! நம் குலப் பெருமை என்றும் அழியாது. சந்திர சூரியர் இற்று விழுந்தாலும் நம் சரித்திரம் மறையாது தாயே!

தமிழன்னை :—

என் மகனே நீ வாழ்க! நான் உன்னை சோதித் தேன். ஆனால் சோதனையில் நீ என்னை வென்று விட்டாய். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிப்ப தற்கு அறிகுறிகள் தெரிகிறது தமிழ் நாட்டில்.

பாரதி :—

புயல் வீசும் போது காட்டுத் தீ அணைந்து விடும் ஆனால் அப்போது வைரங்கள் ஒளிவீசும். வண்ணத் தமிழின் பெருமைகள் வைரங்கள் ஆகும். புதுப்புனலில் நீராடும் போது பொட்டுகள் அழிந்து விடும். ஆனால் புருவங்கள் அழியாது. புறநானூற்றுத் தமிழ் வீரம் புருவங்கள் ஆகும்.

தமிழன்னை : நன்றியடா கண்ணே! நன்றி!

—திரை—

★

காட்சி : 4

பங்கேற்போர் :—

பாரதி, பாரத வீர்கள்.

பாரத வீரன் :—

மகாகவியே! மாரதங்கள் ஓடிய பாரத நாட்டின் மணிக்கொடி ஏந்தும் வீரர்கள் நாங்கள்!

பாரதி :—

சுதந்திர தேசத்தின் சோலை மலர்களே! சொந்த இரத்தம் சிந்தி வந்த பகை முடிக்கும் வரலாற்று வேங்கைகளே வருக!

பாரத வீரன் :—

ஐயா! சமாதானம் தேடும் சைவப்புலிகள் நாங்கள்!

பாரதி :—

ஓ! வாருங்கள், தாய் வழித் தலைமையும், தாயகப் பெருமையும் காப்பது நம் கடமை என்று கவிதை பாடுங்கள்!

பாரத வீரன் :

எங்கள் தலைவனே! நீ ஏற்றிய வீரதீபம் என்றும் அணையாது. காற்று வந்து முரசை அசைக்கும் வேளையிலே பகைவரின் காலடியைத் தேடிவரும் காவிய வீரம் மறையாது.

பாரதி :—

அனைத்தும் அறிவேன். உம்மை அணைக்கத் துடிக்கிறேன். அருகே வருக!

பாரத வீரன் :—

எதிரிகளின் விளையாட்டு மைதானமாக இருந்தது பாரதம். ஆனால் இப்போது எல்லையோரத்தில் ஒவ்வொரு இந்தியனும் இமயமலை போல் எழுந்து நிற்கிறான்.

பாரதி :—

காந்தி என்னும் தேசீய விளக்கு அணைந்த பிறகு, உங்கள் கண்களே தீபமானது. நேரு பெருமகன் ஒரு ரோஜாக் கனவாய் உதிர்ந்த பிறகு நாடே நந்தவனம் ஆனது. இழப்பிற்குப் பிறகும் பயணம் தொடர்கிறது. இனிமேல் இந்தியாவில் எதிரிகள் நுழைந்தால் வீடெல்லாம் பாடி வீடு ஆகும், பரணி பாடும்.

பாரத வீரன் :—

நீ கற்றுத் தந்த பாடம் காலத்தை வென்று விட்டது. வெண்ணிலா இரவிலும் வீரம் விளையாடும் வெற்றித் திருநாடு—நீ பாடிய தந்தையர் நாடு! (இனிமேல் நாங்கள் இந்துக்கள் அல்ல, முஸ்லீம்கள் அல்ல, கிறித்துவர் அல்ல, எல்லோரும் இந்தியர்கள்.)

பாரதி :—

இந்தியர்கள் எல்லோரும் மனிதர்கள், உலகத்தாயின் குழந்தைகள்!

பாரத வீரன் :—

பாஞ்சாலம், பைந்தமிழகம், கேரளம், ஆந்திரம், வீரமராட்டியம், வெற்றித் திருமுகம் காட்டும் மற்ற மாநிலம் அனைத்திலும் உள்ள வீரர்கள் உன் பாட்டில் பட்டொளி வீசிப் பறந்த கொடியை வணங்கும் குலப்பெருமை மிக்கவர்கள்.

பாரதி :—

பழைய தோல்விகள் எல்லாம் வெற்றியின் விதைகள் ஆனது. ஆயிரம் மலர்கள் எந்தன் அன்னைத் திருநாட்டில் பூத்தன. ரோஜாவில் முள் இருப்பதைப் போல, அங்கங்கே சில கொடிய எண்ணங்கள். எல்லா மாநிலமும் இந்தியாவில் இருக்கின்றன. இந்தியத்தாய் எல்லா ஊர்களிலும் பவனி வருகிறாள். உள் நாட்டுக் குழப்பங்கள் மின்னல் கீற்றுகள். அதற்குப்பின் ஒற்றுமை மழை—பொழியும். அதை உங்கள் நெஞ்சில் எழுதுங்கள்!

பாரத வீரன் :—

சில இடங்களில் களைகள் வளர்ந்தாலும் கரும்புத் தோட்டம்தான் நமது தாயகம்!

பாரதி :—

தொடரட்டும் உங்கள் பணி! (இனிமேல் துப்பாக்கிச் சத்தம் மனைவியின் முத்தத்தைவிட இனிக்கட்டும்.) சென்று வருக! வென்று வருக!

திரை

காட்சி -5

பங்கேற்போர் :

கண்ணம்மா—பாரதி

பாரதி :—

சின்னஞ்சிறு கிளியே! என் கண்மணிப் பூங்குயிலே கண்ணம்மா! சுகம்தானா?

கண்ணம்மா :—

உனது பாட்டுச் சிம்மாசனம் ஏறிய பிறகு, இலக்கியத்தில் பட்டத்து இராணியானேன். இங்கே ஆண்களும், பெண்களும் நண்பர்களாகி மெல்லிய இதயத்தின் சங்கீத அலைகளைக் கேட்டு சதிராடுகின்றார்.

பாரதி :—

பெண்கள் ஒரு தேசத்தின் நாற்றங்கால்கள்!

கண்ணம்மா :—

அதனால்தான் இன்று நாங்கள் வீரத்தை விளைச்சல் செய்கிறோம்.

பாரதி :—

பெண்கள் பொன் வீணைகள்.

கண்ணம்மா :—

ஆம்! நீதான் அந்தப் பொன் வீணைகளைப் புழுதியில் வீசாமல் புரட்சி மேடை ஏற்றினாய்.

பாரதி :—

உங்கள் வீணைகள் எங்கே?

கண்ணம்மா :—

எங்கள் வீணைகளைப் போர்வாள்களாய் மாற்றி விட்டோம்!

பாரதி :—

அன்னியர்கள் படையெடுத்தால் வென்று பகை முடிக்க வேல் தந்து, வாள் தந்து, சென்றுவா மகனே

செருமுனை நோக்கி! என்று மகனைப் போர்க்களத் திற்கு அனுப்பிய தாய்க் குலம்தானே தாய்நாட்டைக் காக்க வேண்டும். பெண்ணின் பெருமையே இந்த மண்ணின் பெருமை!

கண்ணம்மா :—

எத்தனைக் கோணத்தில் பெண்மையைப் பாடினாய்! பொங்கும் அன்பைக் கண்களில் வரைந்தாய். விளையாட்டுத் தோழனாய் கதை பேசிக் கொண்டே கலை கற்றுத் தந்தாய். பெண்களின் மென்சதைப் பரப்பெலாம் தெய்வீகம் என்று பேசிய தேசீயக் கவியே! நான் உன் இலக்கியக் காதலி!

பாரதி :—

பிரபஞ்சக் கொடியில் மலர்ந்த பூவே! என் கண்ணுக்கு நீதான் அழகு.

கண்ணம்மா :—

அந்த அழகின் கன்னத்தில் நீ தானே கவிதைப் பொட்டு வைத்தாய்!

பாரதி :

மலர்களையும், மலையருவிகளையும், மானையும், மயிலையும் ரசிப்பதைப் போல மானசீகமாய் உன்னை நேசித்தேன்.

கண்ணம்மா :—

தங்க மேனியைத் தொடாமல் காதலியின் தலைக்கு கிரீடம் வைத்த தமிழ்க் கவிஞனே! மனதிற்கு சுகம் தரும் மந்த மாருதம் போல் உன் சந்தக் கவிதை என்னருகே வீசும்.

பாரதி :—

காற்று வெளியில் உன்னைத் தேடினேன்.

கண்ணம்மா :

எந்தன் மூச்சுக் காற்றாய் நீ மாறினாய். காதலே நிரந்தரம்! காதலே சுகம் தரும்! காதலே சுதந்திரம்! சென்று வருகிறேன். வேறு செய்தி உண்டா?

பாரதி :—

என்ன நான் சொல்ல! குழந்தைகள் எல்லாம் கவிதைகள்! கவிஞர்கள் எல்லாம் குழந்தைகள்! உயிரே என் செய்தி இதுதான். இனிமேல் உலகமெல்லாம் ஒவ்வொரு கவிஞனுக்கும் ஒரு காதலி கிடைக்க வேண்டும். அந்தியில் மன்மத மந்திரம் சொல்வதற்கல்ல, அவளோடு இருந்து சிந்தனைக் கவிதை வடிக்க!

கண்ணம்மா :—

நீ பெற்ற இன்பம் இவ்வையகம் பெறும் நாள் வளரும், மலரும். வருகிறேன் தலைவா!

—திரை—

★

காட்சி : 6

பங்கேற்போர் :—

பாரதி குயில்

பாரதி :—

தமிழ்க் குயில் கண்டெடுத்த தத்துவக் குயிலே! எப்போது வந்தாய்?

குயில் :—

என் பாடலோ பூமிக்கு தேவகானம். ஆனால் நீ தான் என் தேவலோகம்!

பாரதி :—

வாழ்க்கை எல்லாம் கனவின் கனவே? வந்தது என்ன? கண்டது என்ன? சென்றிடும் வேளை நாமெல்லாம் சிறுகதைதானே! ஆயிரம் விதைகள், ஆயிரம் மலர்கள், ஆயிரம் மனிதர் அவரவர் கதைகள், அத்தனைக்கும் நல்ல நீதி உண்டு. ஆடிய வேகத்தில் காலடிச் சுவடுகள் அழிந்து விட்டால் என்ன மீதி உண்டு?

குயில் :—

எனக்கோர் ஐயம், என்னை நீ ஏன் படைத்தாய்?

பாரதி :—

அது ஒரு தத்துவத் தேடல். புத்தனின் சாயல். உயிர் வீதி வழி நடந்து—ஊரெல்லாம் கடந்து ஒற்றைக் கனவொன்றில் உள்ளொடுங்கித் தூங்குகின்ற மனித குலத்திற்கு மரணமே விடுதலை என்பதன் குறியீடு!

குயில் :—

எப்படி இந்த வேதாந்தம் உந்தன் விலாசம் தேடி வந்தது?

பாரதி :—

அது ஒரு அறிவு நதியின் சங்கமம். கவிஞனின் கடைசிப் பாடலே—மௌனம்தான்!

குயில் :—

(நீயோ புரட்சிக் கவிஞன். எல்லாக் கவிஞர்களும் சூரிய நமஸ்காரம் செய்த போது, நீ மட்டும்தான்

சூரியனைப் பார்த்துக் கோபிக்கக் கற்றுக் கொண்டாய். அவர்களெல்லாம் ஆண்டவனின் ஆடிய பாதத்தை பாடிய போது, நீ ஆங்கிலேயரின் ஓடிய பாதத்தைப் பாடினாய். உனது கவிதைகள் நாத்திகர்களை சமய பக்தர்களாக மாற்றியதோ என்னவோ? ஆனால் அது ஆண்டவனையே சமூக பக்தனாக மாற்றி விட்டது.)

பாரதி :—

உணர்ச்சிகள் கங்கை நதி! அநுபவம் இமயமலை. சிந்தனையின் கடைசி எல்லையில் நதிகளெல்லாம் சிகரத்தில் உறங்கும். முகமே தெரியாத போர் வீரர்கள் தேசங்களின் பகையால் கைகலப்புச் செய்கிறுர்கள். ஆனால் அறிமுகமில்லாத அறிஞர்கள் நூல்களின் உறவால் கை குலுக்கிக் கொள்கிறார்கள். அந்நியர்கள் காக்கை குருவிகளைப் போல் இந்தியரைச் சுட்டதை எதிர்த்தது முதற் கட்டம். காக்கை, குருவி எங்கள் சாதி என்று பாடியதுதான் எனது கவிதையின் இறுதிக் கட்டம். மரணம் என்பது வாழ்க்கையின் ஆசான்!

குயில் :—

அப்படியென்றால் போர்க் குணம் என்பது ஞானத்தின் எதிரியா?

பாரதி:—

இல்லை... இல்லை. போர்க் குணம்—விதை. ஞானம்—புதுமலர், அநுபவம்—எல்லா உணர்ச்சிகளையும் இடம் மாற்றி விடும். பெண்மையின் இலக்கணம் இதனை விளக்கும்.

பாரதி :—

குழந்தையாய் இருக்கும் போது பாலுக்கு அழுதவள், தாயான போது குழந்தைக்குப் பாலூட்டுகிறாள்!

குயில் :—

என் மூலம் எதனை உணர்த்தினாய்?

பாரதி :

உன் மூலம் ஜீவாத்மாவை, பரமாத்மா தேடுவதை நான் பாடியதாய் ''பௌராணிகர்கள்'' சொல்லுகின்றார்கள். ஆனால் மரணம் மௌனத்தின் தாயகம்! வாழ்க்கை ஆலயத்தில் அந்த மௌனமே கீதமானால் போராட்டமே இல்லை என்பதைப் புலப்படுத்தினேன்.

குயில் :—

அமைதி வாழ்க! மானுடம் வெல்க! அனைவரும் சகோதரர், யாருமே அனாதைகள் இல்லை, அன்பு மந்திரம் சொல்வோம். வாழ்க உன் புகழ்! வாழிய பாரதி!

—திரை—

★

காட்சி : 7

பங்கேற்போர் :—

பாஞ்சாலி—பாரதி

பாரதி :—

புயல் காற்று தென்றல் ஆனதோ? குருக்ஷேத்திரம் பிருந்தாவனம் ஆனதோ? பூ முடித்து வருகின்றாள் பாஞ்சாலி. புதிய கோலம் கண்டேன்.

பாஞ்சாலி :—

தீமையை வீழ்த்தும் தர்மத்தின் வடிவை திருமுகப் பெண்மையாய் உருவகப் படுத்திய பாரதி! உனக்கு நன்றி சொல்ல வந்தேன். மறுபடியும் பாரத நாடு போய் வர வேண்டும்.

பாரதி :—

கண்களில் என்ன கவலைக் குறிகள்? கனலாய்ச் சுடுவதேன் உன் பெருமூச்சு?

பாஞ்சாலி :—

கரும்புத் தோட்டத்தில் பெண்கள் அழுத குரலைக் கேட்டு வருந்திய கொள்கைக் கவிஞனே! பாரத நாட்டில் பெண்கள் படும் பாடே ஒரு பாரதமாகும் கதையைக் கேட்டேன். கழுத்து எத்தனை அழகாய் இருந்த போதும் கழுத்தில் எத்தனை நகைகள் இருக்கு மென்று கணக்குப் பார்க்கும் காலம் அங்கே!

பாரதி :—

பெண்மையைப் பாடிய கவிஞன் நானே! உண்மையைச் சொல்வேன் உனக்கு, காலையில் சூரிய வெய்யில் பட்டாலும் பெண்களின் கற்பு பறிபோகும் என்று கருதும் ஆண்கள் இருக்கின்றார்கள்.

பாஞ்சாலி :—

அது மட்டும்தானா? ஆணுக்கும் பெண்ணுக்கும் சமத்துவம் என்பது பாட்டில் மட்டும்தான்—இருக் கின்றது. முத்தத்தை மறந்து விட்டு மதுவைத் தேடி (மனைவியின் முதுகில் மதுபானத்தின் விலை விபரத்தை காயங்களாக எழுதி வைக்கும் கணவர்கள் எத்தனை பேர்!)

பாரதி :—

ஆதிகாலச் சமுதாயத்தில் சமயல் வேலை பார்த்ததே ஆண்கள்தான். இப்போதும் சரிசமமாக உதவினால் என்ன?

பாஞ்சாலி :—

கேள்விப்பட்டால் உன் உள்ளம் எரியும். சிலபேர் எங்கள் இனத்தை இப்படிக் கூட எச்சரிக்கின்றார்களாம். (மனைவி ஒரு நல்ல வேலைக்காரியாய் இருக்க வேண்டும். இலலா விட்டால் ஒரு நல்ல வேலைக்காரி மனைவியாய் மாறுவாள்.) எப்படி இந்த செப்படி வித்தை? பத்து மாதம் சுமந்து பெற்று, பாலூட்டி, முத்து நவரத்தினமே, சித்திரப் புத்தகமே என்று செந்தமிழால் புகழ்பாடும் தாய்க்குலத்தை அடிமை போல் நடத்து கின்றார். குழந்தையை சுமப்பது, குடம் தூக்குவது, தண்ணீர் எடுப்பது, கண்ணீர் வடிப்பது எல்லாமே பெண்களின் வேலை.

பாரதி :—

இவற்றையெல்லாம் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் எந்தப் பிரச்சனைக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. தமிழ்த்தாய் எனக்குச் சொன்ன செய்தி இது. நல்ல கவிதைகள் எழுதிய செல்லக் கவிஞனை நண்பர்கள் எல்லாம் காவியம் பாடச் சொன்னார் களாம். கவிஞன் அதனைக் கேட்டப் பிறகு, (காவியம் எழுத எனக்கும் ஆசைதான். கதாபாத்திரங்களைக் கூட உருவாக்கி விட்டேன். ஆனால் எனது மனைவி பாத்திரம் தேய்க்கிற ஓசையில் எனது கதாபாத்திரங்கள் காணாமல் போய் விட்டன என்று கவிஞன் சொன்னானாம். இல்லறம் என்பது யாருக்கும் சுமை யாகக் கூடாது. எல்லோர்க்கும் துணையாக

வேண்டும்.) ஆணுக்கும், பெண்ணுக்கும் சமநீதி தருவோம். நீதியின் மகளே! நீ வா என்னுடன்.

பாஞ்சாலி :—

போவோம் பாரதம். ஆண்களின் குறைகளை அகற்றுவோம். பெண்களின் பிழைகளை விளக்கு வோம்!

பாரதி :—

நல்ல முடிவு! இதற்கு நாம் மட்டும் போதாது. நம்முடன் ஒருவரை அழைத்துச் செல்வோம்!

(திரை)

★

காட்சி -8

பங்கேற்போர் :—

பாரதி—பாஞ்சாலி—கடவுள்

பாரதி :—

இறைவா! நீ எங்கே இருக்கிறாய்? எங்கள் கவிஞன் ''இக்பால்'' மூலம் தோழர் ''லெனினே'' உன்னைச் சந்தித்தாராமே! அவரோடு பேசும் போது ஆத்மா வோடு கூடிய சமதர்மத்தை நீ ஆதரித்தாயாமே!

பாஞ்சாலி :—

வானத்தில் நிலவு தீபம் ஏற்றி மேகஊர்வலம் காட்டி, நதியும், மலையும் கடலும் படைத்த நாயகா! இந்தச்

சொர்க்கத்திலிருக்கும் எல்லோரும் மனித வாழ்வில் சாதனை புரிந்த மாமனிதர்தானாம். எங்கள் கண்ணன் கூட அப்படித்தான் என்று அனைவரும் சொல்கிறார்.

பாரதி :—

(கடவுளே! எங்கள் பக்கம் உன் காதுகளைத் திருப்பு. எரியும் பிரச்சனைகள் இருக்கும் போது உனக்கு தீபம் ஏற்ற முடியுமா? எரிமலை மேலே மலர்க்கொடி படர்ந்து விட்டால் இறைவனுக்கு மாலை கிடைக்குமா? நடை பாதை மீது பலர் தூங்குகின்றார். சிலை மீது அங்கே மலர் தூவுகின்றார். தலைவா! இது நீதிதானா? உருவமற்ற உனக்கு ஏன் உருவங்களைப் படைக்கும் வேலை?

கடவுள் :—

தேசத்தையே தெய்வமாக்கிய கவிஞனே! உனக்காக இந்த தெய்வம் உன் தேசத்தைக் காக்கும். வாழ்க்கை என்பது மனிதனுக்கு நான் வழங்கும் தண்டனை. மரணம் அவனுக்கு நான் தரும் விடுதலை. உருவமற்ற காற்றுதானே உலகத்தை இயங்க வைக்கிறது. குழந்தைகள் செய்யும் குறும்பைப் போல் நான் படைத்த பிறகு என்னையே எதிர்த்தார்கள் இந்த மனிதர்கள். எந்த ஒரு படைப்பும் படைத்தவனை நினைவூட்டும். இந்தப் படைப்பு என்னையே கனவென் ...ால்கிறது!

பாரதி :—

அதனால் தானா அவர்களை உலகத்திற்கு அனுப்பி, உண்மையைப் புரிய வைத்து, மறுபடியும் உன்னிடமே அழைத்துக் கொள்கின்றாய்?

பாஞ்சாலி :—

தந்தையே! நீ நினைத்தால் எல்லோரையும் நல்லவர்களாக மாற்ற முடியாதா?

கடவுள் :—

அது இயற்கையின் நியதி இல்லை. (மகளே! கசப்பைப் புரிந்தால்தான் இனிப்பின் மகிமை தெரிகிறது. காயைக் கடித்தால்தான் கனியிருப்பது தெரிகிறது. கருக்கிருட்டிற்குப் பிறகே விடியல் வருகிறது. கொல்லன் உலைக்களத்தில் அடிப்பட்ட பிறகுதான் தங்கம் நாடாளும் கிரீடம் ஆகிறது!)

பாரதி :—

தெய்வமே! இது பொது உண்மை. விதிவிலக்கும் உண்டல்லவா? எங்கள் தேசத்தில் வறுமையை ஒழிக்க நீ வரத்தான் வேண்டும். (புதுமைப் பித்தனின் கந்தசாமி பிள்ளையோடு பூமிக்குப் புறப்பட்ட கடவுளே) இந்தப் புதுமைக் கவிஞனோடும் நீ வர வேண்டும்.

பாஞ்சாலி :—

தேனூற்றி, பாலூற்றி, திருநாளில் விளக்கேற்றி, ஊர்கூடித் தேர் இழுத்து ஊர்வலமாய் வழி நடந்து உற்சவத்தில் புகழ்பாடி உன்னை வணங்குகிறோம். எங்கள் கண்ணானத் தாய்நாட்டை நீதான் காக்க வேண்டும்!

கடவுள் :—

வருகிறேன் மகளே! உன்னைப் போல் அன்னை மனம் படைத்த பெண் மக்கள் அங்கேயும் இருக்கின்றார். பாரதியைப் பின்பற்றும் படை வீரர்களும்

இருக்கின்றார். வாருங்கள் போவோம்! ஆசியாவின் ஜோதி அணைந்து விடாமல் காப்போம்!

★

பின்னணிக் குரல் :—

வானவெளி சஞ்சாரம் நடக்கிறது! கதையோ இது கற்பனையோ! நள்ளிரவு வேளையிலே கவிஞன் கண்ட கனவோ! எதுவென்றால் என்ன? இதயங்கள் பேசட்டும்!—இந்தியத் திருநாட்டின் சந்தனப் புகழை—சரித்திரத்தின் பொன்னேட்டில் எழுதும் நாள் வர வேண்டும் அதற்காக இளைய தலைமுறை பாரதியின் வழியில் நடை போட வேண்டும்!

திரை

★

ஒரு கிராம தேவதையின் வெளிநடப்பு...!

கவிதை நாடகம்

காட்சி-1

பாத்திரங்கள் :

பேராசிரியர் மோகன்—

மிராசுதார் வேலு—

அவர் மனைவி ராணி—

மாணவன் ரமேஷ்—

இடம் :

மிராசுதார் வீடு

மாலை நேரம்

★

பேராசிரியர் மோகன் :— **(ரமேஷிடம்)**

இளைஞனே! இதுதான் உன் கிராமமா?
எத்தனை அழகு—
கண்களுக்கு முன்னால் பூமி ஒரு
ஊமைக் கவியரங்கம் நடத்துகிறது!

மிராசுதார் வேலு :—

யாரிது ரமேஷ்?
அமரச் சொல்!

மிராசுதார் வேலு :—

ராணி!
இனிக்கும் தண்ணீர்க் குடங்களை—
அந்த இளநீர்க் குலைகளை
வெட்டி எடுத்து வா!

ரமேஷ் :—

ஐயா!
ஒவ்வொரு நாளும்
நான் தீட்டிய சொல் சித்திரம்
இதோ! உங்கள் முன்
உயிரோவியமாய் நிற்கிறது.
கல்லூரிப் பேராசிரியர்
கலைகளின் ரசிகர்!
எங்கள்—
இதயப் பாலைவனத்தின்
ஜீவநதி ஆனவர்—
தைமாதக் கரும்பாய்த்
தமிழை மாற்றும் கவிஞர்!

மிராசுதார் வேலு :

ஓஹோ! இவர்தான் அவரா!
உட்காருங்கள் ஐயா!
புழுதிப் படலம், செம்மண் தரை,
மழைமுகம் பார்க்கும் பூமி—
அலுத்துப் போன வாழ்க்கை இங்கே...!

பேராசிரியர் :—

அப்படிச் சொன்னால் எப்படி...!
நிழல் வீடுபோல் தென்னந் தோப்பு

நுரைச் சதங்கை கட்டி
ஆடிக் கொண்டே ஓடும்
அழகிய நதிப்பெண்—
துறவிகள்
குடும்பம் நடத்துவது போல்
மழையில் விளைச்சல் காட்டும்
செம்மண் நிலம்
இங்கே வீசும் காற்று
மந்திரம் சொல்லும்
இதயம்—
இங்கே குடியிருந்தால்
சொர்க்கம் அங்கே குடியிருக்கும்.

ராணி :—

இளைய தென்றல்
எங்கே வீசுமோ
இனிய மலர்கள்
எங்கே பூக்குமோ
இளமைக் காலம்
எங்கே ஊஞ்சல் போடுமோ
அங்கே—
அந்த இயற்கை மடிக்கு
வந்த அறிஞரே! வருக!

ரமேஷ் :—

இவரும் உன்னைப் போல்
இருளில் ஒளி தேடும்
இலக்கியப் பறவை அக்கா!
(பேராசிரியர் பக்கம் திரும்பி)
ஐயா!
இவள் ஒரு

புத்தகப் பைத்தியம்!
புதுமைக் காவியம்!

மிராசுதார் —

ஆமாம்!
இவள்—
ஒரு மாதிரியான
வாழ்க்கையின் ரசிகை.
தலையிலே —
சாணிக் கூடை சுமக்கும்
கிராமத்துப்
பெண்களின் நடுவே
கூந்தலில் ரோஜா மலர் சூடும் தேவதை!
குழந்தைக்குத்
தொட்டில் கட்டும்
கனவுக் குழந்தை!

ராணி :—

இல்லை... இல்லை
இவர் பேச ஆரம்பித்தால்
உண்மை ஊமையாகிவிடும்
சரி... சரி...
எல்லோரும் வாருங்கள்
உணவு கொள்ளலாம்.

ரமேஷ் :—

அக்கா வீட்டுச் சாப்பாடு
அடியேனுக்குச் சக்கரைப் பொங்கல்!
ஐயா...! வாருங்கள்...
(அனைவரும் உணவு உட்கொள்கின்றனர்)

மிராசுதார் :—

சாப்பிடுங்கள்...
"தூண்டிலில் சிக்காத
அயிரை மீன் குழம்பு...
காளான் பொறியல்...
அடடா..!
ராணி! அமர்க்களம்.

பேராசிரியர் :—

தலைவாழை இலைபோடும்
தங்கையே!
சிலபேர்
கண்ணருகே இருந்தாலும்
கைக்கெட்டாத தூரத்தில்
இருப்பது போல் தோன்றும்.
ஆனால் நீ—
கண்ணருகே இருந்து
கையருகே மலர்ந்து
திருவாளர் வேலுவை
வாழவைக்கும் தெய்வம்!

மிராசுதார் :—

சரியாகச் சொன்னீர்கள்!
இவளை நான்
தவமிருந்து
மணமுடித்தேன்.
(இந்த முல்லைப்பூ இல்லையென்றால்
மூட்டைப் பூச்சி மருந்தென்று...
பிரகடனம் செய்த பிறகுதான்
பிரியமானவளைப் பெற்றேன்!)

பேராசிரியர் :—

அடடா... சுவையான உணவு
சுவையான கதை...!
(அனைவரும் சிரித்தபடி சாப்பிடல்)

—திரை—

காட்சி : 2

இடம் :—

தென்னந் தோப்பு—நதிக்கரை
வயல்வெளி

பங்கேற்போர் :—

மிராசுதார்
ரமேஷ்
ஜானகி
பேராசிரியர்

★

மிராசுதார் :—

பேராசிரியரே!
இதுதான் எங்கள் முல்லைநதி!
இதன் தண்ணீரே
எங்கள் மக்களுக்குத்
தாய்ப்பால்!
மலையிலிருந்து—
ஒரு கிராமத்துப் பெண்
குளிர் காற்றில் குலுங்கி

நடந்து வருவதைப் போல
ஓடிவரும் இதன்
அழகைப் பாருங்கள்!

பேராசிரியர் :

அடடா...!
நீங்களே கவிஞராகி விட்டீர்கள்
(இங்கே இருந்தால்
காட்டுமிராண்டி கூட
கம்பனாக மாறிவிடுவான்.)

பேராசிரியர் :—

உண்மையில்,
(இயற்கைதான் கவிதை!
கவிஞர்கள் —
அதன் தொகுப்பாசிரியர்கள்).

ரமேஷ் :—

விடுகதைகளும்,
பழமொழிகளும்
கவிதையின்
வெட்டவெளி மேடைகள்தான்!

பேராசிரியர் :

இங்கே—
ஒரு கிராமமே
கவிதையாய் இருக்கிறது!

மிராசுதார் :—

ஒரு கேள்வி கேட்கிறேன்
பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்.

தாழம்பூ—
ஏன் தலைமறைவாய் இருக்கிறது?

ஜானகி :—

(வந்துக் கொண்டே)
மனிதனைக் கடித்த பாம்பு
மறைந்து கொள்வதற்காக!

பேராசிரியர் :—

என்ன வியப்பு!
இங்கே எல்லோரும்
கவிஞர்களாய் இருக்கிறீர்களே!

மிராசுதார் :—

இவள்—
என் செல்லத் தங்கை!
கூவத் தெரியாத சிறுகுயில்;
தாவத்தெரியாத கலைமான்!
எனக்கு—
இவள் பேச்செல்லாம் தேன்கூடு
பள்ளியில்—
கடைசி வருடம் படிக்கிறாள்,
என் உள்ளத்தில்
முதல் இடம் வகிக்கிறாள்!

பராசிரியர் :—

நான்—
நாட்டுப் பாடல் ஆராய்ச்சி
நடத்த வந்தேன்!
ராஜாளிப்பறவையை
நிமிர்ந்து பார்த்தால் கழுத்து வலிக்கும்,

இந்த கிராமத்தில்
நடந்து போனால்
கவிதை பிறக்கும்!

மிராசுதார் :—

மிக்க மகிழ்ச்சி!
தெருக்கூத்துகளிலிருந்து
திண்ணைப் பேச்சு வரை
இங்கே நாட்டுப் பாடல்கள்
நாட்டிய மாடும்!
காதல் பாடல்களை
பாடும் கிறு கிறுப்பில்
கிழக்கு—
மஞ்சள் பூசும் வேளையில்
இதயம் மலரும்.
வாழ்வில்
வசந்தம் வந்ததும்
அதுவரை மௌனமாய் இருந்த
ஊமைக் குயில்கள் பாடும்!

பேராசிரியர் :—

(இலக்கியத்தில்—
காவியம் என்பது நிலாவெளிச்சம்,
நாட்டுப் பாடல் வீட்டு விளக்கு!
விண்ணிலே—
வெண்ணிலவு வந்து விட்டது
என்பதற்காக யாரும்
வீட்டு விளக்கை அணைப்பதில்லை.
இலக்கியம்—
பெருவீரப்புகழ்பாடும்
புறநானூற்றிலும் உண்டு,

பெரிய எழுத்து
விக்கிரமாதித்தன் கதையிலும் உண்டு.)

ஜானகி :—

அண்ணா!
ஊர்ச்சாவடியையே
தோப்புக்கு
இழுத்து வந்து விட்டீர்களே!

ஜானகி :—

எனக்கு அவசரம்...
நான்—
படம் பார்க்கப் போக வேண்டும்...
காசு வேண்டும்.

மிராசுதார் :—

(காசு கொடுத்து அனுப்பிவிட்டு)
பேராசிரியரே!
பெருமைப் படுகிறேன்.
எங்கோ ஒரு மூலையில்
கிடக்கும் இந்த குக்கிராமத்தின்
புழுதி மண்ணை நேசிக்கும்
உங்கள் இதயத்தை
நான் நேசிக்கிறேன்.
நீங்கள் இனி
எங்கள் வீட்டிலேயே தங்கலாம்.
ஆயுள் காலம் முழுதும்கூட
ஆராய்ச்சி நடத்தலாம்!

பேராசிரியர் :—

நன்றி!
இந்த மண்ணின் கனவுகளை

நான் மலர வைப்பேன்!
வாருங்கள்!
இப்படியே காலார
நடந்து போகலாம்.

—திரை—

★

காட்சி: 3

இடம் :—

ஊர்க்கோடிப் பிள்ளையார் கோவில்.

பங்கேற்போர் :—

ஜானகி
காதலன் ராமு

★

ஜானகி :—

ஏனத்தான் அந்தப்
பன்னீர் மலர்களையே
பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?

ராமு :—

அவைகளும்
என்னைப் போல் காத்திருந்து
சலித்துப் போனதால்!

ஜானகி :—

அடடே!
இது என்ன புதுக்கதை?

ராமு :—

கதையல்ல ஜானகி!
காதல் சரித்திரம்.
அந்தப் பிள்ளையார்
ஒரு பிரம்மச்சாரி
அவனுக்காகக் காத்திருந்து
அந்த மலர்கள் உதிர்கின்றன!

ராமு :—

உனக்காகக் காத்திருந்தால்
நான்—
பிரம்மச்சாரி ஆவதைவிட
வேறு வழியில்லை

ஜானகி :—

ஏற்கனவே
அனாதையாய்க் கிடக்கும்
இதயத்தை
வேதனைப் படுத்தாதீர்கள்.
பாலும் பழமும்
தேனும் கிடைத்தாலும்—
பருவம்
உங்களைத் தான் தேடுகிறது
நீங்கள் இல்லாவிட்டால்—
நான்—
பாடப்படாத பாடல்
எழுதப்படாத ஓவியம்
இறைவன் இல்லாத ஆலயம்!

ராமு :—

ஏதேது—
படம் பார்க்க
ஆரம்பித்த பிறகு
தமிழ் வார்த்தைகளை வைத்துப்
பாண்டி விளையாட
ஆரம்பித்து விட்டாய்!

ஜானகி :—

இல்லை அத்தான்
இரவெல்லாம் எனக்கு
உறக்கமில்லை.
விடிந்து விட்டால்—
அந்த வானவீதி
கருக்கிறதா? வெளுக்கிறதா?
என்று காண்பதற்குக் கூட
எனக்குச் சக்தியில்லை.

ராமு :—

என்ன—
முகம் வாடியிருக்கிறது?

ஜானகி :—

இப்போதுதான்
தூங்கி எழுந்து வருகிறேன் அத்தான்!

ராமு :—

தூக்கக் கலக்கத்தில் கூட
உனது முகம்—
லேசாகக் கசங்கிய
பட்டு கைக்குட்டைபோல்

பார்ப்பதற்கு
அழகாய்த்தான் இருக்கிறது!

ஜானகி :—

உங்களுக் கென்ன?
எப்போதும் உல்லாசம்தான்.
கலைமான் நான்—
காதல், கானல் நீராகிவிடுமோ
என்று கண்ணீர்
வடித்துக் கொண்டிருக்கிறேன்!

ராமு: —

எனக்குக் கூட
வருத்தமாய்த்தான் இருக்கிறது!
உனது அண்ணனோ
(அந்தஸ்தில் கார்மேகம்!
நானோ—
வெறும் கரித்துண்டு)!
(உனக்கு மட்டும் தான்
கல்வாழைப் பூ நெஞ்சம்!
உன் அண்ணனுக்கோ கல்நெஞ்சம்!)
முதலில் சிரிக்கப் பேசி
கடைசியில்—
கழுத்தை அறுக்கும்
பிரபுக்களின்
பிறவிக் குணம் அது!

ஜானகி :—

நானென்ன செய்வேன்?
(பாலை வனத்தில்
மலர்ந்து விட்டதற்காக

ஒரு ஏழை ரோஜாவை
பருவக்காற்று)
தீண்டாமலா போய்விடும்?

ராமு :—

இல்லை கண்ணே!
உன்—
(ஈச்சங் குருத்தழகும்
ஈரவெங்காய்த் தோலழகும்)
பார்த்த நாள் முதல்
இன்று வரை
என் பார்வையை விட்டுப்
போகவில்லை!
என் கண்ணில்
ஆடும் பொன்வண்ணமே!
காதலர்கள் கூட சாகலாம்
காதல் எப்போதும் சாகாது!

ஜானகி :—

சீச்சி'
இது என்ன அபசகுணம்.
புது வசந்தம் தேடிப்
புறப்படும் நேரத்தில்
இடியோசை கேட்கிறது!

ராமு :—

நான் —
இனி என்ன சொல்வேன்?
நாளெல்லாம் பொழுதெல்லாம்
உன்—
பால் வடியும் பூ முகத்தைப்

பார்த்துக் கொண்டே இருப்பேன்!
(திடீரென்று மிராசுதார் அங்கு வந்து...)

மிராசு :—

ஏ! ராமு
கருத்துக் குருடனே!
உனக்கு
காதல் ஒரு கேடா?
காட்டானைப் பொட்டலிலே
கட்டெறும்புக் கூட்டமா?
நசுக்கி விடுகிறேன்!
ஊரை விட்டு
இப்போதே ஓடிவிடு
இல்லா விட்டால்
நீ உன் தகப்பனுக்குப்
பேர் சொல்ல மாட்டாய்!
ஏ! ஜானகி
வா என்னோடு!
(ஜானகியை மிராசுதார் இழுத்துக் கொண்டு செல்லல்)

—திரை—

★

காட்சி : 4

பங்கேற்போர் :—

பேராசிரியர்

ராணி

இடம் :—
மிராசுதார் வீடு

★

ராணி :—

ஐயா!
"நீர் மோர்" தரட்டுமா?

பேராசிரியர் :—

வேண்டாமம்மா!

ராணி :—

இதோ பாருங்கள்!
பழக்குலைகள்,
இளம்பனை நொங்குகள்,
வரும்பசி தீர்க்கும்,
வைகாசி மாம்பழங்கள்,
எது வேண்டும்
சொல்லுங்கள்!

பேராசிரியர் :—

எதுவுமே வேண்டாம் ராணி!
நீ—
உன் இதயத்தைத்
திறக்க வேண்டும்,
நான் வரும்போது
பழைய படம் ஒன்றைத்
தூசி
துடைத்துக் கொண்டிருந்தாய்.
அதற்குப் பிறகு
நீ உன்
கண்ணீரை
ஏன் துடைத்தாய்...?

ராணி :—

எல்லாம்
நடந்த கதை,
முடிந்த கதை.
இளமைக் கனவுகள்
எரிந்து போய்விட்டன!
என் இதய வீணை
என்றோ உடைந்து விட்டது.
செம்பவளச் சக்கையைப் போல்
வெற்றிலையை மென்று கொண்டு
வம்பளக்கும்
ஒரு பாமரன் பார்வையில்—
செந்தாழம் பூ
வாடி விட்டது!
சந்தன மரம்
சாய்ந்து விட்டது!
சண்பக மலர்
உதிர்ந்து விட்டது!

பேராசிரியர் :—

கையில் என்ன ராணி?
அந்தப் புகைப்படம்தானா
உன் நெஞ்சத்திற்கு
நெருப்பு மூட்டுகிறது!
எங்கே...
அதைக் காட்டு.
(படத்தைப் பார்த்து விட்டு)

பேராசிரியர் :—

அழாதே ராணி!

ராணி :—

அழாமல்
என்ன செய்வது?
இந்த வீட்டில்
வந்த நாள் பிடித்து
என்—
முந்தானை முடிச்சிற்கு
சொந்தம் கொண்டாடியது
சோகம் மட்டும் தானே!

பேராசிரியர் :

தேவதைகள்
அழக்கூடாது ராணி!
அவர்கள்—
பூத்தூவப் பிறந்தவர்கள்.

ராணி :—

என்ன சொல்கிறீர்கள்?
இங்கேயும்
எனக்கு
ஏமாற்றம் தானா?

பேராசிரியர் :—

ஏமாற்றம் இல்லை.
சுந்தரராகம்
பாடவந்த
உன் மன்மத வீணையில்
அபஸ்வரம்
மீட்டிய
காலத்தின் முரட்டுக் கரங்களை
என்னால்

மன்னிக்க முடியவில்லை.
உன் கண்ணில்
இப்போது வழிவது
என் கண்ணீர்தான்!
தரமான
செந்தமிழ்ப் பெண்ணே!
என் தங்கையே!

ராணி :—

அப்பப்பா.
இலவு காத்தக்
கிளிக்கு
பழக் குலையே
கிடைத்து விட்டது!
எனது நெஞ்சின்
ஒரே ஒரு ஆசை
நிறைவேறி விட்டது!
கண்ணால் கண்டவுடனேயே
அண்ணா!
என்று அழைக்கத்
துடித்தேன்.
கைக் குழந்தையாய்
இருந்திருந்தால்
உங்கள்
காலடியில் தவழ்ந்திருப்பேன்

பேராசிரியர் :—

ஏன் இந்த
வேதனை ராணி?
எனக்கு
அதைச் சொல்வாயா?

ராணி :—

அண்ணா!
அது—
ஆடி முடிந்து விட்ட கதை!
அப்பாவோ,
ஒரு நோயாளி;
அண்ணனோ
செலவாளி.
எனக்கு—
பருவம் வந்தபோது
எங்கள் வீட்டில்
பழைய சோற்றுக்குக் கூட
வழியில்லை.
மிராசுதார்—
என்னோடு படித்தவர்.
கண் கட்டு
வித்தையைப் போல்
எனக்காகக்
காத்திருந்து
காசை இறைத்து
என்னைக்
கல்யாணம் முடித்து விட்டார்!

பேராசிரியர் :

என்ன உலகம்!
எத்தனை சோகம்!
இங்கே—
முகங்கள் எல்லாம்
பொய் முகங்கள்!
அழவேண்டாம் ராணி,
உன்னைத் தேற்றிக் கொள்!

—திரை—

★

காட்சி : 5

பங்கேற்போர் :—

மிராசுதார்
ராணி
பேராசிரியர்
ராணியின் தம்பி ரமேஸ்
ஊர் மக்கள்

இடம்:

ஊர்ச் சாவடி

★

(ஜானகியும், ராமுவும் தூக்கில் தொங்குகின்றனர், மிராசுதார், ராணி, பேராசிரியர், ரமேஸ் அனைவரும் ஓடி வருகின்றனர்.)

மிராசுதார் :—

ஜானகி!
இப்படி
மோசம் செய்து விட்டாயே!

ராணி :—

ஊருக்கெல்லாம்
நீங்கள்
செய்த மோசடி
உங்களைத்
திருப்பித் தாக்குகிறது.

மிராசுதார் :—

வெட்கம் கெட்டவளே!
விலாசம் தெரியாத
உனக்கு
உல்லாசம் கொடுத்தேனே;
கட்டுச் சோற்றுப்
பரம்பரைக்குக்
கட்டிக் கரும்பை
வெட்டிக் கொடுத்தேனே!
இப்போது—
நீயே என் கண்ணில்
குத்துகிறாயா ?

ராணி :—

எத்தனையோ பேர்களின்
தங்கைகளுக்கு
அத்தானாக மாறி
அவரையெல்லாம்
சாகடித்த
அற்பப் புழுவே!
சொந்தத் தங்கையின்
காதலுக்கும்
எமனாகி விட்டீரே!
சீறி வரும்
சூறாவளியில்
சிறு பிள்ளைக் கட்டிய
மணல் வீடு
சிதைந்துப் போனதைப் போல்
அந்தச்
சின்னமலர்;
எந்தன்

செல்ல மலர்
சீரழிந்துப் போய் விட்டதே!

ரமேஸ் :—

அக்கா!
வாருங்கள்
வீட்டிற்குப் போகலாம்.

ராணி :—

வீட்டு விளக்கே
அணைந்த பிறகு
அந்த வீடு எதற்கு?
ஒரு வானவில்
மறைந்து விட்டது;
வசந்தம்
உதிர்ந்து விட்டது.
கட்டிப் பிடித்து
கைகொட்டிச் சிரித்து
என்னைச் சுற்றியே
வட்டமிட்டுத் திரிந்த
ஒரு வண்ணக்கிளி
எங்கேயோ
பறந்து விட்டது!
எனது உள்ளமெனும்
சோலையிலே
வெள்ள மெனும்
கவிதைப் பாட்டிசைத்த
அந்தப்
புள்ளினத்துப்
புவியரசி போய் விட்டாள்.

ஒரே ஒரு பாலைவனம்,
இரண்டு ரோஜாக்கள்!
இப்போது—
நான் மட்டும் இருக்கின்றேன்,
ஒரு—
(பாலைவன ரோஜா
தேவலோகத்துப்
'பாரி ஜாதம்'
ஆகிவிட்டது!)

மிராசுதார் :—

திருந்தி விட்டேன்
திருவிளக்கே!
இனி—இந்த
ரோஜாவின் பாலைவனம்
சோலைவனம் ஆகும்.
ஆணவ மோகத்தில்
அதிகார வேகத்தில்
காற்றுக்குத்
தலைசாயும்
பயிர்களைப் போல்
காதலையும் நினைத்து விட்டேன்;
பேராசிரியரே!
நீங்களாவது
பேசக் கூடாதா...?


(பேராசிரியர் அமைதியாக ஊரைவிட்டு வெளியேறுகிறார். ராணியும் அவரோடு செல்கிறாள்.)

குரல் :—

காலதேவனே!
இனியாவது
காதலை வாழவிடு!
உனது—
மரண வாசலை
மூடிவிடு!

—திரை—

☆



"புதுக்கவிதையின் ஆசான்"
—அமைச்சர் பாராட்டு

கவிஞர் நா காமராசன் "கறுப்பு மலர்கள்" என்ற புதுக் கவிதைக் காவியம் படைத்ததன் மூலம் தமிழ் மக்களின் பாராட்டினைப் பெற்றவர். தமிழக அரசு ஆண்டுதோறும் கவிஞர்களுக்கு வழங்கி வரும் 'பாவேந்தர் விருதினையும்' பெற்றவர்.

'ஞானபீடம்' மக்களின் இதய பீடங்களை வெற்றி கொள்ளும் விதத்தில் படைக்கப்பட்டிருக்கின்றது.

'ஒரு கிராமத் தேவதையின் வெளி நடப்பு' என்ற நாடகம் ஒரு காதல் காவியமாக மலர்ந்துள்ளது.

இந்திய நாட்டின் பெருமை மிக்க ஞானபீடம் பரிசைப் பெறும் விதத்திலும் கவிதைப் பணி - இலக்கியப்பணி தொடர வேண்டும், உலகத்தின் சிகரத்தை அவர் புகழ் தொட...

இராம. வீரப்பன்

செய்தி-அறநிலையத்துறை அமைச்சர்